
இதழ் 135

# மண்
ERDE

வைகாசி/ஆனி
May/June
2 0 0 9



# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர் வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர் போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்பு
- பசுமைவளத்திட்டம்
- மேதினம்
- செய்திக்கண்ணோட்டம்
- பொன்மாலைப்பொழுது
- தேர்தல் முடிவுகள்
- மனிதத்தின் குரல்கள்
- துயர் துடைப்போம்
- மல்லிகை இதழ்
- ஆதரவற்றோர் நிதிஉதவி
- நூல் அறிமுகம்


## மண்” சஞ்சிகையின் தொடர்புகள்:


| | |
|---|---|
| ஆசிரியர்: | வ.சிவராசா |
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhövel 18a<br>47249 Duisburg |
| தொலைபேசி: | 0203/8073898 |
| தொலைநகல்: | 0203/8073898 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00 |

# எங்கள் கருத்து

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களையே வன்னிப் பிரதேசமாக நாம் அழைக்கிறோம். இலங்கையில் மாறி... மாறி வந்த அரசுகளின் இன அழிப்பு நடவடிக்கைகளாலும் தமிழர்களை வழிநடாத்திய அரசியல் கட்சிகள், இயக்கங்கள், ஆயுதக்குழுக்கள் போன்றவையின் சரியான அரசியல் வழிகாட்டல் துாரநோக்குப் பார்வை இன்மையால் இன்று தாயகத்தில் வாழும் தமிழினம் அழிந்துகொண்டிருப்பதை நாம் நேரடியாகக் காண்கிறோம்... குறிப் பிட்ட மாவட்டங்களில் வாழ்ந்தவர்களும் யாழ் மாவட்டத்தில் வாழ்ந்த ஒரு தொகுதியினரும் வன்னிப் பெருநிலப்பகுதியில் வாழ்ந்து வருகையில் அரச படைகளின் தாக்குதல்களால் ஓட... ஓட விரட்டப்பட்டு இறுதியில் முல்லைத் தீவின் சிறு பிரதேசத்தில் 3லட்சம் மக்கள்வரை வாழ்ந்தபொழுதும் போரின் அகோரத்தால் இதுவரை சுமார் 2லட்சம் மக்கள்வரை அகதிகளாக வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர் 1.1.2009–30.4.2009 வரை 7000மக்கள்வரை பலியாகியி ருப்பதாகவும் 15.000பேர் படுகாயம் அடைந்திருப்பதாகவும், பல்லாயிரம் சிறுவர்கள் தந்தை தாயாரை இழந்து ஆதரவற்றோர் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். பல்லாயிரம்பேர் கணவனை அல்லது மனைவியை இழந்து பரிதவிக்கின்றனர். பல்லாயிரம்பேர் கை கால் போன்ற அவையங்களை இழந்து வாழவழி தெரியாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.

அரசபடைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் ஒன்று–இரண்டாகி, பத்து–இருபதாகி,ஐம்பது–நூறாகி,நூறு–ஆயிரமாகி,ஆயிரம்–இரண்டாயிரமாக தினமும் உயிரிழப்புகள் பெருகியவண்ணம் இருக்கின்றன. கடந்த 9.5.2009 அன்று மட்டும் 2000 தமிழர்கள்வரை உயிரிழந்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதைவிட அரசபடைகள் சர்வதேச போர்ச்சட்டத்தின் பிரகாரம் தடைசெய்யப்பட்ட இரசாயனக்குண்டுகள் எரிகுண்டுகளைப் பாவித்து மக்களைக் கொல்கிறார்கள். பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்திவிட்டு அந்த வலயத்தில் வசிக்கும் அப்பாவி மக்களையே கொன்று குவிக்கும் ஈனத்தனமான செயல் தொடர்கிறது.

வவுனியா,மன்னார்,திருகோணமலை,யாழ்ப்பாணம் என இடம்பெயர்ந்தோர் நிலையங்களில் அரசு பல நிவாரணப் பணிகள் முன்னெடுத்தாலும் அங்கும் பல சீர்கேடுகள் நிலவுகின்றன. மக்கள் பிச்சைக்காரர்போல் மூன்றுநேர உணவுக்கே கையேந்தும் அவலமான பரிதாபமான நிலை இருந்துவருவதாக நேரடியாகச் சென்று பார்வையிட்ட யாழ் ஆயர் தெரிவித்துள்ளார். இதைவிட உறவினர் நண்பர்கள் சென்று பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளெனச் சந்தேகிக்கப்படும் இளம் ஆண்கள் பெண்கள் தென்னிலங்கைச் சிறைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு அடைக்கப்படுவதும் பாலியல் மற்றும் கொடுமைகள் சித்திரவதைகளுக்கு அரச படைகளால் உட்படுத்தப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுவருகின்றன. இதைவிட சிறுவர்களின் கல்வி முற்றாகப் பாழாகிப் போயுள்ளது. மேலும் பெண்களின்

உடைகள் அத்தியாவசிய உடைகள் இல்லாமல் அல்லல்ப்படுகிறார்கள். மற்றும் உணவு,மருந்து,குடிநீர்,குடியிருப்பு வழங்கல்களிலும் சீர்கேடுகள் நிலவுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. பல வெளி நாட்டுப்பிரதி நிதிகள் நேரடியாகச் சென்று இந்த நிலையங்களைப் பார்வையிட்டும் குறைபாடுகள் தீர்ந்தாக இல்லை.

இலங்கை அரசு எடுத்துவரும் இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசும் போர்த்தளபாடங்கள்,ஆளணிஉதவிகள், நிதி உதவிகளை வழங்கி தன் நலன்களைப் பாதுகார்த்து வருகின்றது. இந்திய மத்தியஅரசில் மாற்றம் வரும்... தமிழருக்குத் தமிழீழம் கிடைத்துவிடும் எனச்சிலர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். பிரசாரமும் செய்கிறார்கள். தமிழீழத்தைப்பெற இந்தியாவையோ, தமிழகத்தையோ நாம் இனிமேலும் நம்புவோமானால் அவை பகல்க்கனவாகவே முடியும். இந்தியத் தேர்தல் முடிவுபெற அவர்கள் கூறிய பொய்ப்பரப்புரைகளும் காற்றோடு கலந்துவிடும் என்பதே உண்மையாகும்.. மேற்குலகம்,ஐரோப்பிய ஆணையம்,ஐக்கிய நாடுகள் தாபனம்,மனித உரிமை தாபனம்,சர்வதேச மன்னிப்புச்சபை, ஐக்கியநாடுகள் சிறுவர் தாபனம், அகதிகள் தாபனம் எனப்பல தாபனங்கள் உயிருடன் இருந்தும் நம் நாட்டின் குண்டுத் தாக்குதல்களையும் மனித அழிவுகளையும் மனிதஉரிமை மீறல்களையும் தடுத்து நிறுத்த முடியாத நிலை தொடர்ந்தே வருகின்றன. நம்நாட்டின் இனப் படுகொலைகள் மேலும் தொடருமானால் தமிழர் என்ற இனமே அழிந்தொழிந்து போகும் நிலை அண்மித்துக் கொண்டிருப்பதுபோல் தென்படுகின்றது.

சின்னஞ்சிறிய நாய்,பூனை,பறவைகளுக்குக்கூட சுதந்திர உரிமை கொடுத்து, உயிர்ப்பாதுகாப்புக் கொடுத்து வாழவைக்கும் மேற்குலக நாடுகளும் மேற் குறிப்பிட்ட தாபனங்களும் எங்கள் நாட்டில் அழியும் மனித உயிர்களைத் தடுத்து நிறுத்த இலங்கை அரசுக்கு அழுத்தங்கொடுக்கத் தயக்கம் காட்டுவது ஏன்!... நம் தேசத்தைப்போல் பல நாடுகளில் மனித உயிர்கள் அநியாயமாக அழிந்தொழியும் நிலை அதிகரித்துவருவதை இந்த வல்லாதிக்க நாடுகள் தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்... ஆயுத விற்பனையும் பணக்குவிப்பிலுமே அக்கறையாக இருக்கிறார் கள் என்பது உண்மையாகும். புலம்பெயர் தேசங்களில் நம்மவர்களால் தொடரும் போராட்டங்கள் மாதங்களையும் தாண்டியுள்ளன. உண்ணாநிலைப்போராட்டம், வீதிமறியல், மனிதச்சங்கிலி ஆர்பாட்டம்,ஊர்வலம் போராட்டங்கள் என உலக நாடுகள் அனைத்திலும் நடாத்தியும் இந்த மேற்குலகம் கண்டும் காணாததுமாக இருந்துவருவது புலம்பெயர் தேசத்தின் மக்கள் தமிழ்மக்கள் மத்தியில் பெரும் கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. ஏன் இந்த நிலை..மனித அழிவு தொடர வேண்டுமா!..இலங்கை அரசு உடனடியாகப் போரை நிறுத்தவேண்டும்.. சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும்.தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குரிய தீர்வை முன்வைக்கவேண்டும். புலம்பெயர் தேசங்களில்வாழும் நாம் பாதிக்கப்பட்டுச் சீரழியும் நம்மக்களின் துயர்போக்கிட சகலவழிகளிலும் உதவிடவேண்டும். என்பதைப்புரிந்து நாம் செயலாற்றவேண்டும். போர் உடனடியாக நிறுத்தப்பட்டுச் சமாதானம் சகவாழ்வு எட்டப்படவேண்டும் என்பதே இன்றைய தேவையும். யதார்த்தமுமாகும்.

**–ஆசிரியர்–**



## சிறுவர் வட்டம்

## புது மாணவி

அந்த அழகிய பாடசாலைக்குள் வேணி புது மாணவியாக நுழைகிறாள். பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த பாடசாலையில் அவள் மட்டும் தன் பாதச்சுவடுகளை மெது மெதுவாக எடுத்து வைத்தபடியே வகுப்பறைக்குள் நுழைகிறாள். அனைவரும் அவளை வியப்போடு பார்த்தனர். அவளோ அதனை அலட்சியம் செய்தபடியே ஒவ்வொருவரின் முகங்களையும் பார்க் கின்றாள். அத்தனையும் பரீட்சையமற்ற முகம். ஆனால்... ஆனால்... அதற்குள்ளும் அவளுடன் பலகாலம் பழகிய உணர்வோடு ஒருத்தி வகுப்பறையின் ஓரத்தில் அமர்ந்தபடி விழியை இமைக்காமல் வேணியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வேணியும் தன் விழிகளை அவ்விடத்திலே நிறுத்தினாள்.

அவள் தன் இமைகளால் வேணியை அழைக்கின்றாள்.அனைவரிலும் அவளின் அன்பான கண்ணசைவு வேணியின் படபடத்த இதயத்திற்கு ஆறுதல் அளித்தது. சற்று நடையை வேகப்படுத்தி அவளின் அருகில் சென்று அமர்ந்தாள். அவளோ வேணியின் இரு கைகளையும் தன் கைக்குள் போட்டுக்கொண்டே ''உன் பெயர் என்ன'' என்றாள். வேணி... வேணி... அவளை அறியாமலே அவளது உதடுகள் இரு தடவைகள் உச்சரித்தன.

அப்போது அவள் தன் புன்னகையை உதிர்ந்தபடியே''என் பெயர் அனுஷா'' எனத்தன்னை அறிமுகப்படுத்தியபடியே வேணி நீ புது மாணவி என்று நினைக்கத் தேவையில்லை என முடிப்பதற்குள்ளே... இவ்விடத் திலுள்ள அனைவரும் பாடசாலைக்கு முதற்தடவையாக வரும்போது புது மாணவர்களாகத்தான் வந்தார்கள் அதனாலே நீ யாரைப் பார்த்தும் பயப்படத் தேவையில்லை என அனுஷா முடிப்பதற்குள்ளே வேணியின் கண்களில் இருந்து நீர் கொட்டியது. அது வெற்றுக்கண்ணீர் அல்ல ஆனந்தக்கண்ணீர் வேணி கண்ணீரைத் துடைத்தபடியே மனதில் இவ்வாறு நினைத்தாள்.''புதுப்பாடசாலைக்குச் செல்லும் ஒவ்வொரு மாணவருக்கும் உன்போன்ற தோழி!... கிடைத்தால் என எண்ணியபடி இறைவனுக்கு நன்றி செலுத்தினாள்...

**செல்வி. கஜேனி பொன்னம்பலம்**
**ரூத் பெண்கள் இல்லம்**
**கிளிநொச்சி**

# எங்கள் பாடசாலையில் நடந்தது

## இரும்புச் சத்து:-

அறிவியல் பாட வேளை ஆசிரியர் நுழைந்ததும் ஒரு மாணவன் எழுந்து நின்று''சார் நேற்று நடத்திய பாடத்தில் ஒரு சந்தேகம்''என்று கேட்டான். என்ன சந்தேகம் என்று ஆசிரியர் கேட்டார். ஆசிரியர் நேற்று முருங்கைக் கீரையில் இரும்புச்சத்து அதிகம் என்று சொன்னீர்கள் சேர்!...ஆனால் வீட்டில் காந்தத்தை எடுத்து முருங்கை இலையில் வைத்தேன் அது ஒட்டவே இல்லை.''அப்ப இரும்புச்சத்து இல்லை என்றுதானே அர்த்தம்!...என்றான். ஆசிரியரும் எங்களுடன் சேர்ந்து சிரித்தார். பிறகு''புதுப்பாடம் எடுக்கலாம் என்று வந்தால் இப்படியாகக் கேள்வி கேட்டுத் தொல்லை படுத்துகிறியே!...என்றார். கேள்வி கேட்டவன் பாவம்போல் உட்கார்ந்திருந்தான்..

## இரட்டைக்கிளவி:-

தமிழ் ஆசிரியர் இலக்கணப் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை எழுப்பி ''இரட்டைக் கிளவிக்கு உதாரணம் சொல்'' என்றார். உடனே அவன்''கறுப்பாயி''புள்ளியாச்சி''என்றான். நாங்கள் சிரிக்க ஆசிரியர் ''நான் என்ன கேட்டேன் நீ என்ன பதில் சொல்கிறாய்'' என்றார். யாரிடமாவது கேட்டுப்பாருங்கோ சேர்...எங்கட வீட்டில் இரட்டைக் கிழவிகள் இருக்கிறார்கள் என்றான்... வேடிக்கை பார்த்ததுமல்லாமல் இப்படி ஒரு விளக்கம் வேற கொடுக்கிறியே!...ஐம்பது தடவை இரட்டைக் கிளவிக்கு உதாரணம் எழுதிக்கொண்டு வரவேண்டும் என்றார் ஆசிரியர்... வகுப்பே சிரிப்பில் கலகலத்தது.

## கண் தெரியுமா:-

ஆந்தைகளைப்பற்றிப் பாடம் நடத்தி முடித்துவிட்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் ஆசிரியர். என் நண்பனிடம்''ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா''என்று கேட்டார்.''எனக்குத் தெரியலை சேர் என்றான்''உனக்குத் தெரியுமென்று நான் கேட்கவில்லை. ஆந்தைக்குத் தெரியுமா!..என்று மீண்டும் கேட்டார்.''சேர் எனக்குப் பதில் தெரியவில்லை என்று சொன்னேன்... என்றான்.'' ஒழுங்கா கவனிச்சிருந்தாதானே பதில் சொல்லமுடியும் உட்கார்!.. என்றார் ஆசிரியர் கோபத்துடன். நாங்கள் சிரித்துவிட்டோம்!...

# எங்கள் ஊரில் நடந்தது

## விஷம்:–

எனது தம்பிக்கு வயது மூன்று வயது. ஒரு நாள் நான் மளிகைச்சாமான்கள் வாங்கக் கடைக்குச் செல்லும் போது அவனும் என் கூடவே வந்தான். அண்ணா எனக்கு இனிப்பு வாங்கித்தா என்றான். இனிப்புச் சாப்பிட்டால் சொத்தைப் பல் வரும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு ''இனிப்புச் சாப்பிடக்கூடாது அது விஷம்'' என்று கூறினேன். அவனும் பேசாமல் இருந்துவிட்டான். மறுநாளும் நான் கடைக்குச் செல்ல அவனையும் என்னுடன் அழைத்துச் சென்றேன். எனது வாய் நமநம என்று இருந்ததால் ஒரு புளிப்பு இனிப்பை வாங்கிச் சாப்பிட்டேன். பின்னர் அவனை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். அவன் நேராக அம்மாவிடம் சென்று''அம்மா'' அண்ணன் விஷம் சாப்பிட்டுவிட்டான்''என்று கூற பதற்றமடைந்த முகத்துடன் அம்மா ஓடிவந்து தம்பி சொன்னது உண்மையா!..என்று கேட்டாள். அம்மாவிடம் நான் நடந்ததை விளக்கியதும் ஒரே சிரிப்புத்தான்...

## தொடாமல் வா:–

என் நண்பனுக்கு மூக்கில் அடிபட்டிருந்தது. அதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி மருத்துவமனை சென்றான். டாக்டர்''நாளை காலை பத்து மணிக்கு அறுவைச் சிகிச்சை வைத்துக் கொள்ளலாம் என்றார். அத்தோடு சாப்பிடாமல் வரவேண்டும்'' என்று சொல்லி அனுப்பினார். நண்பன் அதை அப்படியே அர்த்தம் எடுத்துக்கொண்டு காலையில் அப்பா கூறியும் கேட்காது பல் கூட விளக்காமல் மருத்துவமனைக்குச் சென்றான். அனைவரும் அவனைப் பார்த்துச் சிரித்தனர். பல் துலக்கி முகம் கழுவி வரச்சொல்லி டாக்டர் அனுப்பி விட்டார்.அப்புறம்தான் அறுவை சிகிச்சை நடத்த ஆயத்தம் செய்தனர். இன்றும் கூட காலையில் பல் துலக்கச் செல்லும் போது நண்பன் நடந்து கொண்டதை எண்ணி எங்களுக்குச் சிரிப்பு வந்து விடுகிறது.

# விஞ்ஞான விளக்கம்

## மனிதனின் மூளை:–

உடல் நிறையில் மனிதனின் மூளை 1%48 பாகம். யானைக்கு 1%600 பாகம். திமிங்கலத்திற்கு 1%3000 பாகம். உடலையும் மூளையையும் ஒப்பிடும் போது அதிக எடையுள்ள மூளையைக் கொண்டிருப்பது மனிதன்தான்..சாதாரண மனிதனின் மூளையின் எடை சுமார் 1.4 கிலோவாகும்.

## மாற்று இதயம்:–

மாற்று இதயம் மாற்று சிறுநீரகம் பொருத்திக் கொண்டவர்கள் அதிககாலம் உயிர் வாழ முடியாதென்று சொல்லப்படுவது தவறாகும் மாற்று சிறுநீரகம், இதயம் பொருத்தியவர்கள் அதிக காலம் உயிர் வாழலாம் என வைத்திய உலக ஆய்வறிக்கை எடுத்துக் கூறியுள்ளது.

## குடற்புண்:–

சிலருக்குக் கார உணவு சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாகின்றது. இதை அல்சர் என்கிறார்கள். இந்த அல்சர் உண்டாகக் காரணம் என்ன...கார உணவு, நேரம் தவறிய உணவு, அதீத உணவு, அசைவ உணவு. இன்னொன்று அடிக்கடி சாப்பிடப்படும் வலி நிவாரண மாத்திரைகள், புகைப்பிடித்தல், மதுப்பழக்கம் போன்ற காரணங்களாலும் அல்சர் வருவதற்கு காரணமாகலாம். ஹை–பைலோரி (H-Pylori) என்ற கிருமி இரைப் பையில் குடிபுகுந்தால் அல்சர் நிட்சயம். எனவே மேற் கூறிய காரணங்களைத் தவிர்ப்பதே சிறந்த வழி

## தண்ணீர் கொடுப்பது:–

தீப்பிடித்து எரிந்த, வெந்த நிலையில் இருப்பவர்களுக்கு தண்ணீர் கொடுத்தால் உயிர் பிரிந்துவிடுமா!..இதைத்தவிர்க்க வேறு வழிகள் உண்டா!.. தீப்பிடித்து எரிந்தோ அல்லது வெந்த நிலையில் உள்ளவர்களுக்கு சுயநினைவு இருந்தால் தாராளமாகக் குடிக்கத் தண்ணீர் கொடுக்கலாம். தவறில்லை. சுயநினைவின்றி இருக்கும் போது குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் அவர்களால் தண்ணீரை விழுங்கமுடியாது. மூச்சுக் குழாய்க்குள் தண்ணீர் சென்று மூச்சை நிறுத்திவிடும். இதற்கு மாற்று வழி சிரைக்குழாய் (VEIN) வழியாக குளுக்கோஸ் சலைன் மற்றும் ரிங்கர்ஸ் லேட்டேட் போன்ற நீர்மங்களை ஏற்றுவதுதான் சிறந்தவழி.


## எத்தனை வகை ,,பு"

01) மனிதன் புகழும் பு – சிறப்பு
02) மலர்ச்சியில் வரும் பு – சிரிப்பு
03) காலையில் வரும் பு – விழிப்பு
04) கோபத்தில் வரும் பு – வெறுப்பு
05) சந்தோஷத்தில் வரும் பு – கிளுகிளுப்பு
06) குற்றம் புரிந்தால் வரும் பு – குறுகுறுப்பு
07) பிடிக்காததைச் செய்யும் பு – முணுமுணுப்பு
08) மனிதன் பேணவேண்டிய பு – மதிப்பு
09) சிறுவர் செய்யும் பு – குறும்பு
10) பயத்தினால் வரும் பு – படபடப்பு
11) எல்லோருக்கும் தேவையான பு – அன்பு
12) துணையைக் காணும்போது வரும் பு – தவிர்ப்பு
13) இதயத்திலுள்ள பு – துடிப்பு
14) உயர்ச்சிக்கு உதவும் பு – உழைப்பு
15) மனிதனிடையே காணவேண்டிய பு – பண்பு
16) ஆசையினால் வரும் பு – அங்கலாய்ப்பு
17) மற்றவரைக் குறிக்கும் பு – கணிப்பு
18) மனதைக் கவரும் பு – வனப்பு
19) கட்டாயத்தை கூறும் பு – திணிப்பு
20) காயங்களினால் வரும் பு – வலிப்பு
21) காரமான பு – உறைப்பு
22) சமையல் அறையில் உள்ள பு – அடுப்பு
23) சுவைதரும் பு – உப்பு
24) ஒளிதரும் பு – லாம்பு
25) பாதங்களைக் காக்கும் பு – செருப்பு
26) சோதிடர் எழுதும் பு – குறிப்பு
27) படகோட்டியிடம் உள்ள பு – துடுப்பு
28) மானம் காக்கும் பு – உடுப்பு
29) கன்னியர்க்கு கவர்ச்சி கொடுக்கும் பு– இடுப்பு
30) வயலில் உள்ள பு – வரம்பு
31) எமனிடம் உள்ள பு – அழிப்பு
32) இருட்டில் தோன்றும் பு – கறுப்பு
33) வீட்டைத் தாங்கும் பு – கப்பு
34) இரத்தத்தில் வரும் பு – சிவப்பு
35) பதவியில் கிடைக்கும் பு – பொறுப்பு
36) அடி தடிக்கு உதவும் பு – கம்பு
37) கதவைத் திறக்க உதவும் பு – திறப்பு
38) நாய்க்குப் பிடித்த பு – எலும்பு
39) சுறுசுறுப்பான பு – எறும்பு
40) தேனில் உள்ள பு – இனிப்பு



**செல்வி இ. சிந்துகா**
**ஜேர்மனி (நன்றி ''அரும்பு'' சஞ்சிகை)**

## பலவிதமான ,,கம்" கள்



01) வானத்தில் இருக்கும் கம் எது – மேகம்
02) இசையில் இருக்கும் கம் எது – ராகம்
03) நாவில் இருக்கும் கம் எது – தாகம்
04) அணிவதில் இருக்கும் கம் எது – தங்கம்
05) பறவைகளில் இருக்கும் கம் எது – காகம்
06) பாம்புகளில் இருக்கும் கம் எது – நாகம்
07) அனைவரும் சொல்லும் கம் எது – வணக்கம்
08) நமக்குச் சொந்தமான கம் எது – தாயகம்
09) நாம் செய்யவேண்டிய கம் எது – தியாகம்
10) எல்லோரும் படிக்கும் கம் எது – புத்தகம்

செல்வன் சி. துலக்ஷன்
யாழ்ப்பாணம்

## தெரிந்து கொள்வோம்

01) உலகில் முதலாவது துவிச்சக்கரவண்டி 1839ல் இங்கிலாந்தில் தயாரிக்கப் பட்டது.
02) உலகில் முதலாவது தொலைக்காட்சி நிகழ்ச்சி 27–01–1928ல் இங்கிலாந்தில் ஒளிபரப்பப்பட்டது.
03) உலகின் முதற் புகையிரதம்''ட்றைவித்திக்'' என்ற ஆங்கிலேயரால் 1801ல் அமைக்கப்பட்டது.
04) உலகில் முதன்முதலாக பெற்றோலில் இயங்கும் மோட்டார்வண்டி 1885ல் ''பென்ஸ்'' என்ற ஜேர்மனியரால் உருவாக்கப்பட்டது.
05) உலகிலே முதன் முதலாக இஸ்லாமிப் பெண் நாட்டின் ஆட்சித்தலைவராக பாக் கிஸ்தானில் பெனாசிஸ் பூட்டோ 1988ல் பிரதமரானார்.
06) உலகின் முதன் முதலாக பெண் நீதிபதியாக 1878ல் பணியாற்றியவர் ''எஸ்தர்மேரிஸ்'' என்றஅமெரிக்கப் பெண்மணியாவர்.
07) உலகின் முதலாவது பெண் ஜனாதிபதியாக 1974ல்''மரியாஸ்டெலா பெரொன்'' ஆர்ஜன்டினா நாட்டில் பதவி வகித்தார்.

**செல்வன் ஜெ. நிறோஜன்**
**யாழ்ப்பாணம்**

# ஆத்திசூடி விளக்கம்

## நொய்ய உரையேல்:-

சொல்லும் செயலும் பயனுடையதாக இருக்கவேண்டும். தானிய மணி இல்லாத நெல்லை யார் விரும்புவார்கள். அதனால் யாருக்கு என்ன பயன்!..பதர்களைப் போலவே பயனில்லாத பேச்சுக்களைச் சிலர் பேசுவார்கள். இவர் பேச்சினால் பிறருக்குப் பலன் ஏதுமிருக்காது. பயன்தரும் வார்த்தைகளையே கூறவேண்டும். பயனற்ற வீண் சொற்களைத் தவிர்க்கவேண்டும். தவிர்க்காமல் வீண் சொற்களைக் கூறினால் உங்களை''வீணர்கள்''என்று பிறர் இகழ்வார்கள். யாரும் மதிக்கமாட்டார்கள். அலட்சியப்படுத்துவார்கள். இந்த அவமதிப்பினால் பிறரிடமிருந்து நீங்கள் ஒதுக்கப்படுவதினால் உங்கள் வாழ்க்கை பாழாகும். ஆகவே ஔவையார் கூறுகிறார்''நொய்யஉரையேல்'' (நொய்ய–அற்பமான சொற்கள்)

## நோய்க்கு இடம் கொடேல்:-

வயிற்றுவலி, கண்வலி,பல்வலி இப்படியான நோய்களினால் நீ அவதிப்படுகிறாயே ஏன்!...கண்ட தின் பண்டங்களைச் சாப்பிடுகிறாய். உண்ணும் உணவிலும், வேளையிலும் ஒரு நியதி இல்லை அதனால் வயிற்றுவலி. விடாமல் சினிமா பார்க்கிறாய். காரண மில்லாமல் கண் விழிக்கிறாய். உறக்கத்தில் ஓர் ஒழுங்கு இல்லை.அதனால் கண்வலி. உண்டபிறகு ஒழுங்காகப் பல் துலக்கு வதில்லை. இனிப்புப் பண்டங்களை எல்லைமீறிச் சாப்பிடுகிறாய். அதனால் பல் வலி. இப்படி நியதி, ஒழுங்கைக் கடைப்பிடிக்காமல் நோய்க்கு இடம் தரக்கூடாது. அசட்டையாக இருந்தால் தீராத வியாதியாகி உயிருக்கே ஆபத்து ஏற்படும். ஆகவே உன் உடலில் நோய்கள் உருவாவதற்கு நீயே இடமளிக்காதே...

## மாணவமணிகளே!.... நீங்களும் ஓவியராகலாம்!...

மாணவமணிகளே நீங்களும் ஓவியராகலாம்.. உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். மண் சஞ்சிகையில் பிரசுரித்து மகிழுங்கள். உங்கள் கற்கனைக்கு எட்டிய படங்களோ..அல்லது நீங்கள் பார்த்துக் கீறிய படங்களோ...அல்லது உங்களுக்குப் பிடித்த படங்களாயினும் நீங்களாகப் படம் வரைந்து வர்ணம் தீட்டிச் சிறிய அளவிலான (15ஒ10) படங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்..மண் சஞ்சிகையில் பிரசுரித்து மகிழுவோம்.

நீங்கள் வரைந்து வர்ணம் தீட்டி அனுப்பும் படங்களோடு உங்கள் பெயர், பிறந்ததிகதி, வயது, முகவரி என்பவற்றை தவறாது குறிப்பிடல்வேண்டும். தயவு செய்து இன மத நிற வன்முறைகளைத் சித்தரிக்கும் அல்லது கேவலப்படுத்தும் படங்கள் வரைதலை தவிர்த்துக் கொள்ளுங்கள்..

எனவே நீங்கள் வரைந்து வர்ணம் தீட்டி எமது முகவரிக்கு ஒவ்வொரு மாதமும் 25ம் தேதிக்கு முன்னராக அனுப்பி வையுங்கள்..அடுத்த மண் இதழில் உங்கள் கை வண்ணங்களும் மண் சஞ்சிகையை அலங்கரிக்குமல்லவா!..ஆகவே மாணவ மணிகளேமுயற்சிசெய்யுங்கள்!...பயன்பெறுங்கள்!..பாராட்டுப்பெறுங்கள்!.மாணவ மணிகளே நீங்களும் எதிர் காலத்தில் சிறந்த ஒரு ஓவியராகலாம்...

—ஆசிரியர்—



## மாணவ மணிகளே!...


மண் சஞ்சிகையில் எழுதிய, எழுத!வரும் மாணவ மணிகளே!..உங்கள் எழுத்துப் பணியையும், தேடலைம், அறிவையும் வளர்த்தெடுக்கும் பணியில் மண் சஞ்சிகை கடந்த பல ஆண்டுகளாக சேவை புரிந்துவருவதை நீங்கள் அறிவீர்கள்!..
வளர்ந்துவரும் இளம் சமுதாயத்தினரின் கல்வி,கலை,இலக்கிய, எழுத்து, அறிவியல் வளர்ச்சியின் நோக்கில் உங்களிடம் அன்பான வேண்டுகோள்!.. தொடர்ச்சியாகப் போட்டிகளில் பங்குகொள்ளுங்கள், எழுதுங்கள். அதாவது குட்டிக்கதைகள். கண்டுபிடிப்புகள், அறிவியல் விடையங்கள், அனுபவக் குறிப்புகள், படித்துச்சுவைத்த விடையங்கள் இப்படிப் பல ஆக்கங்களைத் தொடர்ச்சியாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
தொடர்ச்சியாக எழுதும் மாணவமணிகளுக்கு மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழாவில் (2010 ஜனவரி) சிறப்புப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஆசிரியர்-

# வினாவிடைப் போட்டி முடிவு – 124

## பங்குனி – சித்திரை 2009

1. இலங்கை வடகிழக்கிலுள்ள மாவட்டங்கள்:–
வவுனியா மன்னார்
முல்லைத்தீவு கிளிநொச்சி
யாழ்ப்பாணம் திருகோணமலை
அம்பாறை மட்டக்களப்பு



2. உலகில் தமிழர்கள் அதிகமாக வாழும் பத்து நாடுகள்:–
இலங்கை இந்தியா
சிங்கப்பூர் மலேசியா
பிரான்ஸ் பிரித்தானியா
ஜேர்மனி அவுஸ்த்திரேலியா
கனடா தென்னாபிரிக்கா.

3. ஸ்கன்டிநேவியன் நாடுகள்:–
டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லாந்து.

4. நுணுக்குக்காட்டியை (Microscope) கண்டுபிடித்தவர் ஜான்ஸன். இவர் நெதர்லாந்து நாட்டவர். 1590ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

5. ஆண்பால் பெண்பால் பலவின்பால் சொற்கள்:–

| ஆண்பால் | பெண்பால் | பலவின்பால் |
|---|---|---|
| கண்ணன் | இலட்சுமி | மக்கள் |
| மாணவன் | மாணவி | மாணவர்கள் |
| கவிஞன் | கவிதாயினி | கவிஞர்கள் |
| ஆசிரியன் | ஆசிரியை | ஆசிரியர்கள் |
| வேடன் | வேடுவிச்சி | வேடர்கள் |

6.

| பிரித்தெழுதுதல் | சேர்த்தெழுதுதல் |
|---|---|
| மணியோசை=மணி+ஓசை | தமிழ்+பாடம்=தமிழ்ப்பாடம் |
| நாட்காட்டி=நாள்+காட்டி | சீனி+கிழங்கு=சீனிக்கிழங்கு |
| மரக்கப்பல்=மரம்+கப்பல் | கண்+மணி=கண்மணி |
| சுவரோவியம்=சுவர்+ஓவியம் | பேச்சு+போட்டி=பேச்சுப்போட்டி |
| மழைத்துளி=மழை+துளி | வீடு+தோட்டம் =வீட்டுத்தோட்டம் |

# வினாவிடைப் போட்டி – 125

## வைகாசி – ஆனி 2009

1. இலங்கையில் வசிக்கும் மதத்தவர்கள் அதிகமாகவாழும் ஐந்து இடங்களின் பெயர்களை எழுதுக:–

| பௌத்தர்கள் | இந்துக்கள் | இஸ்லாமியர்கள் | கத்தோலிக்கர்கள் |
|---|---|---|---|
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |
| ...................... | ...................... | ...................... | ...................... |

2. இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பிரதான ஆறு பொருட்களின் பெயர்களை எழுதுக:–

................................ ................................
................................ ................................
................................ ................................

3. G-8 அழைக்கப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக:–

................................ ................................
................................ ................................
................................ ................................
................................ ................................

4. இழுப்பொறி (றைக்ரர்) இதைக் கண்டுபிடித்தவர் பெயர் என்ன?... எந்த நாட்டவர்?... எத்தனையாம் ஆண்டு கண்டுபிடித்தார்?

5. எதிர்க்கருத்துச் சொற்கள் ஒத்தகருத்துச் சொற்கள் எழுதுக:–

| எதிர்க்கருத்துச் சொற்கள் | | ஒத்தகருத்துச் சொற்கள் | |
|---|---|---|---|
| இறங்கு | – .................. | ஆண்டு | – .................. |
| பகல் | – .................. | மணம் | – .................. |
| உள்ளே | – .................. | விந்தை | – .................. |
| காலை | – .................. | சந்திரன் | – .................. |
| உண்மை | – .................. | தொடக்கம் | – .................. |

6. பின்வருவனவற்றுள் வேறுபடும் சொல்லின் கீழ் கோடிடுக.
சந்திரன், நிலா, மதி, சூரியன்
தினசரி, நாள்தோறும், மாதாந்தம், நித்தம்
உலகம், பூமி, ஆகாயம், வையம்
அழகு, நன்மை, எழில், வனப்பு
வீடு, முற்றம், மனை, இல்லம்

முடிவுதிகதி: 25–06–2009

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி முடிவு – 51

பங்குனி – சித்திரை 2009

| | | | |
|---|---|---|---|
| இ | ல | ங் | கை |
| ல் | க | ப | லி |
| ல | ட் | டு | ல் |
| ம் | ட | ட் | ப |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி – 52

வைகாசி – ஆனி 2009

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 |
| 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ–வ.–

01-04: மாதங்களில் ஒன்று.

09-11: மலர்களில் தேன் குடிப்பது.

வ–இ:–

07-05: இது இல்லாவிடின் நாம் உயிர்வாழமுடியாது.

15-14: மனிதருக்கு இருக்கும் இயல்பான குணம் ஒன்று.

கீ–மே:–

15-11: மிருகம் ஒன்று.

16-04: கீரை வகைகளில் ஒன்று.

மே–கீ:–

01-13: மண் சஞ்சிகையில் இவர்களுக்கு ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

07-11: இவற்றை அழிப்பதால் சுற்றாடல் சூழலுக்குத் தீங்கு ஏற்படுகிறது.

முடிவுதிகதி: 25–06–2009

# சிறுவர் போட்டி முடிவுகள்
**(பங்குனி–சித்திரை 2009)**

## பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்!....

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வன். | ஜோய்ஷியாந்–எமில்சர்வானந்தன் | - Blieskastel | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | ஜானெக்–எமில்சர்வானந்தன் | - Blieskastel | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | மிதுன்–சுதாகரன் | - Straelen | ✓ | ❖ | ❖ |
| செல்வன். | வியாசன்–செல்வராசா | - Catropprauxel | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | அஜிதரன்–பாலச்சந்திரன் | - Goch | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | அருந்–பாலச்சந்திரன் | - Goch | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | அர்ஜுன்–ராம்குமார் | - London | ✓ | ❖ | ✓ |
| செல்வன். | பானுஸ்கந்தா–புவனேந்திரன் | - Duisburg | ✓ | ✓ | ✓ |
| செல்வன். | ஜோகான்–ஜீவரத்தினம் | - Böblingen | ✓ | ❖ | ❖ |
| செல்வன். | ஜெனீதன்–பிரபாகரன் | - Oberhausen | ❖ | ❖ | ✓ |
| செல்வன். | பிரதீஷ்–கமலநாதன் | - Swiss | ✓ | ❖ | ✓ |
| செல்வன். | ஆரூரன்–ஜெயகுமார் | - Aldenhoven | ✓ | ✓ | ❖ |
| செல்வி. | தரணிகா.சோமஸ்கந்தராசா | - Swiss | ✓ | ❖ | ❖ |
| செல்வி. | துவாரகா.சோமஸ்கந்தராசா | - Swiss | ✓ | ❖ | ❖ |
| செல்வி. | சமீனா.திருக்குமார் | - London | ✓ | ❖ | ✓ |
| செல்வி. | பானுரதி.புவனேந்திரன் | - Duisburg | ✓ | ❖ | ❖ |
| செல்வி. | பைரவி.ஜெயகுமார் | - Aldenhoven | ✓ | ✓ | ✓ |
| செல்வி. | அன்ஜா.இம்மானுவல் | - Münster | ✓ | ❖ | ✓ |
| செல்வி. | டன்ஜா.இம்மானுவல் | - Münster | ✓ | ❖ | ✓ |

**கண்டுபிடியுங்கள் போட்டியில் பரிசு பெறுபவர்:–**
**செல்வி. தரணிகா–சோமஸ்கந்தராசா** - Swiss

**வினாவிடைப்போட்டியில் பரிசு பெறுபவர்:–**
**செல்வன். பிரதீஷ்–கமலநாதன்** - Swiss




**சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெறுபவர்:–**
**செல்வி. அன்யா–இம்மானுவல்** - Münster

போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்துச் சிறார்களுக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்!... தொடர்ச்சியாகப் போட்டிகளில் கலந்துகொள்ளுங்கள்... அறிவு ஆற்றலை வளர்த்துக்கொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..

# விஜயலஷ்மி ஞாபகார்த்த சிறுவர் கழகம்
# கீல் நகர் – ஜேர்மனி
Vijayaluxmi Memorial Children's Club Kiel/Germany

## திருவள்ளுவர் விழா – 2008

மேற்படி சிறுவர்கழகத்தினால் நடாத்தப்பட்ட திருக்குறள் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி ஆக்கங்கள், மனனம் மற்றும் நிகழ்ச்சிகளைச் சிறப்புற ஊக்கமளித்த சிறார்கள்:

**மாணவர் பிரிவு:**

செல்வி. மயூரணி சண்முகரத்தினம்
Miss. MAYURANI SHANMUGARATNAM
ERDGRABEN WEG - 63
47652 WEEZE> GERMANY
பிறந்ததிகதி: **30.07.1995**
Tel: 02837/ 669639



"ஒழுக்கமுடைமை" பற்றி 6 குறட்பாக்களை உறுப்பாக எழுதியுள்ளார். திருவள்ளுவரது உருவப்படத்தை மிகவும் அழகாக வரைந்துள்ளார். திருவள்ளுவர் பற்றிய சிறப்பான தகவல்களையும் வழங்கியுள்ளார். மேலும் இவரது ஆராய்ச்சிகள் தொடர்ந்து வளம்பெறவேண்டுமென வாழ்த்துகின்றோம். மனனம் பண்ணிய திருக்குறட் பாக்களைத் திறமாக ஒப்புவித்தமைக்கு எமது நல்லாசிகள்.

செல்வி. சுபாங்கி ரவீந்திரநாதன்
Miss.SUBANKI RAVEENDRANATHAN
TOPPHEIDE WEG - 16
48161 MÜNSTER - GERMANY
பிறந்ததிகதி: **26.10.1993**
Tel: 0251/1447863



"கடவுள் வாழ்த்து" என்ற அதிகாரத்திலிருந்து 5 குறட்பாக்களை மிகவும் அழகான உறுப்பெழுத்தில் எழுதியும் திருவள்ளுவரது உருவப்படத்தை தனது திறமைக்கேற்ப வரைந்தும் சிறப்பான முறையில் திருக்குறள் பற்றிய கட்டுரை வரைந்தும் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்ததுடன் மனனம் பண்ணிய திருக்குறட்பாக்களை இனிமையான ஓசை நயத்துடன் ஒப்புவித்துள்ளார். முயற்சிகளுக்கு எமது நல்லாசிகள்.

செல்வன். கிரிஜயந் கிருஸ்ணபிள்ளை
Mas. KRIJAYANTH KIRISHNAPILLAI
CHARLESROSS - RING - 40
24106 KIEL - GERMANY
பிறந்ததிகதி: **18.11.1991**
Tel: 0431/ 8880071



**2006ம்** வருடம் நடந்த திருவள்ளுவர் விழாவின்போது திருக்குறள் பாக்களை உறுப்பாக எழுதியதுடன் மனனம் பண்ணி ஒப்புவித்தும் அனைவரதும் பாராட்டையும் பெற்றார். இவரது ஊக்கங்களுக்கு எமது நல்லாசிகள்.

செல்வி. கிறிஸ்ரா கிருஷ்ணபிள்ளை
Miss. KRISTA KRISHNAPILLAI
CHARLESROSS - RING -40
24106 KIEL - GERMANY
பிறந்ததிகதி: **02.02.1994**
Tel: 0431/ 8880071



**2006ம்** வருடம் கீல் நகரில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் திருக்குறட்பாக்களை உறுப்பமைய எழுதியும் மனனம் பண்ணிய குறட்பாக்களை ஒப்புவித்தும் சபையோரை மகிழ்வித்தார். ஒருசிறு கைநூ ல் பெற்றுக்கொண்டதோடு பதக்க மாலையும் அணிவிக்கப்பட்டது. இவரது முயற்சிக்கு எமது நல்லாசிகள்.

செல்வி. அபர்ணா கோணேஸ்வரன்
Miss. APARNA KONESWARAN
BRILONER STR - 40
44575 CASTROP - RAUXEL
GERMANY
பிறந்ததிகதி: **14.06.1991**



''கடவுள் வாழ்த்து'' அதிகாரத்தில் **6** குறட்பாக்களை மிக அழகாக எழுதியுள்ளார். திருவள்ளுவர் பற்றி **10** வரிகளில் சிறப்பாக வர்ணித்துள்ளார். சிறந்த ஆய்வு செய்து விளக்கமாக எழுதியுள்ளார். திருவள்ளுவரது உருவம் உறுப்பமைய அழகாக வரைந்துள்ளார். வரைந்த படத்தை மெழுகு கொண்டு மினுமினுப்பாக்கி மேலும் அழகுபடுத்தியுள்ளார். எமது நல்லாசிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

செல்வி. சுபைதா ரவீந்திரநாதன்
Miss. SUBAITHA RAVEENDRANATHAN
TOPPHEIDE WEG - 16
48161 MÜNSTER - GERMANY
பிறந்ததிகதி: **18.03.1996**
Tel: 0251/ 1447863



திருக்குறள் பற்றி 10 வசனங்கள் அழகான எழுத்தில் எழுதியிருக்கின்றார். வியப்பான திருவள்ளுவர் உருவத்தை வரைந்து எல்லோரதும் மகிழ்ச்சிக்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டார். "கடவுள் வாழ்த்து" அதிகாரத்திலிருந்து 5 குறட்பாக்களை உறுப்பாக எழுதியனுப்பியதோடு அவற்றை மனனம் ஒப்புவிக்கும்போது இனிமையான இசையுடன் கூட்டி ஒப்புவித்தமை போற்றுதற்குரியது. முயற்சிகளுக்கு எமது நல்லாசிகள். தொடரட்டும் உங்கள் சிறப்பம்சங்கள்.

செல்வி.ஸ்ரீயாஷாந்தி பத்மகுணசீலன்
Miss. SRIYASHANTHY PATHMAGUNASEELAN
SANDKRUG - 9
24143 KIEL - GERMANY
பிறந்ததிகதி: **24.11.1985**
Tel: 0431/ 7054330



தமிழிலும் ஜேர்மன் மொழியிலும் திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்திலிருந்து மனனம் ஒப்புவித்ததுடன் உறுப்பாக எழுதியும் தனது திறமையைக் காட்டியுள்ளார். **2006**ம் வருடம் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் சிறுவர்களுக்கான பரிசுப் பொருள்களை தனது பொறுப்பில் கையேற்று அவற்றை வழங்குவதற்கான உதவிகளையும் செய்த பெருமை இவரைச் சாரும். இவரது ஊக்கத்திற்கு நல்லாசிகள்.

செல்வி: ரம்யஷாந்தி பத்மகுணசீலன்
Miss. RAMYASHANTHY PATHMAGUNASEELAN
SANDKRUG - 9
24143 KIEL - GERMANY
பிறந்ததிகதி: **18.12.1988**



திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பிரிவில் 5 குறட்பாக்களை மனனம் பண்ணியும் அவற்றை எழுதியும் ஒப்புவித்தார். சிறந்த உச்சரிப்பு வளம் பொருந்திய இவர் தமிழ், ஆங்கில, ஜேர்மன் மொழிகளை அழகாக இனிமையாக உச்சரிக்கும் திறமை கொண்டவர். இவரது முயற்சிகளுக்கு வாழ்த்துக்கள்.

பிள்ளைகளுக்கு ஊக்கம் கொடுத்த பெற்றோர், உறவினர், ஆசிரியர்மார் அத்தனை பேருக்கும் பிரசுரிக்கும் "மண்" சஞ்சிகை ஆசிரியருக்கும் எனது நன்றிகள்.

க.பத்மகுணசீலன்
ஜேர்மனி

# ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை

(இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய)
Tamilischer Bildungsverein Deutschland e.V. ( Europa )

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

## இருபதாவது ஆண்டு நிறைவு விழா
## ஆசிரியர் கௌரவிப்பு

இடம்: Goethe Gymnasium
Stettiner Str.12,
44263 Dortmund - Hörde

காலம்: **2009.06.27** சனிக்கிழமை மாலை **3.00** மணி

- குத்துவிளக்கேற்றல்
- மௌன அஞ்சலி
- தமிழ் வாழ்த்து
- கல்விச் சேவைக் கீதம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- ஆசிரியர் கௌரவிப்பு
- பரிசளிப்பு
- மாணவர்களின் நிகழ்ச்சிகள் (பல்வேறு பாடசாலைகள்)
  (பாட்டு, பேச்சு, நாடகம், அபிநயப்பாடல், நடனம், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு)
  தமிழ்த் தேர்வின் படிமங்கள்
- பேச்சு
- நன்றியுரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**
**இங்ஙனம்**
**ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை**

## குறளும் பொருளும்

1141–அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

1142–மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

1143–உறாஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறாஅது பெற்றென்ன நீர்த்து.

1144–கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை யிழந்து.

1145–களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

1146–கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

1147–ஊர்வர் கௌவை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்.

1148–நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.

1149–அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீந்தக் கடை.

1150–தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டும்
கேளவை யெடுக்குமிவ் வூர்.

## குறளும் பொருளும்

1141–எம் காதலைப்பற்றி அலர் எழுவதால் என் உயிர் போகாமல் நிற்கின்றது. எம் நல்வினைப் பயனால் அதைப் பலரும் அறியாமல் நானே அறிவேன்.

1142–மலர் போன்ற கண்ணை உடைய இவள் அருமை அறியாமல் இவ்வூரார் அலர் கூறி எமக்கு உதவி செய்தனர்.

1143–இவ்வூரார் எங்கள் காதலை அறிதலால் தோன்றிய அலர் எங்களுக்கு நல்லது. அதைக்கேட்ட என்மனம் அவளை அடையாமலே பெற்றது போல ஆனது.

1144–என் காதல் ஊராரின் தூற்றலால் வளர்வதாயிற்று. அத்தூற்றல் இல்லையானால் அது தன் தன்மை இழந்து சுருங்கிவிடும்.

1145–கள் உண்பவர் மயங்க..மயங்க அக்கள்ளையே விரும்புவது போலக் காதல் தூற்றலால் வெளிப்பட..வெளிப்படஇனிக்கின்றது.

1146–நான் என் காதலரைக்கண்டது ஒரு நாள் தான். அதனால் உண்டாகிய அலரோ திங்களைப் பாம்பு பற்றிய செய்திபோல எங்கும் பரவியது.

1147–இந்தக்காம நோயாகிய பயிர் ஊராரின் தூற்றலே எருவாகவும் அன்னையின் கடுஞ்சொல்லே நீராகவும் கொண்டு செழித்து வளர்கின்றது.

1148–தூற்றுவதால் காதலை ஒழிப்போம் என முயல்வது நெய்யால் நெருப்பை அவிப்போம் என்று முயல்வதைப்போலாகும்.

1149–அஞ்ச வேண்டா என்று உறுதி கூறியவர் பலரும் நாணும் வகையில் பிரிந்தால் அதனால் அலருக்கு நாணி இருக்க முடியுமா.

1150–யாம் விரும்புகின்ற தூற்றலை இவ்வூராரே கூறுகின்றனர். அதனால் காதலர் விரும்பியபடி செய்யட்டும். இவ்வலர் நமக்கு நல்லதே.

# கவிதைச்சோலையில்!....

## பெண்விடுதலை!..

பெண்ணுரிமை பெண்விடுதலை
பெண்ணெழுச்சி என்று
பொன்மொழி பேசுகிறோம்
வீண் அல்ல அவை.

ஒன்று உறுதியானது!
ஆண்களுக்கெதிராக இது
ஆண்களை வெல்லும்
ஒன்றுபட்ட குரலல்ல!

தொன்றுதொட்டு உலகில்
பெண்களை அடிமைகளாக
நின்றழிய வைக்காதீர்
என்ற குரலே இது!

ஆணோடு பெண்ணும்
பெண்ணோடு ஆணும்
தூணோடு தூணாக நின்று
இணங்கி இயங்குதல் வாழ்வு!

ஒருவருக்கொருவர் உதவி
பெருமையிலும் சிறுமையிலும்
உரிமை கொண்டு சமமாக
இருவரும் வாழ்தலே விடுதலை.

**வேதா. இலங்காதிலகம்**
**ஒகுஸ் – டென்மார்க்**

## காலம் கரைகிறதே!..

இதயம் ஒன்று இருக்குது தோழா
அதை ஏன் கரைகின்றாய்
உன்னை நீயே கவனித்துக்கொள்
குடும்ப வாழ்க்கை வேதனையானதே
சிகரெட் புகையால் போதைப்பொருளால் நீ
சீக்கிரம் தொலைந்து போவாய்
மது மாது என்று அலைகின்றாயே நீயேன்
இளமையில் சாவுக்கு அடிமையாகின்றாய்
இறைவனைத் தேடிடு நல்வாழ்வைத் தேடிடு
உன்னை நம்பிடு நிதம் உழைத்து உண்டிடு
நேர்வழியைத் தேடிடு உரியகாலத்தில்
உன்னத பெயர்தனைப் பதித்திடு
சுயமாகச் சிந்தித்து செயலாற்று அந்த
சிலந்திப் பூச்சியை நினைவில் கொள்
உன் மனதில் வரும் சோம்பேறித்தனத்தை
காலம் தாமதியாது கரைத்திடு
சுயமாக யாவற்றையும் தேடிக்கொள்
சகலமும் உன்னை நாடி ஓடிவரும்
விடியட்டும் பொழுது உன் வாழ்வில்
உன் விவேகம் தெரியட்டும் உன் வாழ்வில்
காலம் வருமென்று கவனியாமல் இருந்துவிடாதே
சீக்கிரம் திருந்தி வாழனும் அதனை
பார்த்து நான் மனம் மகிழனும் தொழா!...

**திருமதி ஜெயா. நடேசன்**
**ஜேர்மனி**

எவருடைய கருத்தையும் மறுப்பதற்கு
எவருக்கும் உரிமை உண்டு
அதை வெளியிடக்கூடாது
என்று சொல்வதற்கு
எவருக்கும் உரிமை இல்லை!...

**–தந்தை பெரியார்–**

## தூரத்து இடிமுழக்கம்

ஆரத்தழுவிக்கொண்டால் அன்பென்று அர்த்தமாகிடாது
அடிவயிற்று நெருப்பதனை அகலக்கடல் அணைத்திடாது
நேரத்துக்குதவாத உதவிகள் நெஞ்சத்தை நிறைத்திடாது
நிழல்களின் தீண்டல்கள் நிஜமென்று ஆகிவிடாது

சோரத்தைச் சொல்லிச்சொல்லி சுகம் வந்து சேர்ந்திட
சூழ்நிலையை மனதிலிருத்தி சுயலாபத்தில் கண்டது ஏது
ஈரத்தை இழந்த மண்ணில் என்றுமே பயிர்கள் வளராது
ஈழத்தை மீட்டெடுப்பதற்கு இரங்கலுரை பயன்தராது

பாரத்தை இழுப்பவரை பள்ளம் மேடு கவனித்திடாது
பட்டினியும் பிணிகளும் பருவம் வயது பார்த்திடாது
தூரத்தை எண்ணிப்பார்த்தால் தொடர்பயணம் முடியாது
துயரத்தை துடைப்பதற்கு தூதொன்றும் தப்பாகாது

நேரத்தை நிறுத்திவைத்தால் நெஞ்சின்நெருடல்நீங்கிடாது
நெருப்பாற்று வெள்ளத்தை நிறுத்திவைக்க அணைதான்ஏது
பேரத்தை நிறுதிடாது போர்ப்பறைதான் நின்றிடாது
பொல்லாதோர் பிடிவாதம் பொருளெதையும் தந்திடாது

ஓரத்து நட்சத்திரங்கள் உலகினுக்கு ஒளிதராது
ஒருபக்கச்சார்புகொண்ட உதயமிருந்தும் பயன்தானேது
காரத்தை அமிலம் அவிக்க கண்களுக்கு விருந்தாகாது
காலத்தின் பெறுமதியை காசுபணம் ஈடுசெய்யாது

வாரத்தைக் கணக்கிட்டால் வந்ததுன்பம் நீங்கிடாது
வருங்காலம் வழம்பெற்றிட வன்முறைகள் தீர்வாகாது
தூரத்து இடிமுழக்கங்கள் தூறல்தளை தூவிவிடாது
துவக்குகளின் கலாச்சாரம் துன்பங்களை களைந்திடாது

**அம்பலவன்புவனேந்திரன்**

## தாய்மண் தவிக்கிறது

தாய்மண் தவிக்கிறது தன்னுணர்வும் வெடிக்கிறது
தோய்ந்த குருதியிலே குற்றுயிரும் பிரிகிறது
பாய் இல்லை படுத்துறங்க பதுங்கு குழியிலும் பயனில்லை
நோய்க்கு மருந்தில்லை நீர்கூடக் கிடைக்கவில்லை

காயும் பிஞ்சுமாய் காய்ந்து உடல் கருகுகின்றதே
வாயும் வயிறுமாய் கற்பிணிகள் உயிர் போகின்றதே
சேயும் தாயுமாய் சொல்லொணா துன்பச்சாவினிலே
ஆயிரம் ஆயிரமாய் ஆழிந்து போகின்றனரே

கொடிய குண்டினாலே கால்கை இழக்கின்றனர்
மூடிய குழிகளிலே மூச்சினைத் துறக்கின்றனர்
வெடித்துச் சிதறும் வெறும்பிஞ்சுகளைக் கண்டு
வடிகிறது கண்ணீர் வலிக்கிறது நெஞ்சம்

ஓடியே அணைத்திட ஒருவழியும் தெரியவில்லை
கூடிக் கூச்சலிட்டும் கேள்விக்குப் பதிலில்லை
வேடிக்கை பார்த்திருக்க வெறுமே நாம் ஜடமுமில்லை
நாடியே தாய்மண் உறவுகளை காப்போம் நாமே.

**திருமதி கலைவாணி. ஏகானந்தராஜா**
**யேர்மனி**

## யுத்தம் இல்லாத பூமி வேண்டும்!...

எங்கும் இன்பம் மலர்ந்திட வேண்டும்
எதிலும் துன்பம் கலைந்திட வேண்டும்
பொங்கும் மகிழ்வு பெருகிடல் வேண்டும்
பொய்மை என்றும் கருகிடல் வேண்டும்!...

உத்தமராய் வாழ நாம் முயன்றிடல் வேண்டும்
உண்மையைப் பேசி உயர்ந்திடல் வேண்டும்
ஒழுக்கம் என்றும் வளர்ந்திடல் வேண்டும்
ஒற்றுமை என்றும் ஓங்கிட வேண்டும்!...

குற்றமில்லா உலகம் உயர்ந்திடல் வேண்டும்
குறைகளில்லா வாழ்வு மலர்ந்திடல் வேண்டும்
பேற்றோரை மகிழ்வுற வைத்திடல் வேண்டும்
உற்றாரை உறவுகளை மதித்திடல் வேண்டும்!...

நித்தம் மக்கள் துயர்கள் ஒழிந்திடல் வேண்டும்
சித்தம் கலங்கிய மக்கள் ஆறதல்பெற வேண்டும்
சத்தம் இல்லாத அமைதி நிலைக்க வேண்டும்
யுத்தம் இல்லாத பூமி வேண்டும்..பூமி வேண்டும்!..

**திருமதி இராஜேஸ்வரி–சிவராசா**
**ஜேர்மனி**

## எங்கள் தாயகமே!...

எழில் நிறைந்திருப்பாய் எண்திசையும் புகழிணைப்பாய்
ஈழம் என்றிட்ட தீவின் கோபுரமே
எதிரி உட்புகுந்தான் உயிர்கள் பறித்தெடுத்தான்
உடமை அனைத்தையும் உருக்குலைத்தான்
நிலத்தின் பரப்புக்களில் நீண்ட குடியேற்றம்
சிங்களத்தின் பெயரினிலே சிறு நகரங்கள் பெயர்மாற்றம்
எழினின் தீவிற்குள் எதிரியின் அரசாங்கம்!....

குமுறும் எங்கள் தமிழ் தாயகமே
கொழுந்தாக எரிந்து அழிகின்றோம்
கொதித்தெழுந்து நாடு நாடாய்
மனித உரிமைக்காய் போரின் ஓய்விற்காய்
உடலின் காப்பிற்காய் ஊர்வலங்கள் செய்கின்றோம்
உண்ணா நோன்பு இருந்து உருக்குலையும் உறவுகள்
தீயின் தகனத்தில் தீர்ந்துபோன எம்மவர்கள்!....

உயிரின் தகனங்கள் கூடி உலுக்கவில்லை யாவையும்
உலகத் தமிழினமாய் ஒன்றிப் போராடி
எந்த அரசுகளுமே எம்மை உணரவில்லை
எமக்கே நாம் என்றும் பலமாவோம்
தமிழீழ மண்ணை நாம் வென்றாவோம்
என்ற உறுதிக்குள் உரங்கள் பெற்றுள்ளோம்!......

மரணத்தின் கருக்கலில் மடிந்து போவேரே
தகனத்தின் வேதனையில் தத்தளித்தே வாழ்கின்றோம்
தமிழினத்தின் வேர் தேடி தரணி எங்கும் அலைகின்றோம்
மீட்டெடுக்கும் மிடுக்கிற்குள் எதிர்கால இளையவர்கள்
விடுதலையின் வீரர்களுடன் விழுதான வேர் இவர்கள்
முடிவில்லாப் போருக்கு முற்று வைக்கப் புறப்பட்டார்
வையத்து வரைபடத்தில் வரலாறு பொறிப்பீர்கள்!.....

**திருமதி வசந்தா. ஜெகதீசன்**
**ஜேர்மனி**

## வெண்புறா

உன் வெண்பட்டுடல்
உயிரற்ற என் தேசத்தில்
உயரப் பறப்பதற்கு
உடன்பாடில்லையா!...

**திருமதி துஸந்தி–சங்கர்**
**இங்கிலாந்து**

## மருந்து

நீங்கள் விருந்துண்ண
மருந்து எடுக்கிறீர்கள்
நாங்கள் மருந்தில்லா
குற்றுயிராய் மடிகின்றோம்!...

## தொழிலாளர் தினம்!..

உழைக்கும் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்
உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்—என்று
செங்கொடித் தோழன் காட்டிய வழியில்
செங்குருதி கொட்டிய செந்திருநாள்
சிக்காக்கோவில் சிந்திய இரத்தத்தால்
சிறகை அடித்துப் பறக்கும் செங்கரங்கள் சிவக்கும்
உண்டு கொழுப்பவன் சிண்டைப் பிடித்தொரு
வேள்வி நடத்திய வெஞ்சமர் நாள்!....

வாழ்க்கையில் பாரம் குறைய வண்டி இழுக்கும் தோழன்
கேள்விக்குறியாகி மூடை சுமக்கும் தோழன்
சாக்கடை நீரை அள்ளிப் பூக்கடை ஆக்கித்தரும்
கூட்டாளி கொள்கைகளால் கூட்டுறவு கொள்ளும் நாள்
குடிசைகளின் உழைப்பால் கோபுரங்கள் உயரும்
அந்தக்கோபுரங்கள் எண்ணுவதில்லை குடிசைகளைச் சிறிதும்
இரும்மை அடித்துக் கிளப்பும் நெருப்பில்
உரிமைக் குரலில் உதயம் பிறக்கும்!...

மூலதன முதலைகள் விழுங்கிய முழக்கங்களே
முள்ளந்தண்டு உடைக்கப்படும் முனகல்களே
யுத்தப் பேரிக்கை கேட்குது போரிடவா
நித்தம் செத்துப் பிழைக்கும் முற்றம் விட்டு
உழைப்பவனுக்கே ஊதியம் உழுபவனுக்கே நிலம்
எழுபவனுக்கேஇடம் ஏழ்மையை உணர்ந்தவனுக்கே தலைமைப்பீடம்
என்று நீரோடி நிலம் பிழந்து நெடுவானில் கைவிரித்து
உடுக்களிடை நீந்திவரும் உழைப்பாளன் தினாவெட்டு!...

அடக்கு முறையாளனிடம் அடங்காமல்
குடிகொள்ளும் முடக்குவாத முரட்டுக் கரத்தை
அடக்கியொடுக்கி முற்போக்கைப் பிரசவிக்கும்
உழைப்பவன் உயிர் பெறும் உன்னத நாள்
விடிவினை முற்றுகையிடும் அடிவான ஆராதனைகள்
அதை ஆராதிக்க விரிகின்ற அர்ச்சனை ரோசாக்கள்
குனிந்த கூரைகளில் நின்று கொக்கரிக்கும் கோழிகள்
உடையும் அடக்குமுறையாளனின் அநியாய விலங்கு
உயிர்க்கும் தொழிலாளன் உரிமைக்கோர் புரட்சி
உதிக்கும் செம்பருதி உழைப்பவனையே கருதி!.....

திரு ப. பசுபதிராசா
ஜேர்மனி

இலக்கியச்சாரலில்!........

## வாழ்வியற் கலை அழகு புரியாத பாமரக்குழியில் அசுரமே நிலை கொள்கிறது மாய உலகில்

மனித வாழ்வியல் எழிலின் பெரும் பகுதியை மனிதர்கள் வாழும் ஒழுக்க நெறியே நிர்ணயித்து அலங்கரிக்கின்றதெனக் கூறும் நவீன விஞ்ஞானம். மரபணுக்களின் தாக்கம் மனித வாழ்வியல் எழிலை நிர்ணயிப்பதில் முப்பது சதவீதமே தங்கியுள்ளதென்றும் கூறுகிறது. மரபணுக்களுக்கூடாகத் தரப்பட்ட செய்திகள் வலுவடைந்து செயற்திறன் அடைவதும் செயற்திறன் அடையாது போவதும் மனித இனம் வாழும் வகையிற் தங்கியுள்ளது.

இயற்கைச் சூழ்நிலைகளுக்கேற்ப தம்மை மாற்றி அமைத்து வாழும் சக்தியை இயல்பாகக் கொண்ட மனித இனம் தாம் வாழும் சமூக சுழலிற்கேற்பவும் தம்மை மாற்றி அமைத்துக் கொள்ளும் அதிசய அதிகாரம் கொண்டது. மரபணுக்களில் உடல் பெருப்பதற்கான எவ்வித செய்திகளும் இல்லாத நிலையிலும் உணவுப் பழக்க வழக்கத்தை தவறான வழியில் மாற்றிக் கொண்ட போது மனித உடலானது அளவிற்கு மிஞ்சிப் பெருக்க ஆரம்பிக்கிறது. ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மத்தியில் அதிக உடற்பருமன் அநாகரீகமாகக் கருதப்படாத பட்சத்தில் அந்த இனமக்கள் உணவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி அதிக அளவில உணவை அருந்தி தம் உடற்பருமன் அதிகரிப்பதையும் அலட்சியப்படுத்தி வாழப் பழகிக் உட்கொள்கின்றனர். இப்படியாக உடற்பருமன் அதிகரித்த மக்கள் உடற்பருமன் குறைந்த மக்கள் அதிகமாகவுள்ள இடங்களில் வாழ நேரின் தம் உடற்பருமனைக் குறைக்கும் முனைப்பில் வெற்றியும் காண்கின்றனர்.

குடிபோதையில் மயங்கி வாழத்தயங்கும் சமூகங்கள் மத்தியில் வாழ்பவர்களின் புத்தியில் குடி குடியைக் குலைக்குமெனக் பதிவாகியிருந்தும் அக்குடிப்பழக்கத்திற்கு அவர்கள் அடிமைப்பட்டும் போக சமூக சுழலிற்கேற்பத் தம்மை மாற்றி அமைத்து வாழும் மனித குலப்போக்கு காரணமாகிவிடுகிறது. குடிபோதையில் வாழ்வியல் இன்பங்களைத் தொலைத்துத் தவிக்கும் இனத்தின் ஒரு சிறிய பகுதி மதுப்பழக்கத்திற்கு அடிமையாகாத மக்களைப் பெரும் பகுதியாகக் கொண்ட இனத்தோடு வாழ நேரின் குடிப்பழக்கத்தை மறந்து வாழப்பழகிக் கொள்கிறது.

சகல தனிமனித பழக்கவழக்கங்களும் மரபணுக்களில் பதிவாகி சந்ததிக்குத் தரப்படுகின்றன. தரப்பட்ட செய்திகள் பலம்பெற்று பயன்தர தனிப்பட்டவரின் பழக்கவழக்கங்கள் திறவு கோலாக அமைகின்றன. சமூக சூழல் மரபணுப்பக்குவம் மலிந்த மனிதர்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறதென நவீன ஆய்வுகள் கூறுகின்றன.

மனித குலச்செய்கை அதன் பழக்க வழக்கங்களால் ஏற்பட்ட அனுபவத்திலும் அதன் அனுபவம் அது வாழும் சுற்றாடலிலும் தங்கியுள்ளது ஓர் இனத்தினது ஒரு சிலபகுதிகளில் இங்குமங்குமாக இடம்பெறும் சீரழிவுகள் அற்ற இனத்தை வேரோடு நாளடைவிற் சாய்க்கும் சக்தி வாய்ந்தது.

பெரும் திரளான மனிதர்கள் ஏதாவதொரு காரியத்தைப் பின்பற்றுகிறார்கள் என்பதால் அக்காரியம் உயர்வெனப் பொருள் படாது. உயர்வானது என அறிவிற்பட்டவற்றை ஓர் இனம் பின்பற்றின் மட்டுமே அவ்வினத்தில் துயரெனும் இருள் படாது. இயற்கை மாற்றங்களால் ஏற்படும் பரிணாம வளர்ச்சியும் மரபணுமாற்றமும் பல உயிரினங்களில் பல ஆண்டு காலமாக இடம் பெறுகின்றன. பழக்கவழக்கங்களால் ஏற்படும் வளர்ச்சிக்கும தளர்ச்சிக்கும் சில ஆண்டுகளே தேவைப்படுகின்றன.

பொருளாதாரமே சகலவற்றையும் அதிகளவில் நிர்ணயிக்கும். நவீன உலகில் இரவுத்தூக்கம் சிலர்வாழ்வில் அருகி வருவதால் பல நோய்கள் பெருகி வருகின்றன. இரவுத்தூக்கக் குறைவு காரணமாக மனிதகுலத்தில் நிறைந்து வரும் நோய்களாக ஒவ்வாமை இருதயநோய் நீரிழிவு யனனிழளவைல எனப்படும் உடலின் வளைளரந க்களில் கொழுப்பு அதிகரித்து உடற்பருமன் கட்டுக்கடங்கா வண்ணம் அதிகரித்தல் மூளையின் செயற்திறன் பாதிக்கப்படுதல் உயர் இரத்த அழுத்தம் எனப்பலவற்றை வரிசைப்படுத்த முடியுமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இரவுத்தூக்கத்தின் போது குறிப்பாக இரவு பதினொரு மணியிலிருந்து அதிகாலை மூன்று மணிவரை உடலில் அதிகளவிற் சுரக்கும். ளழஅழுவழவசழிைெ ஈழசஅழநெ ஆனது எலும்பு வளர்ச்சி அரளநடநள வளர்ச்சி உட்பட உடலின் சகல வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகிறது. சமூகச்சூழல் இரவுத்தூக்கத்துக்குத் தடையாக அமையும்போது கலச்சிதைவு இலகுவில் நடைபெறுகிறது.

உயிரினக் கலங்களின் சக்தி உற்பத்தி குறைவதற்கும் கொழுப்பு அக்கலங்களில் நிறைவதற்கும் கலங்கள் சிதைவதற்கும் கலங்கள் இன்சுலினை உணரமுடியாது போவதற்கும் இரவுத்தூக்க இழப்பு பெரும்பங்கு காரணத்தை வகுக்கின்றது.

கலங்களில் கொழுப்பு அதிகரிக்கும் பட்சத்தில் அவை இன்சுலினை உணரமுடியாது போக அவற்றின் உயிரியல் சக்தி மாற்றமெனப்படும் ஆநவயடிழடளைஅ இடம்பெறுவது அறவே குறைந்து நாளடைவில் மனித இனம் பல நோய்களின் பிடியில் தவிக்க நேரிடுகிறது. இந்நோய்களின் பட்டியற் தொகுப்பை ஆநவயடிழடைஉ ளுலனெசழஅ என விஞ்ஞானிகள் அழைப்பர். இந்நிலையில் இரவில் இடம்பெறும் கலப்புதுப்பிப்பெனும் நீண்டநாள் வாழ்விற்கான நிகழ்வும் குறைந்து போகிறது. இரவின் மடியில் உயிரினங்களில் நிகழும் புதுமைகளில் கலப்புதுப்பிப்பு எனும் அற்புதம் உயிரின் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாகும். இவற்றை மிகவும் தெளிவாக அறிந்திருந்த ஆதிமனிதர் தம் ஆதிமொழியான சமஸ்கிருதத்தில் இரவிற்குப் புதுப்பித்தல் எனும் பொருள்பட''இரா'' எனப்பெயரிட்டு அதற்கேற்ப சமூக சூழலை அமைத்து மிகவும் தெளிவான எழிலோடு வாழ்ந்த அற்புதமே சிந்துவெளி நாகரீகமாக இன்றும் உலகை அதிசயத்தில் ஆழ்த்திய வண்ணம் உள்ளது.

வாழ்வியற் கலையை முழுமையாகப் புரிந்த அறிவாளிகளின் விழிகளில் சமூக வாழ்வியலே மனிதகுலத்தில் சுரத்தை இறைக்கும் எனும் விந்தை தெளிவாய்த் தெரிந்தது. அதற்கான ஒழுக்கமுறை அவ்வின மக்கள் மத்தியில் நாகரீகமாய் விரிந்தது. நாகரீகம் என்றாலே நகர வழக்கமென அந்த இனமக்கள் மொழியான சமஸ்கிருதம் அர்த்தத்தைச் சொரிந்தது. அத்தோடு அவர்கள் மத்தியில் சாதிமுறை அறவே அறியப்படாது இருந்ததும் அவர்கள் உயர்வான வழியில் ஒன்றாய் வாழ உதவியது என ஆய்வுகளில் தெரிந்தது. அங்கு சுரம் மடைதிறந்து சரிந்தது. வாழ்வியற்கலை புரியாத பாமரக்குழியின் அசுர நெறியில் மனித குலம் வாழ வழிதெரியாது போர்க்கோலமிட்டு வீணே மரிந்தது. இந்நிலை போக்க அறிவைத் துணைகொண்டு சாதிவினைக்கு அணையிட்டு சமூக வாழ்வியலை உயர்த்திட முயலாது ஒருசில பாமரம் ஆலயங்களில் இறை அருள் தேடி மாய இருளில் நெரித்தது.

திரு ஆ. மகேந்தி
ஜேர்மனி

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!...

வன்னியில் கொடிய போர்முனையில் அகப்பட்டு சொல்லொணா துன்பத்திற்குள் நீந்திவாழும் இலங்கைத் தமிழ்மக்களின் இன்றைய அவல நிலை உலகில் எந்த இனமும் சந்தித்திருக்கமுடியாத பேரழிவின் அடையாளச்சின்னமாகும். அதிலும் பேரினவாதம் நேரடியாகவே களத்திலே இறங்கி எந்தவித தயவு தாட்சண்யமற்றுக் கண்மூடித்தனமாக, யார் சொல்லையும் கேட்காமல் மனித நாகரீகத்திற்கப்பால் கிஞ்சித்தும் யோசிக்காமல் ஒரு கொடுமையான இனச்சுத்திகரிப்பைச் செய்யும் இனத்துவேசத்தின் வெளிப்பாடு, இதுபோல் நடந்ததாகச் சான்றுகொண்ட கறைபடிந்த சரித்திரங்கள் மிகக்குறைவு.

பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக்காட்டி மொத்த உலகையும் கண்மூடிக் கைகட்டி நிற்க வைத்து முழு இனத்தையும் துடைத்தெறிந்துவிடும் முன்னேற்றங்களே முகாமிட்டபடி நகர்கின்றது. இது ஒரு திட்டமிட்ட இன அழிப்பு என்றும் அப்பாவிப் பொதுமக்கள் மீதான அர்த்தமற்ற தாக்குதல் என்றும் உலகம் வாழ் நல்லெண்ணம் கொண்ட ஆட்சித்தரப்பாலும் பொதுசன அமைப்புக்களாலும், தாபனங்களாலும், பத்திரிகைகளாலும் இன்னும் உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழக்கூடிய இலங்கைத்தமிழ் மக்களின் லட்சோபலட்சம் மக்கள் ஆர்பாட்டப்பேரணிகள், பிரார்த்தனைகள், உடன்படிக்கைகள், காலக்கெடுக்கள்,அறிக்கைகள், கண்டனங்கள், மன்றாட்டங்கள் அனைத்தையும் துச்சமென மதித்து நானே ராசா...நானே மந்திரி என்று நடக்கும் கொலை வெறித்தாண்டவத்தில் அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. சகல உரிமைகளும் உடைய ஒரு தேசிய இனம் யாருமற்று, அரசியல் அநாதைகளாக்கப்பட்டு ஒரே தேசத்தவர் இன்னோர் சகோதர இனத்தால் வதைக்கப்படும் கொடூரத்தைக்காண மனமற்றுக்கிடக்கின்றது உலக மா மன்றம்.

நாய்களுக்குக் காய்ச்சல் என்றால் நாலு டாக்டரிடம் கொண்டுசென்று வைத்தியம் செய்யும் நவநாகரீக மனிதர்களும், பூனை குட்டி போட்டால் புத்தகம் ஒன்று எழுதும் பச்சைப்புரட்சிப் பங்காளிகளும் சின்னஞ்சிறு பாலகர்களும் வயது முதிர்ந்த பெரியவர்களும், பெண்களும், குழந்தைகளும் உடல் சிதறிக் குடல் சரிந்து கிடக்கும் நிலை தெரிந்தும் அறிந்தும் பார்த்தும் பிறகு உதவிக்கு ஓடிவராமை ஆச்சரியமான விந்தையிலும் விந்தை.

பயங்கரவாதத்தை ஒடுக்கப்போய் பலியான வெள்ளைத்தேசத்தவன் ஒருவனுக்கு இராணுவ அணிவகுப்பும் தேசமரியாதையும் சிரம் தாழ்த்திவணக்கமும் அளிக்கப்பட்ட சாதாரணமாக சாகடிக்கப் படும் அப்பாவிகள் பொதுமக்களின் இரத்தம் வேறு நிறமானது என்ற பாராபட்சமாகக் கருதப்படுவது மனிதம் கெட்டுக் குட்டிச்சுவரான வளர்ச்சியை உறுதிசெய்கிறது.

இங்கு உண்மை எதுவெனில் இந்த மாபெரும் மனிதகுல அவலத்தை மறைமுகமாக நடத்துபவர்கள் இந்த வெள்ளைக்கார வேதாந்திகளே. தாங்கள் இந்த உலகைச் சுரண்டிச் சூறையாடும் சுரண்டலதிகாரத்தை தட்டிக்கேட்பது பயங்கரவாதம் என்ற காட்ப்புணர்ச்சிக்கு அப்பால் பேரெரிச்சலோடு அவர்களை அழித்து ஒழிப்பதற்கான அனைத்து உதவிகளையும் நல்குகின்றனர். ஆனால் இலங்கைத்தமிழரின் உண்மையான வாழ்வுரிமை மறுதலிக்கப் பட்டதை நாம் அனைத்துப் பரப்புரைகளாலும் நிவர்த்தி செய்து நிற்பவர்கள். அவர்கள் எதையும் உணர்ந்து கொள்ளாமல் வெறுமனே பார்வையாளராக''ஒப்புக்கு அழுகின்றேன் ஊரார் சிரிக்காமல்'' என்ற பழமொழிக்கிணங்க பதுங்கிநிற்பது அருவருக்கத்தக்க செயல். மக்கள்படும் அபாய அவஸ்தைகளுக்கு அப்பால் தமிழ்மக்கள் தலைமைகளுக்குள் இருக்கும் இயலாமையை ஓட்டுண்ணித்தனத்தை, சுயநலவேட்கையை அதிகார செயல் மந்தத்தை நினைக்கும்போது நெஞ்சுபொறுக்குதில்லையே என்று எண்ணத்தோன்றுகிறது.

அரசியல் கோமாளிகளையும் கோணல் புத்திக்காரர்களையும் குளப்பவாதிகளுக்கும் தான் இதுவரை தலைமைப்பீடம் கொடுத்து வந்தோமா... என்று நினைக்கையில் மனம் வேதனையில் நனைகிறது. கையில் இருக்கும் அதிகாரத்தை வைத்துக் கஷ்டப்படும் மக்களுக்கு உதவ அரிய வாய்ப்பு இருக்கின்றபோது வெற்று வேட்டுத் தனமானமாகவும் குடும்ப நலங்களுக்கு குறிபார்க்க கிளம்புபவராகவும் இருப்பதும் இக்கட்டான நேரத்து ஒற்றுமையைத் தவிர்த்து தமக்குள் மோதிக்கொள்பவராகவும் இருப்பது எதிரிக்கு சாதகமான வாய்ப்பளிப்பவர்கள். இன்றைய எம்மவரின் செயற் பாடுகளை நினைத்தால் இந்த நிர்மூல நேரத்திலும் சிரிக்கத் தோன்றுகிறது.

இரத்த வரலாறு பொங்கிப்பெருகி ஓடும் இந்த இக்கட்டான நிலையில் எங்களது பெரும் அவலத்தை பங்குபோட்டு உயிர்தந்து உண்மை உறவு எடுத்துக்கொண்ட தமிழக அன்பு உள்ளங்களுக்கு என்ன கைமாறு உலகில் உண்டோ தெரியவில்லை. சொந்தச் சகோதரர்கள் உயிர் குலைந்து கிடக்க எதிரியோடு சேர்ந்து

எக்காளமிடும் எம் தேச சகோதரனின் இழிசெயலுக்கப்பால் எங்கெங்கோ பிறந்து எங்களின் அன்போடு ஆசுவாசப்பட்ட உங்கள் தியாகங்கள் தீயாலும் எரிக்கமுடியாதவை. ஆனால் இந்த அருமை உயிரை இனிமேல் யாரும் துறக்கவேண்டாம். எங்கள் தலைமைகளின் தொலைநோக்கமற்ற சிந்தனைகளால் நாம் அழிய நிற்பந்திக்கப்பட்டோம். அதற்காக நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள்..வேண்டாம் இந்த உயிர்க்கொடை நீங்கள் இந்த உலகில் சகல சௌபாக்கியங்களோடும் வாழப்பிறந்தவர்கள் எம்மை மேலும் வேதனைப்படுத்த வேண்டாம். உணர்ச்சிவசப்பட்டு உணர்ச்சிவசப்பட்ட ஏழைகள் நாம் வீழ்ந்து வீணாகாமல் விருட்சங்களாவோம். அடுத்த தலைமுறைக்கு முறையான அரசியல் தாக்கம் உண்டாக்குவோம். நம்மை உசுப்பேற்றி வாழ்பவன் எதிரியல்ல..எம்மவர்களே என்பதை அனுபவங்கள் படிப்பினை செய்கின்றன. கண்ணில் நீர் துடைப்பவர்களெல்லாம் கண்ணைக் குத்திப் பார்க்கும் கபடக்காவியங்களுக்குச் சொந்தக்காரர்கள் என்பதை கற்றறிந்தோம். இதுவே எதிர்கால நிதர்சனங்களாகும்.

உலகில் பத்துக்கோடி இஸ்லாமிய மக்களைக்கொண்ட அரபு உலக மக்களுக்கு பதினைந்திற்கு மேற்பட்ட உறுப்புரிமை நாடுகள் கைதட்டினால் ஆதரவுக்கரம்கொடுக்க நாற்படைகள்... ஆனால் இதே அளவு மக்கள் தொகையும் தொன்மை கொண்ட தமிழ் இனம் உலகில் யார் மீதும் சார்ந்து வாழவேண்டிய தனித்துவமற்ற இனமாகப் போனதற்கு என்ன காரணம்... எல்லாமே உணர்ச்சி மயம். பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு... எங்கள் பகைவர் எங்கோ மறைந்தனர். இங்குள்ள தமிழர் ஒன்றாகுதல் கண்டு... நடக்குமா!... இந்த அழிவின் விழிம்பில் ஏக்கம் அதுதான்...

திரு ப. பசுபதிராசா
ஜேர்மனி

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்

## முனைப்பு:—

காலைப்பனி. கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின. தங்களுக் குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. இன்று நான் குளத்துக்குப் போவதில்லை. வேண்டுமானால் மீன் இங்கே வரட்டும் என்றது கொக்கு... நானும்தான் தோப்புக்குப் போவதில்லை.. வேண்டுமானால் பழம் இங்கே வரட்டும் என்றது குருவி... பொழுது கரைந்தது... பசி வயிற்றைக் கிள்ளியது.. நடுப்பகல் தாண்டியபின்பும் பசியை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்.. கொக்கு குளத்துக்குப் போனது… குருவி பழத்துக்குப் போனது… மரத்தில் இருந்த அணில் பாடியது...

**கொக்கைத் தேடிக் குளம் வராது**
**குருவியைத் தேடிப் பழம் வராது!**

## தோல்கள்:—

பாம்பு தோலைக் கழற்றி வைத்துவிட்டுப் புறப்பட்டது. ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்த பக்கம் அது போனது. அங்கே நின்ற தனியன் ஆட்டிடம்... அதோ பார் பாம்பு உன்னுடையவர்கள் இருக்கும் இடத்தை நோக்கித்தான் போகிறது. நச்சுப் பாம்பு பல் பட்டாலே போதும்... என்று கூறியது சேவல்.. அப்படி ஒன்றும் நடந்துவிடாது... பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது... என்றது தனியன் ஆடு. சிறிது நேரத்தில்... ஆடுகளின் அலறல் புல் வெளியை உலுக்கியது. ஓசை வந்த திசைநோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின. அங்கே!... பாவம்... அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக் கிடந்தன...

**பல்லைக் கழற்றாத பாம்பு**
**தோலைக் கழற்றி என்ன**
**வாலைக் கழற்றி என்ன!...**

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு – 111

பங்குனி – சித்திரை 2009

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மு | ல் | லை | த் | தீ | வு | பே |
| க் | னா | மை | டா | ண் | தீ | ண் |
| கோ | வ | ல | ன் | வ | டு | க |
| ண | ம் | ப | ரை | தி | கு | ள் |
| ம் | ல | ட் | தி | வ | ங் | கு |
| க | ர் | டி | த் | ன் | பு | ண் |
| தா | ஊ | னி | சி | னி | மா | டு |

போட்டியில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்கள்:–

திருமதி.வசந்தா.ஜெகதீசன் - Geilenkirchen
திருமதி.ஜெயா.நடேசன் - Windhagen
திருமதி.சுவீதா.கிருபாகரன் - Duisburg
திருமதி.மனோகரி.சர்வானந்தன் - Bleiskastel
திருமதி.எல்.சத்தியமூர்த்தி - Duisburg
திருமதி.பி.சண்முகரத்தினம் - Münster
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.திருச்செல்வி.கமலநாதன் - Swiss
செல்வன்.பிரசன்னா.செல்வராசா - Castroprauxel
திரு.எம்.ஜே.ஜீவரத்தினம் - Böblingen

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்!... இவர்களில் அதிஸ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசு பெறுபவர்:–

**திருமதி சுவீதா. கிருபாகரன்** – Duisburg

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 112

## வைகாசி – ஆனி 2009

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ–வ:–**

01-03: இலங்கைப் படைகள் தமிழ் இனத்தை இது போட்டு அழிக்கின்றது.
04-07: இலங்கையில் வரண்ட பிரதேசம்.
17-21: நம் நாட்டின் போரால் இத்துறை பெரிதும் பாதிப்படைந்துள்ளது
22-24: பலகார வகை.
31-33: இந்த மொழி தோன்றியதற்குக் காலம் இல்லை எனலாம்.
37-38: இது அதிகரிப்பாலும் உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது.
43-46: நம் நாட்டில் ஒரு பாவனைப் பொருள்.

**வ–இ:–**

11-08: உறவுகளை இப்படியும் அழைக்கலாம். (கு)
14-12: உலகக் கவி நாயகன்.
16-15: சமாதானப் பறவை.
31-29: முனிவர்கள் இது செய்வார்கள்.
41-39: இலங்கையின் இந்தப் போரினால் இந்தப் பிரதேசம் முற்றாக அழிந்துள்ளது.(கு)
49-46: சொத்து இதை இப்படியும் அழைப்பார்கள்.

**கீ–மே:–**

17-10: தமிழ் தொலைக்காட்சியில் அரட்டை அரங்கம் நடாத்தும் பிரபல்யமான வரின் சுருக்கப்பெயர்.
43-29: இசைக்கருவி.
45-38: மனிதர் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியதில் இந்த ஆர்வமும் ஒன்றாகும்.
49-28: உணவுப் பொருள்.

**மே–கீ:–**

01-22: இந்தியாவில் பிரபல அருவி.
04-25: விடுதலைப் போராளிகளை இப்படியும் அழைப்பார்கள்.
17-38: எமது தாயகத்தின் மீது நமக்கு இந்த உணர்வு இருத்தல் வேண்டும்.
19-26: வீதி ஒத்த சொல்.
20-41: ஆசியாவின் பணக்கார நாடு.

முடிவு திகதி: 25–06–2009



TODAY
Heute

Plant a plant today,reap the fruits tomorrow
Pflanze heute, ernte die Früchte morgen

## THE EVERGREEN PROJECT

Das immergrüne Projekt
CHANKANAI
SRI LANKA



TOMORROW
Morgen

Founder General Executive:
Soma. S . Kulanayagam (Mr.)
Notary Public, Freelance Journalist
Ex German Redcross Social Worker
Ex Bremen City Green Project Worker
Tel. +49 421 53 10 24
Fax +49 421 3978388
E-Mail: Keerthirahu@yahoo.com

Head Office
Gottfried- Menken-Str. 25
28201 Bremen
Germany

22/4/2009

## பசுமை வளத்திட்டம் – சங்கானை – இலங்கை

பயன்தரும் பழ மரக்கன்றுகளை இன்று நாட்டி
நாளை பயன் பெறுவோம் – பசுமைக்குறள்.

கடந்த 2007 புரட்டாதி–ஐப்பசி''மண்'' சஞ்சிகையில் சங்கானை பசுமை வளத்திட்டத்தை (The Evergreen Project - Chankanai) வெளியிட்டிருந்தேன். அதை வாசித்த எனது நண்பர்கள், உறவுகள் ஆதரவைத் தெரிவித்து தங்களால் இயன்ற பண உதவியும் நல்கியிருந்தனர். கட்டுரையை வாசித்த ஐரோப்பாவின் இரண்டு தமிழ் வானொலிகள் என்னைச் செவ்விகண்டு நேரடி ஒலிபரப்பும் செய்தன. அவர்கள் யாவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்..

அதே நேரத்தில் தாயகத்தில் ஆரம்பத்தில் நான் சிறுவயதில் கல்வி பயின்ற சங்கானை அமெரிக்கமிஷன் தமிழ்ப் பாடசாலையின் தற்போதய அதிபர் திரு.ஆ.பேரின்பநாயகம் அவர்களுடன் தொடர்பு கொண்டு பசுமைவள அங்குராப்பண விழாவையும், சர்வதேச சிறுவர் தினத்தையும் 2008 ஐப்பசி 1ம் நாள் பாடசாலையில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த விழாவிற்கு விருந்தினர்களாக யாஃசங்கானை அமெரிக்கன்மிஷன் தமிழ்ப் பாடசாலைச் சிறார்கள், சங்கானை சலேசியார் முன்பள்ளிச் சிறார்கள் ஆசிரியர்கள், பெற்றோர், மதகுருமார், அரசபணிமனை உத்தியோகத்தர்கள் என

நாநூறுபேர்வரை கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஆரம்பத்தின்போது சிரேஷ்ட மாணவர்களின்''பாண்ட்'' வாத்திய இசையுடன் பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தலைமை உரையை அதிபர்திரு.பேரின்பநாயகம் ஆற்றினார்.ஆசியுரையை பிரம்மஸ்ரீ. சிவ. நித்தியானந்தக்குருக்கள் நடாத்தி சிறார்களையும் பசுமைவளத் திட்டத்தையும் ஆசீர்வதித்தார். தொடர்ந்து தென் இந்திய திருச்சபையின் சங்கானை தேவாலயத்தின் போதகர் அருட்திரு ஜீ.நடராஜா அவர்கள் ஆசிச் செய்தியை வழங்கினார்.

அதிபர் தொடர்ந்து குறிப்பிடுகையில் சர்வதேச சிறுவர் தினத்துடன் ஜேர்மனி பிறேமன் நகரத்திலிருந்து செயற்படும் சங்கானை பசுமை வளத்திட்டத்தினரும் ஒன்றிணைந்து இவ்விழாவைச் சிறப்பிப்பதும் அதற்குரிய சகலபண உதவிகளையும் திட்டத்தின் தலைவர் திரு.சோம.சிவ.குலநாயகமும் அவர் குடும்பத்தினரும் நண்பர்களும் வழங்கியமைக்கு உளம் சிறைந்த நன்றிகளைத் தெரிவித்து இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் பசுமையான சிறுவர்களுக்கும் பசுமைவளத் திட்டத்திற்கும் நிறையச் சம்பந்தம் உண்டு. அவை இரண்டிற்கும் இன்று ஒரே மேடையில் விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து வாழ்த்துரையை சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.து.எங்கரசு அவர்களும் வலிமேற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு.பி.சபாநாதன் அவர்களும் சர்வதேச சிறுவர் தினத்தை இந்தச்சிறிய பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்படுவது மகிழ்ச்சியாகவும் பெருமைக்குரியதாகவும் உள்ளதெனவும் தெரிவித்ததுடன் பாடசாலை அதிபரையும் பாராட்டிப் பேசினார்கள்.

அருட்திரு. ஜி.நடராஜா அவர்களின் உரையில் சிங்கப்பூரின் எதிர்க் கட்சித்தலைவராகவிருந்து இரு தினங்களுக்கு முன்பு சிங்கப்பூரில் இயற்கையெய்திய பாரிஸ்டர்.ஜோசுவா.பென்ஜமின் ஜெயரட்ணம் சங்கானை தேவாலய வீதியில் பிறந்து இதே பாடசாலையில் ஆரம்பக்கல்வியை மேற்கொண்டு பின்பு சிங்கப்பூர் சென்று இப்பாடசாலைக்கும் எமது நாட்டிற்கும் புகழ் தேடிக் கொடுத்துள்ளார். இவர் சில வருடங்களுக்கு முன்பு சங்கானைக்கு வந்தவேளை தான் படித்த பாடசாலைக்கு அன்பளிப்பாக ஒலிபரப்புச் சாதனங்களையும் பண உதவியும் செய்ததுடன் மேலும் உதவி வழங்குவதாக அதிபரிடம் கூறிச்சென்றார். அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனையும் ஜெபமும் செய்ததைத் தொடர்ந்து சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்துச் சிறார்களுக்கும் சங்கானை பசுமைவளத் திட்டத்தினரால் பாடசாலை உப கரணங்களும் அன்பளிப்புப் பொருட்களும் பயன்தரும் பழக்கன்று மரங்களும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்கள் அனைவருக்கும் பாலும்,பழமும் மதிய உணவாக சர்க்கரைப் பொங்கலும் வழங்கப்பட்டது.

மேலும் பயன்தரும் மரக்கன்றுகளாக வழங்கப்பட்ட வேப்பங்கன்று பெற்றவர்களுக்கு எமது திட்டம் ஊக்குவிப்புப்பணமாக 1000–00ரூபா வழங்கப்படவிருப்பதாகவும் சிறப்பாக வளர்க்கும் பட்சத்தில் மூன்று வருடங்களுக்கு தலா 500–00ரூபா வழங்கப்படுமெனவும் இந் நிகழ்ச்சிக்கு வருகைதந்த பிரமுகர்களுடன் சேர்ந்து மரக்கன்றுகளை வழங்கிய திட்டத்தின் தாயகப்பிரதிநிதி திரு.செ.க.மூர்த்தி தெரிவித்தார். யாழ் பிரபல பத்திரிகையாளர்களும் வருகைதந்து தங்கள் பத்திரிகைகளில் பிரசுரித்தனர்.


இந்நிகழ்ச்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் பாடசாலை ஆசிரியரால் நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்கானை பசுமைவளத் திட்டத்தின் பிரதிநிதியான திரு.செ.க.மூர்த்தி சிவன் ஆலயம், மனோன்மணி அம்பாள் ஆலயம், வெல்வில் இலுப்பைத்தாழ் முருகன் ஆலயம்,கறுத்தார் வைரவர் ஆலயம், சங்கானை தென்னிந்திய திருச்சபைத் தேவாலயம்,சலேசியார் கத்தோலிக்க தேவாலயம் ஆகியவற்றின் பூசகர்கள் போதகர்கள் மற்றும் அருட்தந்தை ஆகியோரிடம் தலா 1000–00ரூபா வழங்கப்பட்டு காலையில் கோவில்கள் தேவாலயங்களில் பட்டின மக்களின் நலன்கருதி தீபம் ஏற்றுவதற்குக் காணிக்கைப் பணமாக வழங்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும். பசுமை வளத்திட்டத்தின் சிறப்பு அம்சமாக 2009 ஆண்டின் பூ வர்ண நாட்காட்டியும் இவ்வருடத்தில் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

மேலும் நான் ஏற்கனவே 2007 புரட்டாதி–ஐப்பசி மண் சஞ்சிகையில் குறிப்பிட்டது போல் வீட்டுக்காய்கறித் தோட்டம் சமகாலத்தின் கட்டாயமாக உணரப்பட்டுள்ளது. உதாரணமாக போரின் அனர்த்தங்களால் வடகிழக்கு மாகாணத்தில் குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்டு தொன்கணக்கில் நிலத்தில் செறிந்துள்ள Potassium, Nitrate, Carbon, Sulphur போன்ற இரசாயனச் சேர்க்கைகள் படிந்துள்ள நச்சுப்பூமியில் பயிரிட்டு நெல்,காய்கறி,பழவகைகளின் நச்சுத்தாக்கம் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு புற்றுநோய், காசநோய்,மற்றும் புதிய கேள்விப்படாத நோய்கள் மகப்பேற்று நோய்கள் எல்லாம் இன அழிவுக்கு வழிகோலிவிடும். எனவே நம் தாயக வீட்டு வளவுகள் காணிகள் தோட்ட விவசாயக் காணிகள் என்பவற்றைத் துப்பரவு செய்து விவசாய முயற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகின்றது.

இவற்றை எண்ணியே பசுமை வளத்திட்டம்–2008 ஐப்பசியில் ஆரம்பிக்க முன்னராகவே „ஆடி அமாவசையில் முருங்கையை முறித்து வை“ என்ற முதுமொழிக்கிணங்க சங்கானை மக்கள் முருங்கைக் கிளைகளை நேரத்துடன் முறித்து நாட்டி பசுமை வளத்திட்டத்தின் நிகழ்வுகளுக்காகக் காத்திருந்தனர். அவர்களின் முற்போக்கான செயற்பாடுகளுக்கும் எம்முடன் ஒத்துழைப்பதற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் இச்செய்தியை வாசிக்கும் அன்புறவுகள் தாயகத்தில் தங்கள் உறவுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாடசாலை அதிபர்கள் சமூக சேவையாளர்கள் மூலம் தங்கள் கிராமங்கள் பட்டினங்களில் மேற்படி முயற்சிகளை ஏற்படுத்தி சுகாதாரமான உணவில் தன்னிறைவு காணமுடியும்.

புலம் பெயர்வாழ் சங்கானை அன்புறவுகள் 0421–531024 தொ.பேசி எண்ணில் தொடர்புகொண்டு எதிர்வரும் ஐப்பசி பசுமை வளத்திட்டம், சர்வதேச சிறுவர்தின நிகழ்ச்சிகளுக்கு ஆதரவை வழங்க முடியுமென நம்புகிறேன்..

**– பசுமை வளத்துடன் இனிது வாழ்வோம் –**



சோம. சிவ. குலநாயகம்.
வெளிநாட்டுக்காரியாலயம்ஃநிர்வாகி–பசுமைவளத் திட்டம்.
பிறேமன்–ஜேர்மனிஃசங்கானை–இலங்கை.
**0421–531024**

திரு.சிவ.குலநாயகம் அவர்களால் மேற்கொண்டு, அமுல்படுத்திய, பயன்தரும் இத்திட்டம் வெற்றியளித்திருப்பதை தாயகத்திலிருந்து இவர் மூலம் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதங்கள் நிழல்படங்கள் பத்திரிகைப்பிரசுரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. திரு.குலநாயகம் அவர்களுக்கு மண் சஞ்சிகையின் வாசகர்கள் சார்பில் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்து மகிழ்கிறோம்!...
இந்தச்சமூக சேவையாளரைப்போல் நாம் ஒவ்வொருவரும் முயற்சி எடுத்துச் செயற்படுவோமானால் நம் தாயக கிராமங்கள் பட்டினங்களின் மக்கள் துயர்போக்கிடுவதுடன். இயற்கை வளங்களையும் பேணிடலாம். நல் வாழ்வும் கிடைத்துவிடும். சிந்திப்போம்!...செயல்படுவோம்!...

–ஆசிரியர்–

## தென்னாபிரிக்கா

| | |
|---|---|
| பரப்பளவு | – 1.2 மில்லியன் சதுரகிலோ மீட்டர். |
| சனத்தொகை | – 48.8 மில்லியன் |
| கறுப்பினம் | – 79 வீதம்,கலப்பினம் 12வீதம், வெள்ளையினம் 9 |
| கத்தோலிக்கர் | – 80வீதம் ஏனைய மதத்தவர்–20வீதம். |
| பிரதான ஏற்றுமதி | – தங்கம், பிளாட்டினம், இரத்தினக்கற்கள். |
| ஆட்சித்தலைவர் பெயர் | – சுமா (Zuma) |
| கட்சி | –ஆபிரிக்க தேசிய காங்கிரஸ். |

## சர்வதேச தொழிலாளர் தினம்

## மே தினம் வரலாற்றுக் குறிப்பு

வேலை நேரம் 8 மணித்தியாலங்களாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1880 ஆண்டளவில் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டது. 1884ல் Federation of Organised Trades and Labour Unions என்ற தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு 8 மணி நேர வேலை என்பதைத் தீர்மானமாக இயற்றினர். 1886 மே மாதம் 1ம் திகதிமுதல் அதனை அமுலாக்குவதாகவும் அறிவிக்கப்பட்டது. 1889 ஏப்ரலில் ஆயிரக்கணக்கான அமெரிக்கத் தொழிலாளர்கள் தமது உரிமைப் போராட்டத்துக்காக அணிவகுத்தனர். இப்போராட்டத்தில் சிக்காக்கோ மையத் தளமானது International Working Men Association என்ற தொழிற்சங்கம் முன்னணிப் பாத்திரம் வகித்தது. மே முதலாம் திகதியே சிக்காக்கோவிலுள்ள தொழிலாளர்கள் பலர் தமது கோரிக்கையில் வெற்றிபெற்றனர்.

ஆனாலும் மொத்தத் தொழிலாளர்களதும் வெற்றிக்காகப் போராட்டம் தொடர்ந்தது. இதே நாள் 1886 மே மாதம் 3ம் தேதி பொலிசார் Mc Cormic Reaper Works Factory போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நால்வர் இறந்தனர் பலர் காயமுற்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த தொழிற்சங்கவாதிகள் தொழிலாளர் களை ஆயதங்களைக் கையில் எடுத்து கொலைகார அரசுக்கு எதிராக மறுநாள் மாலை கிளர்ந்து எழும்படி அறைகூவினர். சிக்காகோ கேய் மார்க்கட் சதுக்கத்தில் மறுநாள் மாபெரும் கூட்டம் எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி நடைபெற்றது. கூட்டம் முடிவடையும் நிலையில் சில நூறு தொழிலாளர்களே நின்றனர். அப்போது 180 பொலிசார் அணிவகுத்து கூட்டத்தை நோக்கிவந்து கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி உத்தரவிட்டனர். கூட்டத்தின் கடைசிப் பேச்சாளர் மேடையைவிட்டு இறங்கினார். அப்போது பொலிசாரை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டது. அதில் ஒரு பொலிசார் இறந்தார். 70 பேர் காயமடைந்தனர். பொலிசார் திருப்பிச் சுட்டதில் ஒருவர் இறந்தார். பலர் காயமடைந்தனர். குண்டு வீசியவர் யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

சிக்காக்கோ நகரம் பயங்கரம் சூழ்ந்தது அங்கு அறியப்பட்ட இடதுசாரிகள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர். எட்டுப்பேருக்கு 21 யூன் 1886ல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதில் நால்வர் நவம்பர் 11ம் திகதி 1887ல் தூக்கிலிடப்பட்டனர். ஏனைய நால்வரும் 1893 யூன் 26ல் கவர்னரால் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். கெய் மார்க்கட் சதுக்கம் புதிய உலகுக்கான அடையாளமானது.1889ல்பிரான்ஸ்தலைநகர் பாரிஸில் கூடிய இரண்டாவது அகிலத்தின் காங்கிரஸ் சிக்காக்கோ கேய் மார்க்கட் போராளிகளின் ஞாபகார்த்தமாக மே 1ம் திகதியை சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் விடுமுறை தினமாக அறிவித்தது. தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகளுக்காகச் சிந்திய இரத்தத்தின் அடையாளமாக சிவப்புக்கொடி மாறியது..

# செய்திக்கண்ணோட்டம்

## இலங்கை:–

01.04.2009

- வன்னியில் 28.01.2009தொடக்கம் 7.03.2009வரை 2683 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 7241பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

02.04.2009

- இலங்கைத் தமிழர்களுக்காக நிதிதிரட்டிய அ.அ.தி.மு. கழகப் பொதுச்செயலாளர் செல்வி.ஜெயலலிதா 2கோடி,11லட்சத்து 89 ஆயிரம் இந்திய ரூபாய்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தென் பிராந்தியப் பொறுப்பாளரிடம் கையளித்துள்ளார்.

04.04.2009

- ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் வவுனியா சென்று அரசால் பராமரிக்கப்படும் அகதிமுகாம்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளனர்.

05.04.2009

- யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் யாழ் உதயன் பத்திரிகைக் காரியாலயம் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.
- ஊடகவியலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்காத நாடுகள் வரிசையில் இலங்கை முதலிடம் வகிப்பதாகவும் பாக்கிஸ்தான் ஆப்கானிஸ்தான், பங்களதேஷ், இந்தியா,நேபாளம் நாடுகளும்முன்னணி வகிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

06.04.2009

- இலங்கையில் 49.000 தமிழ் விதவைப் பெண்கள் இருப்பதாகவும் இதில் 35.000 பெண்கள் 30 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் எனவும் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

07.04.2009

- தென்ஆசியாவில்''துணிச்சல் மிக்க பெண்''என்ற விருதை இலங்தைத் தமிழ் நீதிபதி.ஸ்ரீநிதி.நந்தசேகரனுக்குக் கிடைத்துள்ளது. இந்த விருதை அமெரிக்க இராஜாங்க அமைச்சு வழங்கியுள்ளது.

09.04.2009

- கடந்த 2வருடங்களில் இலங்கை அரச படையினரால் 77.000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

10.04.2009

- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் த்லைவர் இலங்கை சென்று உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

11.04.2009

- உலகின் மிக ஆபத்தான பகுதியாக வன்னியின் பாதுகாப்பு வலயமே என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

12.04.2009

- இலங்கை ஜனாதிபதி லிபியா நாட்டிற்குச் சென்று தலைவர் கேணல் கடாபியுடன் பேச்சுவார்த்தை. நிதி உதவியும் பெற்று நாடு திருப்பினார்.

14.04.2009

➢ 1.1.2009தொடக்கம் 23.3.2009வரை வன்னிப்பிராந்தியத்தில் 3546பேர் பலியாகியிருப்பதாகவும் 8370பேர் காயப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

14.04.2009

➢ முப்படைகளின்தளபதிகள் பொலிஸ்மா அதிபர் அரசியல்வாதிகளோடு ஜனாதிபதி மகிந்தா கிளிநொச்சி சென்று புதுவருடக் கொண்டாட்டங்களை படைத்தரப்பினருடன் கொண்டாடியுள்ளார்.

15.04.2009

➢ பசி பட்டினி காரணமாக வன்னிப்பிராந்தியத்தில் போஷாக்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை வீதம் 2வீதத்திலிருந்து 69 வீதமாக அதிகரித்துள்ளதாக சுகாதாரவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

16.04.2009

➢ வவுனியாவில் அமைக்கப்பட்டிருக்கும் தடைமுகாம்களில் திட்டமிட்ட பாலியல் கொடுமைகள் கொலைகள் இடம்பெற்றுவருவதாக ஜேர்மனிய எழுத்தாளரும் மனிதஉரிமைவாதியுமான தோமஸ் தெரிவித்துள்ளார்.

17.04.2009

➢ தொடரும் வன்னி யுத்தத்தால் கடந்த 4 மாதங்களில் 6500பேர் பலியாகியிருப்பதாகவும் 14.000பேர் காயமடைந்திருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் தாபன அறிக்கை தெரிவித்துள்ளது.

18.04.2009

➢ இலங்கைத் தமிழர் பிரச்சனையால் தமிழகத்தில் மேலும் ஒருவர் பலி. இவரோடு உலகம் பூராவும் தீக்குளித்துப் பலியானவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

20–04.2009

➢ கொழும்பிலிருந்து வெளியாகும் சுடர்ஒளிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் 2 மாத பொலிஸ் தடுப்புக்காவலின் பின்பு விடுதலை செய்யப்பட்டார்.

21.04.2009

➢ போரின் கொடுமையால் கொல்லப்பட்ட (ஆண் பெண் வயோதிபர் சிறார்கள்) தமிழர்கள் சுமார் 100 பேரின் உடல்கள் அடையாளம் காணப்படாத நிலையில் வவுனியா வைத்திய சாலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

22.04.2009

➢ யாழ் குடாநாட்டில் மட்டும் தற்போது 4631 சிறார்கள் தாய் தந்தையரை இழந்து அரச தாபனங்களில் வாழ்கிறார்களென அரச செயலக அறிக்கை தெரிவித்துள்ளது.

23.04.2009

➢ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக தற்போதய தழிழ் அமைச்சர் கருணா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

24.04.2009

➢ தந்தை செல்வாவின் 32வது நினைவு தினம் தமிழர் வாழும் நாடுகளில் அனுட்டிக்கப்பட்டது.

28.04.2009

➢ பிரித்தானியா, பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் இலங்கையில் ஜனாதி பதி மற்றும் வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது. இவர்கள் வவுனியா சென்று இடம்பெயர்ந்து வாழும் மக்கள் முகாம்களைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

## ஜேர்மனி:–

01.04.2009

- Opel கார் கம்பனியில் இவ்வருடம் 7600பேர் வேலை இழக்கவுள்ளனர்.

02.04.2009

- 2008ம் ஆண்டில் போதைவஸ்த்துப் பாவனையால் 1450பேர் இறந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

03.04.2009

- தென்பிராந்தியப் பாடசாலை பழைய மாணவன் (17வயது) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 3ஆசிரியர் 13 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

10.04.2009

- ஆப்கானிஸ்தானுக்கு 80 மில்லியன் யூரோவை அரசு வழங்கியுள்ளது தலைநகர் காபூலில் மட்டும் 8லட்சம் மக்கள் குடிநீருக்கு அவலப்படுகிறார்கள்.

15.04.2009

- 2008ம் ஆண்டில் 4.50.000 மாணவர்கள் 13 வகுப்பை முடித்து வெளியேறியிருப்பதாக கல்வி அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

18.04.2009

- பிறப்பு வீதம் குறைவடைந்து வருவதாகவும் இறப்பு வீதம் அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

20.04.2009

- 82.மில்லியன் சனத்தொகை கொண்ட ஜேர்மனியில் தற்போது வேலை இல்லாதோர் எண்ணிக்கை 3.6வீதமாகும். உலகப் பொருளாதார நெருக்கடியால் மேலும் இத்தொகை அதிகரிக்கும் என தொழிற் திணைக்களம் தெரிவித்துள்ளது.

24.04.2009

- இங்குள்ள தனியார் பாடசாலைகளில் 6.75.000 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் என கல்வி அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

25.04.2009

- உயரமாகவும்,பருமனாகவும், நிறைகூடியவராகவும் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக ஜேர்மனிய பத்திரிகைச் செய்தி தெரிவித்துள்ளது.

28.04.2009

- பேர்ளினில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தில் பொலிசார் மோதல் தண்ணீர் அடித்து கண்ணீர்ப்புகை அடித்து, தடிஅடி நடாத்திக் கூட்டத்தினர் கலைக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

30.04.2009

- 2008–2009 ஆண்டுக்காக ஜேர்மனியப் பல்கலைக்கழகங்களில் 582 பிரிவுகளில் 5.72.750 மாணவர்கள் அனுமதி பெற்று கல்வியைத் தொடர்கிறார்கள்.

## உலகம்:–

01.04.2009

- உலகப்பொருளாதார நெருக்கடியால் உலகில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் சராசரியாக 5பேர் வேலை இழக்கிறார்கள்.

02.04.2009

- இஸ்ரேலின் தாக்குதலில் சீரழிந்த காஸாப் பிராந்தியத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக 70 நாடுகள் ஒன்று சேர்ந்து 2.8 பில்லியன் யூரோவை வழங்கவுள்ளன.

03.04.2009

- அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஒபாமா முதன்முறையாக இங்கிலாந்து,ஒஸ்திரியா,பெல்ஜியம்,துருக்கி,ஈராக்நாடுகளுக்கு விஜயம் செய்தார்.

04.04.2009

- இவ்வாண்டு இறுதிக்குள் 12.000 அமெரிக்கப் படையினர் ஈராக்கிலிருந்து விடுவிக்கப்படுவார்களென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

05.04.2009

- 2008ம் ஆண்டில் உலகில் வயிற்றோட்ட நோயினால் சுமார் 2 மில்லியன் குழந்தைகள் இறந்திருப்பதாக ஐ.நா.குழந்தைகள் தாபனம் தெரிவித்துள்ளது.

6.04.2009

- உலகில் வன்முறைகள் அதிகமாக நடைபெறும் நாடுகளில் பாக்கிஸ்தான்,ஆப்கானிஸ்தான்,இலங்கை முன்னணி வகிப்பதாக உலக சுதந்திர பாதுகாப்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

07.04.2009

- பரிசுத்த பாப்பரசர் ஆபிரிக்க நாடுகளுக்கான முதல்தடவையாக சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

08.04.2009

- அரபு நாடுகளின் உச்சி மகாநாடு (22 நாடுகள்) கட்டாரில் நடைபெற்றது.
- ஜி–20 நாடுகளின் தலைவர்கள் மகாநாடு பிரித்தானியாவில் நடைபெற்றது.

09.04.2009

- "நேட்டோ" தாபனம் ஆரம்பிக்கப்பபட்டு 60 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

10.04.2009

- 2008ம் ஆண்டில் உலக இயற்கை அழிவுகளால் சுமார் 2 ½ லட்சம் மக்கள் இறப்பு. 270 பில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்திருப்பதாகவும் உலக சுற்றாடல் அமைப்பின் அறிக்கை தெரிவித்துள்ளது.

12.04.2009

- ஆப்கானிஸ்த்தானில் தற்போது 42 நாடுகளைச் சேர்ந்த 62.000 படையினர் நிலைகொண்டுள்ளனர்.

13.04.2009

- இத்தாலியில் அடுத்தடுத்து இடம்பெற்ற பூகம்பத்தால் 270 பேர் பலி. 2700பேர் காயம். 1 லட்சம் பேர் பாதிப்பு.

14.04.2009

- வடகொரியா திடீரென ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொண்டது. அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.

15.04.2009

- ஈராக்கில் தற்போது 1.40.000 அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். 2010ம் ஆண்டில் 50.000 படையினரை திருப்பி அழைக்கப்படுவார்கள் என ஒபாமா அரசு முடிவெடுத்துள்ளது.

16.04.2009

- தற்போது உலக சனத்தொகையில் ஐரோப்பிய நாடுகளில் 65.3 வீதம், 34.7 வீதம் ஆகும்.

20.04.2009

- இனவெறிக்கெதிரான ஐ.நா. சபையின் மகாநாடு சுவீஸ்–ஜெனீவாவில் நடைபெற்றது.

22.04.2009

- அமெரிக்க ஒன்றிய நாடுகளின்(34 நாடுகள்) தலைவர்கள் மகாநாடு ட்ரினிடாட் நாட்டில் நடைபெற்றது.

23.04.2009

- மலேரியா நோயினால் உலகில் வருடமொன்றிற்கு சுமார் 10 லட்சம் மக்கள் மடிந்து வருவதாக உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.

24.04.2009

- தென்ஆபிரிக்க பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 66 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

25.04.2009

- மெக்ஸிக்கோவில் ஏற்பட்ட பன்றிக்காய்ச்சலால் 160 பேர் வரை பலி.2500 பேர்வரை நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

28.04.2009

- 2008ல் உலகில் ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்கா முதலிடம் (34.9 பில்லியன் டொலர்) இறக்குமதியில் சீனா முதலிடம் (13.1மில்லியன் டொலர்) வகித்துள்ளன

30.04.2009

- நெதர்லாந்து மகாராணியின் 71 வது. பிறந்த நாள் கொண்டாத்தில் கார் வண்டியை அத்துமீறி ஓடி அவரைக்கொல்லச் சதி. இந்தச் சம்பவத்தில் 5 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

## அதிசயச்செய்திகள்

01.04.2009

- பிரித்தானியாவில் 68வயது மூதாட்டி ஒருவர் 23 தடவை திருமணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

05.04.2009

- யப்பானில் 100 வயதிற்கு மேற்பட்ட 20.000 பேருக்கு அந்த நாட்டு அரசாங்கம் வெள்ளிப்பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளது.

10.04.2009

- பாரிஸ் ஈவிள் கோபுரம் கட்டப்பட்டு 120 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது. தற்போது இக்கோபுரத்தை புதுப்பொலிவூட்டுவதற்காக 25 வேலையாட்கள் 60 தொன் வர்ணக்கலவைகளைப் பூசியுள்ளனர். வருடமொன்றிற்குச் சராசரியாக 250 மில்லியன் மக்கள் இக்கோபுரத்தைப் பார்வையிடுகிறார்களென புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

15.04.2009

- அமெரிக்கா–லொஸ்எஞ்சலஸ் மாநிலத்தில் பெண்மணி ஒருவர் 115வது பிறந்தநாளை சிறப்பாகக் பொண்டாடினார். அமெரிக்க அதிபர் ஒபாமா வாழ்த்து அட்டை அனுப்பியுள்ளார்.

20.04.2009

- இங்கிலாந்தில் 98வயதுப் பாட்டனார் 3000 மீட்டர் உயரத்திலிருந்து வளையங்கள் ஊடாக நிலத்தில் குதித்து உலக சாதனைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

25.04.2009

- சீனாவில் 25 கோடி ரூபா செலவில் மயில் இறகிலிருந்து திருமண உடை தயாரித்துச் சாதனை படைத்துள்ளனர். இந்த உடையை 8 தொழிலாளர்கள் சேர்ந்து 40 நாட்களில் செய்து முடித்துள்ளனர்.

# உலகில் உள்நாட்டு அகதிகள்

உலகில் நடைபெற்றுவரும் போர்,உள்நாட்டுப்போர்,மற்றும் இயற்கை அனர்த் தங்களால் உலகில் உள்நாட்டு அகதிகளின் எண்ணிக்கை 26 மில்லியன் (2கோடி 60லட்சம்) பேராக உயர்ந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் பிரிவினரின் (UNHCR) அண்மைய அறிக்கை தெரிவித்துள்ளது. மிகக்கூடுதலாக வாழும் அகதிகளின் நாடு களையும் அகதிகளின் எண்ணிக்கையையும் இங்கே காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| Kolumbien | -30.00.000 | Indien | - 6.00.000 |
| Sahara land | -22.00.000 | Indonesien | - 6.00.000 |
| Pakistan | -20.00.000 | Simbabwe | - 5.70.000 |
| Irak | -15.00.000 | Burma | - 5.30.000 |
| Afghanistan | -15.00.000 | Bangladesch | - 5.00.000 |
| D.R.Kongo | -13.00.000 | Jordanien | - 5.00.000 |
| Sudan | -12.50.000 | Srilanka | - 4.60.000 |
| Uganda | -12.40.000 | Kenia | - 3.50.000 |
| Somalia | -10.00.000 | Angola | - 3.40.000 |
| Türkei | -10.00.000 | Russland | - 3.40.000 |
| Algerien | -10.00.000 | Georgien | - 2.70.000 |
| Elfenbeinküste | - 7.10.000 | Serbien | - 2.50.000 |
| Aserbaidschan | - 6.90.000 | Armut land | - 1.50.000 |
| Libanon | - 6.00.000 | | |

**தகவல்:–** „Der Spiegel“ **18.02.09**

# நேரத்தின் மதிப்பு

- ஒரு வருடத்தின் மதிப்பு என்னவென்று பரீட்சையில் தோல்வி அடைந்தவரைக் கேளுங்கள்.
- ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைப்பிரவசமான தாயிடம் கேளுங்கள்.
- ஒரு வாரத்தின் மதிப்பு என்னவென்று வாரப்பத்திரிகை ஆசிரியரிடம் கேளுங்கள்.
- ஒரு நாளின் மதிப்பு என்னவென்று தினக்கூலியில் வேலை செய்பவரைக் கேளுங்கள்.
- ஒரு மணித்தியாலத்தின் மதிப்பு என்னவென்று சந்திக்கக் காத்திருக்கும் காதலரிடம் கேளுங்கள்.
- ஒரு நிமிடத்தின் மதிப்பு என்னவென்று பேரூந்தை,தொடரூந்தைத் தவறவிட்டவர்களிடம் கேளுங்கள்.
- ஒரு வினாடியின் மதிப்பு என்னவென்று ஒரு விபத்தில் உயிர் தப்பியவரைக் கேளுங்கள்.
- ஒரு மில்லி செக்கனின் மதிப்பு என்னவென்று ஒலிம்பிக் போட்டியில் வென்றவரைக் கேளுங்கள்.

**செல்வன் வி. திவாகரன்**
**சுன்னாகம்**

# பொன்மாலைப்பொழுது

பன்னிரண்டாவது ஆண்டில யூன் 10ம்திகதி தடம்பதிக்கும் இலண்டன் தமிழ் வானொலி அடுத்த தலைமுறை நோக்கி சிறுவர்களையும் இளையவர்களையும் தமிழ்மொழியோடு வளர்த்தெடுத்து வருகிறது. அவர்களுக்கு என நான்காவது ஆண்டாக யூன் 1ம்திகதி முதல் யூன்10ம் திகதி வரை புலம்பெயர் சிறுவர் எழுத்தாளர் வாரமதை ஆண்டு நான்காக அமுலாக்கி, பலநாட்டு அமைப்பு களுடனும், கலாச்சார நிறுவனங்களுடனும் பல பிறநாட்டு பிரமுகர்களுடனும் இணைந்து தன் பணியை விரிவாக்கி வெற்றிகண்டுள்ளது. Firstaudio Germany eV. என்ற பதிவு பெற்ற அமைப்பாகவும் ஜேர்மனி,சுவிஸ்,இலண்டன் போன்ற நாடுகளில் தன் கலையகங்களை கொண்டும் ஒலிபரப்புகளை செய்து வருகிறது. பல்மொழித்திறனில் சிறுவர்களை உருவாக்குவதிலும், தன்னார்வத்திறன்களை வெளியாக்குவதிலும், எம்மவர் கலைத் திறன்களை அரங்கேற்றி எம்மவர் உருவாக்கங்களை ஊக்குவிப்பதிலும் தனக்கென தனிமுத்திரை பதித்துள்ள இலண்டன் தமிழ்வானொலியில் இதுவரை 3000ற்கும் மேற்பட்ட சிறார்கள் எழுதி மொழிகொண்டு வளர்ந்துள்ளார்கள். பெருமுயற்சி கொண்டு, அயராத பணியுடன், அனைவரையும் ஊக்குவிக்கும் இலண்டன் தமிழ் வானொலி அதிபர் திரு. நாடாமோகன் அவர்களின்அயராத பணிக்கும் அர்பணிப் பிற்கும் எழுத்தாளச்சிறாரார்கள் மிகுந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கிறார்கள். இதனைபிரசுரமாக்கும் பத்திரிகைத் துறையினருக்கும் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கும் புலம்பெயர் தமிழ்ச்சிறுவர் எழுத்தாளர்கள் உங்களின் ஊக்குவிப்புக்களையும் துறைசார்ந்து, வாழ்த்துக்களையும் கோரியும் விடை பெறுகிறார்கள்.



இலண்டன் தமிழ் வானொலியின் மேடை நிகச்சிகள் எம்மவர் கலைத் திறன்களின் சங்கமமாய் 10 ஆண்டிற்கு மேலாக 90ற்கு மேற்பட்ட மேடை நிகழ்ச்சிகளையும் சிறுவர் இளையவர்களின் பல்மொழித்திறனையும் வளர்த்து வருகின்றது. தாயக நிலமை காரணமாய் இவ்வாண்டு மேடை நிகழ்வுகளைச் சுருக்கி 91, 92, 93வது பொன்மாலைப் பொழுதுகள் ஒன்றுகூடலாய் France மற்றும் Germany யில் நடைபெற்றது.

**செல்வன் துவாரகீஸ். ஜெகதீசன்**
**ஜேர்மனி**

# இலங்கை மேல்மாகாணசபைத் தேர்தல்

இலங்கை மாகாணங்களில் ஒன்றான மேலமாகாண சபையின் தேர்தல் நடைபெற்றுள்ளது. இலங்கை நாட்டை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரே அமோக வெற்றி பெற்றிருக்கிறார்கள். இத்தேர்தல் பற்றிய சில புள்ளிவிபரங்களை இங்கே பார்க்கலாம்.

- கொழும்பு,கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதே மேல் மாகாண சபையாகும்.
- **104** உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
- இத்தேர்தலில் **2378**பேர் போட்டியிட்டனர்.
- **38**அரசியல் கட்சிகளும் **23** சுயேட்சை குழுக்களும் போட்டியிட்டன.
- மூன்று மாவட்டங்களிலும் **769** வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவுகள் இடம்பெற்றன.
- மூன்று மாவட்டங்களின் வாக்காளர் எண்ணிக்கை **38.20.214.**

| கட்சிகள் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை |
|---|---|---|---|
| ஐக்கிய ம.சு.கூட்டமைப்பு | 5.30.370 **(25)** | 6.24.530 **(27)** | 3.51.215 **(14)** |
| ஐக்கிய தேசியக் கட்சி | 3.27.571 **(15)** | 2.36.530 **(10)** | 1.24.426 **(05)** |
| மக்கள் வி.முன்னணி | 21.787 **(01)** | 21.491 **(01)** | 13.106 **(01)** |
| முஸ்லிம் காங்கிரஸ் | 18.978 **(01)** | 18.014 **(01)** | ---------- |
| ஜனநாயக.ஐ.முன்னணி | 11.970 **(01)** | --------- --------- | |

**பெற்ற ஆசனங்கள் ( )**

## ஒரே பார்வையில் தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கியமக்கள்சுதந்திரகூட்டமைப்பு | - 15.06.115 | - 68 |
| ஐக்கிய தேசியக்கட்சி | - 6.88.253 | - 30 |
| மக்கள்விடுதலைமுன்னணி(J.VP) | - 56.384 | - 03 |
| முஸ்லிம் காங்கிரஸ் | - 49.388 | - 02 |
| ஜனநாயகஐக்கியமுன்னணி | - 11.970 | - 01 |

குறிப்பு:—இத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) முஸ்லிம் காங்கிரசும் எதிர்பாராத தோல்வியைச் சந்தித்துள்ளன.

# இந்தியத் தேர்தல் முடிவுகள்







இந்தியத் தேர்தல் தொகுதிகள்: **543**

| **கட்சிகள்** | **வெற்றி** |
|---|---|
| காங்கிரஸ் கூட்டணி | 262 |
| பாரதிய ஜனதாக் கூட்டணி | 157 |
| இடதுசாரிகள் அணி | 67 |
| நான்காவது அணி | 27 |
| ஏனைய கட்சிகள், சுயேட்சைகள் | 30 |
| **மொத்தம்** | **543** |

இந்தியாவின் பதினைந்தாவது மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக் கூட்டணி பெருவெற்றியீட்டியுள்ளது. ஏனைய ஆதரவுக் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு 63 அமைச்சர்களுடன் மன்மோகன்சிங் மீண்டும் இரண்டாவது முறை பிரதமராகிறார். இத்தேர்தலில் பாஜக தோல்வியைத் தழுவியது. மார்க்சிஸ் கட்சி பெருந்தோல்வியைத் தழுவியதோடு தேசியக்கட்சி என்ற அந்தஸ்தையும் இழந்துள்ளது.

# இந்தியத் தேர்தலின் தமிழ்நாடு முடிவுகள்:

| **தமிழ் நாடு: 39** | **புதுச்சேரி: 01** | **மொத்தம் : 40** | |
|---|---|---|---|
| **கட்சிகள்** | **போட்டியிட்டது** | **வெற்றி / வீதம்** | |
| திமுக | 21 | 17 | 25.1 |
| காங்கிரஸ் | 16 | 09 | 15.3 |
| வி.சிறுத்தைகள் | 02 | 01 | |
| முஸ்லிம்லீக் | 01 | 01 | |
| **திமுக கூட்ணி** | **40** | **28** | |
| அதிமுக | 23 | 09 | 22.9 |
| மதிமுக | 04 | 01 | 3.6 |
| பாமக | 07 | 00 | 5.7 |
| மா.கம்யுனிஸ்ட் | 03 | 01 | 2.2 |
| இ.கம்யுனிஸ்ட் | 03 | 01 | 2.8 |
| **அதிமுக கூட்டணி** | **40** | **12** | |
| மொத்தம் | 40 | 40 | |
| தேதிமுக(விஜயகாந்) | 40 | 00 | 10.1 |
| பாஜக | 13 | 00 | 2.3 |
| சமக (சரத்குமார்) | 05 | 00 | |
| ஐ.ஜனதாதளம் | 02 | 00 | |
| நாமக (கார்த்திக்) | 02 | 00 | |
| மனிதநேய மக | 04 | 00 | |
| புதியதமிழகம் | 01 | 00 | |

இத்தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை முன்வைத்து வாக்கு வங்கியை நிரப்ப முயன்ற அதிமுக, பாமக, மதிமுக ஆகிய கட்சிகளுக்கு மக்கள் பாடம் புகட்டியுள்ளனர். குறிப்பாக வைகோ, இராமதாஸ் ஆகியோருக்கு படுதோல்வியை மக்கள் அளித்துள்ளனர். ஆனாலும் இலங்கை யுத்தத்தில் முழுப்பாத்திரம் இந்தியா வகுக்கிறது. அதில் ஆளும் காங்கிரஸ் கூட்டணிக்குப் பெரும்பங்கு உண்டு என்ற பிரச்சாரத்தினால் தமிழக காங்கிரஸ் தலைவர்களான கேவி. தங்கபாலு, இளங்கோவன், மணிசங்கரஐயர் போன்றோர் படுதோல்வியைத் தழுவியுள்ளனர்.

## பிரபலங்கள் சிலரின் முடிவுகள்:

இராமநாதபுரத்தில் 15 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் நடிகர் ரித்திஸ் 69ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மத்தியசென்னையில் 37 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் தயாநிதிமாறன் 33454 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

நீலகிரியில் 14பேர் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ஆ.இராசா 85547 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

கன்னியா குமரியில் 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் ஜே.ஹெலன் டேவிட்சன் 65564 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். தமிழ்நாட்டில் 48 பெண்கள் போட்டியிட்டனர். அவர்களில் வெற்றிபெற்ற ஒரே பெண் ஜே.ஹெலன் டேவிட்சன் ஆகும் இந்தியாவில் 58 பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூ ர் தொகுதியில் 32வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பாலு 25, 544 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

பெரம்பலூ ர் தொகுதியில்21வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் நடிகர் நெப்போலியன் வெற்றி பெற்றுள்ளார்.

வட சென்னை பாராளுமன்ற தொகுதியில் தா.பாண்டியன் (இந்திய கம்யூனிஸ்டு) உட்பட 24பேர் போட்டியிட்டனர். இதில் தா.பாண்டியன் 14 வாக்குகள் வித்தியாசத்தில் இளங்கோவனிடம் (திமுக) தோல்வியைத் தழுவினார்.

கள்ளக்குறிச்சி தொகுதியில் 28 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இங்கு விஜய டி.ராஜேந்தர் (லட்சிய தி.மு.க.), போட்டியிட்டார். இதில் திமுக வேட்பாளர் ஆதி.சங்கர் வெற்றி பெற்றுள்ளார். ராஜேந்தர் 8500 வாக்குகள் பெற்றார்.

மதுரை தொகுதியில் 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் மு.க.அழகிரி 1,40,985 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

சிவகங்கை பாராளுமன்ற தொகுதியில் மொத்த 20 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் (காங்கிரஸ்) 3354 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

விருதுநகர் தொகுதயில் வைகோ (ம.தி.மு.க.), நடிகர் கார்த்திக் (அஇநாமக்கள் கட்சி) உட்பட 16 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் வை.கோபலசாமி மாணிக்க தாகூரிடம் (காங்கிரஸ்) 17ஆயிரம் வாக்குகளால் தோல்வியைத் தழுவினாார். கார்த்திக்கு 10ஆயிரம் வாக்குகள் கிடைத்தன.

சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உட்பட 13 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தொல். திருமாவளன் 99414 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மயிலாடுதுறை தொகுதியில் முன்னாள் அமைச்சர் மணிசங்கர் அய்யர் (காங்கிரஸ்)உட்பட 23 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் அதிமுக வேட்பாளர் ஓ.எஸ்.மணியன் வெற்றி பெற்றுள்ளார்.

திருச்சி தொகுதியில் நடிகர் மன்சூர் அலிகான் (லட்சிய தி.மு.க) உட்பட 24 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் அதிமுக வேட்பாளர் குமார் 3400 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

சேலம் பாராளுமன்ற தொகுதியில கே.வி.தங்கபாலு (காங்கிரஸ்) செம்மலை (அ.தி.மு.க.) 23 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் அதிமுக வேட்பாளர் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவை விட 46252 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

நடிகர் விஜயகாந்தின் தேதிமுக கட்சி கடந்த சட்டசபைத்தேர்தலில் 27 இலட்சம் வாக்குகுள் பெற்றது. இம்முறை 35 இலட்சம் வாக்குகுள் 10.1 வீதம் பெற்றுள்ளது. அதிமுக, காங்கிரஸ் கட்சிகளின் வெற்றிவாய்ப்புகளை விஜயகாந்தின் கட்சி தடுத்திருக்கிறது.



# மனிதத்தின் குரலாக . . .

- இவர் கரவெட்டி மேற்கில திரு. திருமதி மரியாம்பிள்ளை மேரி இராசமணி தம்பதியினரின் 10 பிள்ளைச் செல்வங்களில் 4வது புதல்வராகப் பிறந்தார்.
- 1977-1983 வரை இலங்கை வங்கியின் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் 1983ல் இறையழைத்தலுக்குச் செவிகொடுத்து குருமடத்தில் இணைந்து கொண்டார்.
- 1989ல் இளவாலையில் திருத் தொண்டராகவும் 1989-1990வரை பாஷையூரின் உதவிப்பங்குத் தந்தையாகவும் பணிசெய்தார்

**பணித்தளங்களில்...**

- வலைப்பாடு-இரணைதீவு (1990-1993)

இக்காலப்பகுதியில் இலங்கை கடற்படையினரின் இன்னல்களுக்குட்பட்ட இரணைதீவு மக்களை முழங்காவில் பிரதேசத்தில் இரணைமாதா நகர் என்ற கிராமத்தை உருவாக்கிக் குடியேற்றினார்.

- தாளையடி - செம்பியன்பற்று (1993-1995)
- மானிப்பாய் (1995)

இக்காலத்தில் யாழ்குடா நாட்டு மக்கள் பாரிய இடம்பெயர்வைச் சந்தித்த போது மக்களோடு மக்களாக இவரும் இடம் பெயர்ந்து மாங்குளத்தில் குடியேறினார். ஆசிரியப் பணி புரிய வாய்ப்பேற்பட்ட போது அதனைக் கைவிட்டார். யாழ் மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

- மாங்குளம் (1995-1996)
- மல்லாவி- வவுனிக்குளம் (1996-2002)

இக்காலப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவராகச் செயற்பட்டதுடன் வெரித்தாஸ் வானொலியின் யாழ் இணைப்பாளராகவும் செயற்பட்டார். அதே வேளை "விருட்சம்" என்ற சஞ்சிகையையும் மாதாந்தம் வெளியிட்டு வன்னி மக்களின் ஆக்கத் திறனுக்கு களமமைத்துக் கொடுத்தார். மேலும் வவுனிக்குளப் பகுதியில் காட்டை களனியாக்கி அழகிய பூந்தோட்டம் அமைத்து தவக்கால வழிபாட்டுக்குரிய "கல்வாரிப் பூங்கா"வை உருவாக்கினார்.

- அச்சுவேலி (2002-2003)
- நாவாந்துறை (2003-2005)

இக்காலம் முதல் வடக்கு கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் பணிப்பாளராகச் செயற்பட்டார்.

- பளை (2005-2007)
- வவுனிக்குளம் (2007-2008)

20-04-2008ல் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் தாக்குதலில் கிறிஸ்துவின் பலியில் பங்குகொண்டார்.



## பணிகள் பற்றிய பார்வை

எங்கள் அன்புத்தந்தை ஆசான் எல்லோராலும் செல்லமாக கிளி பாதர் என அழைக்கப்படும் அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் மல்லாவியில் கோழைத்தனமான தாக்குதலில் 20–04–2008ல் கொல்லப்பட்டுவிட்டார். மிகுந்த வேதனை ஒருபுறமும் ஆத்திரம் இன்னொரு புறமும் இருந்த அதே நேரம் அவரின் பணிகளை நினைக்கும்போது அவற்றைத் தொடர்ந்து நாங்கள் முனைப்போடு அதில் ஈடுபடவேண்டிய காலகட்டமாக இருக்கின்றது. அவர் வெறும் பங்குத்தந்தையாக ஒரு குறிப்பிட்ட சமய மக்களிற்காகப் பங்காற்றவில்லை மாறாக எல்லாச் சமயத்தவர் அனைத்துப் பிரதேசத்து மக்களிற்கும் பங்காற்றியதுடன் மண்ணின் விடுதலைக்கும் மக்களின் சமூக விடுதலைக்குமாக மிகப்பெரிய பங்காற்றினார்.

போர் நெருக்கடியான காலப்பகுதிகளில் குறிப்பாக 1995,1996 மற்றும் 1997 ஜயசிக்குறு காலப் பகுதிகளில் மிகக்கடுமையாக இரவு பகலாகப் பாதிக்கப்பட்ட மக்களிற்காகவும், மக்கள் துன்ப துயரங்களை வெளி உலகிற்கு கொண்டு வருவதற்கும் நன்கு உழைத்தார். சில சமயங்களில் தனது குரு முதல்வர் கோட்ட முதல்வர்களினதும் கண்டிப்புக்கள் மத்தியிலும் தனது சக்திக்கு மீறிய பணிகளை ஆற்றினார். 1995ம் ஆண்டில் இரணைமாதா நகர்ப்பகுதியில் அவரது பங்கு இருந்தபோது அவர் இடம்பெயர்ந்த மக்களிற்கான பணியில் மிக ஆழமாக தன்னை ஈடுபடுத்தினார். அதனைத் தொடர்ந்து படிப்படியாகத் தனது கடமைகளை விரிவுபடுத்தி தனது கடமைகளைச் செய்தார். போரினால் ஏற்பட்ட துன்பங்களையும் வடுக்களையும் ஆற்றுவதனைச் சந்தர்ப்பமாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுடன் வரும் சர்வதேச நிறுவனங்களை இலகுவாக இனம்கண்டு அவர்களிடம் மிக இறுக்கமாக இருந்து அவர்களை எமது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நகர்த்துவதில் அவர் சிறந்தவர். 1998ம் ஆண்டிலிருந்து அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவராக இருந்து செயற்பட்ட அருட்தந்தை மிகவும் கண்டிப்புடன் அதே நேரம் பக்குவமாகச் சர்வதேச நிறுவனங்களைஅணுகிமக்களிற்கானநிவாரணங்களை பெற்றுக் கொடுத்தது மட்டுமல்ல மக்களின் துன்ப துயரங்களைச் சர்வதேச நிறுவனங்களுக்கும் எடுத்துரைத்தார்.

அக்காலத்தில்தான் வெரிதாஸ் தமிழ்ப்பணிக்கு வடபகுதித் தொடர் பாளராகவும் பணியாற்றி மக்களின் துன்பங்களையும் போரின் தன்மைகளையும் வெளி உலகத்திற்கும் கிறிஸ்த்தவ உலகத்திற்கும் தெரிவித்துக்கொண்டு இருந்தார்.தனது பங்கு மக்களிற்கான பணிகளுடன் தேசவிடுதலைக்கான பங்கிலும் மிகத்தீவிரமாக உழைத்ததுடன் தனிப்பட்ட ரீதியிலும் போராளிகள்,பொதுமக்கள், பொதுச்சேவை புரிவோர்கள் மத்தியிலும் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களுக்கு உளவியல்,ஆங்கிலமொழி பொதுச் சேவை மக்கள் மத்தியில் எவ்வாறு பணிபுரிய வேண்டும் எனத்தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் வகுப்பு எடுப்பார் அல்லது கதைத்துக்கொண்டு இருப்பார்.

1997,1998ம் ஆண்டு காலப்பகுதியில் மல்லாவியில் அவர் வசித்து வந்த வீடும் இப்போது நினைவுக்கு வருகிறது. நாங்கள் அடிக்கடி அவரிடம் சுகம் விசாரிப்பதற்காகச் செல்வோம். நன்றாக உணவு சமைத்து வைத்திருப்பார். உண்மையில் அதற்காகவே செல்வோம். அவரின் வீடு திறந்தே இருக்கும் நாங்கள் எங்கள்பாட்டில் சாப்பிட்டு விட்டுச் சென்றுவிடுவோம். அவரின் உணவுமுறை வீடு உட்பட அவரின் வாழ்க்கைமுறை சாதாரண மக்கள் போன்றிருக்கும். மழை நேரம் வீட்டிற்குள் தண்ணீர் நிற்கும் ஆனால் அதனைப்பற்றிப் பொருட்படுத்துவதில்லை. ஜயசிக்குறுக் காலப்பகுதியில் எரிபொருளுக்கு மிகுந்த தட்டுப்பாடு பெற்றோலுக்குப் பதிலாக வடி மண்ணெண்ணையிலிருந்து ஆவியாக்கி வடிக்கப்படும் எரிபொருள் அத்தடன் மண்ணெண்ணையும் கலந்து தனது மோட்டார் சைக்கிளிற்குப் பாவிப்பார் ஆனால் கூடுதலாக நாங்கள் வீதியோரம் அவரைப் பார்க்கலாம். மோட்டார் சைக்கிளை ஸ்ரார்ட் பண்ணிக்கொண்டிருப்பார். அல்லது உருட்டிக்கொண்டு செல்வார். ஏன் நான் இவைகளைக் குறிப்பிடுகிறேன் எனில் கடமையைச் செய்வதற்காக அவர் வசதிகளையும் வளங்களையும் எதிர்பார்த்து இருந்ததே இல்லை. அதே நேரம் அவர் கடமை நேரங்களில் நேரத்தினை மதித்துச் செயற்படுவார்.

எம் மத்தியில் இப்போதும் நாங்கள் நேர ஒழுங்கைக் கடைப்பிடிப்பதில்லை அதற்கான காரணங்களைச் சொல்லிக்கொண்டு இருப்போம். ஆனால் அவரிடம் எந்தக் காரணங்களையும் கூறமுடியாது. இதனால் அவருடன் முரண்பட்டும் இருக்கிறோம். வவுனிக்குளம் தேவாலயத்தில் தனது பூசைகளைக் கவனித்துக்கொண்டு மல்லாவிப் பங்கில் தனது பணிகளை 2002 வரை செய்துகொண்டிருந்தார். அந்தத் தேவாலயம் பல முறை சிங்களப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி இருந்தாலும் அதனை விட்டகலாது மக்களிற்கு நம்பிக்கை ஊட்டினார். தமிழீழ இயற்கை வளங்களை எப்படிப் வளம்படுத்த வேண்டும், எவ்வா்று சிக்கனமாக எளிமையாக வேலை செய்யவேண்டும் என்பதற்கு அவரின் வவுனிக்குளம் பூங்கா அந்தக்காலப்பகுதியில் போராளிகள் பொதுமக்களுக்கு ஓர்

எடுத்துக்காட்டாக இருந்தது. சமாதானக் காலப்பகுதியில் மக்களின் பாதிப்புக்கள் அவர்களின் உரிமைகள் தொடர்பாக வெளி உலகிற்குக் கொண்டு வருவதுடன் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கும் அதன் செயற்பாடுகளைத் தாயகத்தில் சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்குமாக உருவாக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இறுதியாகக் கையேற்று மிகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

சமாதான காலப்பகுதியில் வருகைதந்த சமாதான இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமை நிறுவனங்களிற்கும் தாயகத்தின் மனித உரிமைச் செயற்பாடுகள் பற்றியும் சிங்கள அரசால் எம்மக்கள்மீது மேற் கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தெரிவித்துக்கொண்டே இருந்தார். தாயக விடுதலைப் போராட்டமானது தனித்து மண் விடுதலைப் போராட்டமன்றி ஒட்டுமொத்தமான மனித சமுதாய விடுதலையின் விழுமியங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது என்பதனை மேற்குலகத்திற்கு நிறுவுவதில் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இன்றி அமையாதனவாக இருந்தன. அவர் தான் சார்ந்த சபைக்காக உழைத்தார் என்பதனைவிட விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்தார் என்றே கூற வேண்டும். சொல்லிலும் செயலிலும் எப்போதுமே ஒத்த தன்மையுடன் செயற்பட்ட அருட்தந்தையின் இழப்பு எமக்குப் பேரிழப்பாகும். அவரின் செயற்பாடுகளை எமக்குப் பாடமாகக்கொண்டு அவரது பணிகளையும் சேர்த்து முன்னெடுப்போம்.

**கே. பி. அறிவன்**

## "விருட்சம்" முதலாம் ஆண்டு நினைவு மலரிலிருந்து...

**அவரைப்பற்றிச் சிலர்!...**

சிறு வயதிலேயே குருத்துவக் கல்லூரிக்குப் போய் குருவாக வந்தவர் களைத்தான் எனக்குத் தெரிந்திருந்தது. வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த கிளியண்ணை குருவாக வருவதற்காகக் குருத்துவக் கல்லூரிக்குப் போகப் போகிறார் என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

**–கருணா– கனடா**

கிறிஸ்த்துவுக்குப் புகழ்பாடிய மக்களை வரவேற்கும் பாசக்கிளியே.. கடவுளின் கல்வாரிப் பலியை கண்ணியமாய் உவந்தளித்த பணியாளனே திருச்செபமாலையைக் கரமேந்தி போர்ாடு என்று துன்புறும் மானிடருக்குத் துணிந்து குரல் கொடுத்த உத்தம துறவியே அஞ்சலிக்கிறோம்.

**–தி.மரிய டொறின்– வவுனிக்குளம்**

எல்லோர்க்கும் எல்லாம் ஆகினேன் என்ற பவுல் அடிகளாரின் கூற்றுப்போல சிறியோர்,பெரியோர்,படித்தோர்,பாமரர் ஏழை,செல்வந்தர் என்ற எல்லா நிலைகளையும் கடந்து பணித்தளத்தில் எல்லோரையும் அரவணைத்துப் பணி செய்யும் அர்ப்பணிப்புடையவன்

**–அருட்பணி. மனுவல்பிள்ளை.டேவிட்–அமெரிக்கா**

# துயர் துடைப்போம்!....

பாகம்–7

ஊனம் என்பது மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதனை ஒவ்வொருவரும் உணரவேண்டும். இயற்கையின் மாற்றங்களால் எமக்குப் பிணி,மூப்பு,நரை,திரை இறுதியில் சாக்காடு என்பன ஏற்படுகின்றன. முதுமையில் தலைமுடி அற்றுப்போதல்,பல் விழுதல்,கண்பார்வை மங்குதல், மூளையில் தடுமாற்றநிலை என்று எத்தனையோ விதமான ஊனங்கள் ஏற்படுகின்றன. உலக ஊனமுற்றோர் தினம் என்று கொண்டாடப்படுவது ஊனத்தை மக்கள் உணர்ந்து அதனைப் போக்க விழிப்புணர்வு கொண்டுவரவேண்டும் என்பதற்காகவேதான். இயற்கையில் ஏற்படும் ஊனத்தைக் காட்டிலும் இடையில் வரும் ஊனம்தான் மக்களை அதிகம் பாதிக்கின்றது. பார்வைக்குறைபாடு,கேட்பதில் குறைபாடு,கைகால் ஊனம், மனவளர்ச்சி குன்றியநிலை போன்று பலவித ஊனங்கள் இடையில் வந்து சிக்கி விடுகின்றன.

சமீப காலத்தில் மக்களிடையே உடல் ஆரோக்கியம் பற்றியவிழிப் புணர்வு ஏற்பட்டுள்ளது. அதனால் நல்ல திடகாத்திரமான நோய் நொடியில்லாதவர்கள் கூடத்தங்களது உடலைப் பரிசோதனை செய்துகொண்டு எதிர்காலத்தில் தங்களுக்கு யாதேனும் நோய்வர வாய்ப்பு உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க விடையம் இதே போல தமது பார்வையை ஒரு முறை பரிசோதிக்குமாறு அதற்குரிய பரிகாரங்கள் என்ன எனவும் தெரிந்துகொள்ளவும், கண்பார்வைக் குறைவு ஏற்படாமல் இருக்க வழி என்ன!.. ஏற்பட்டபின் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள் என்ன என்பவற்றைத் தெரிந்து கொள்வதில் எமது வயோதிபர்கள் முக்கியமாகத் தாய்மார் மிகவும் அக்கறை காட்டுகிறார்கள்.

"கண்புரை" நோய் வயதானவுடன் அனைவருக்கும் வரும் ஒரு பிரச்சனைதான். இதற்கு அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டும். சாதாரண ஏழைமக்கள் இதைச் செய்யாதுவிட்டு விடுவார்கள். இதன் விளைவாக முழுக்கண்பார்வையும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆரம்பகட்டப் பரிசோதனையில் நீரழிவு நோய், இதயம் மற்றும் தோல்வியாதி பற்றி அறிந்து அதற்கேற்ப சிகிச்சைக்காகக் குறிப்பிட்ட மருத்துவர்களை அணுகுமாறு அறிவுரை வழங்கியும் பார்வைக் குறைவை நிவர்த்தி செய்ய மூக்குக்கண்ணாடிகள் வழங்கியும் அவர்களைக் காப்பாற்றல் வேண்டும்.

பெரிய கண்ணாடி விற்பனை நிலையங்களில் கோடிக்கணக்கில் மூதலீடு செய்து மிகவும் விலை உயர்ந்த கண்ணாடிகளையும், கண்ணாடிச் சட்டங்களையும் (Frames) வாங்கிப்போட்டு அதற்கான செலவைச் சாதாரண மக்களின் தலைமேல் சுமத்துவது பரவலாக எமது நாட்டில் நடக்கும் ஒரு செயல் குறிப்பாக தேவையற்ற அலங்காரக் கண்ணாடிச் சட்டங்களை விற்பனைக்காக வைத்திருப்பார்கள்.

செல்வந்தர்களும் நவநாகரீகப் பிரியர்களும்தான் இவற்றை வாங்கி அணிவார்கள். ஏழைக்கோ தன் கண்பார்வைதான் முக்கியமேயொழிய நாகரீக மோகம் அல்ல..ஏழைகளுக்கும் வயோதிபர்களுக்கும் உதவும்முகமாக கண்ணாடி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டு துயர்துடைக்கும் பணியில் ஈடுபட்ட விபரம் தொடர்கிறது.

**17.08.1989**ம் வருடம் கீல்நகர செஞ்சிலுவைச் சங்க பிரதம நிர்வாகயான Gräfin.V.Schlieffen என்பவரால் **500** கண்ணாடிகள் இலங்கை மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக வழங்கப்பட்டன அந்தக்கடிதத்தைக் கீழே காணலாம்.

**DEUTSCHES ROTES KREUZ**
KREISVERBAND KIEL

DRK-Kreisverband Kiel · Postfach 1866 · 2300 Kiel 1

2300 KIEL, den 17.08.1989

Postfach 1866
Blocksberg 23
Telefon 51585/86
Bankverbindungen:
Deutsche Bank, Kiel (BLZ 210 700 20) Nr. 0321679
Kieler Spar- u. Leihkasse (BLZ 210 501 70) Nr. 108886
Landkreditbank, Kiel (BLZ 210 601 99) Nr. 1031007
Kieler Volksbank e.G. (BLZ 210 900 07) Nr. 1 064 266
Postgirokonto:
Hamburg (BLZ 200 100 20) Nr. 13574-205

Unser Zeichen:
(in der Antwort bitte angeben)

Herrn
G. Pathmagunaseelan
Staff Officer of
St. John Ambulance

Sri Lanka

Spende von Brillen

Sehr geehrter Herr Pathmagunaseelan,

hiermit überreichen wir Ihnen als Spende eine Anzahl von gebrauchten Brillen zur kostenlosen Weitergabe an Bedürftige.

Mit freundlichen Grüßen

i. V.

A. Gräfin v. Schlieffen
Kreisgeschäftsführerin

'மனித குலத்தின் சேவைக்காக' 'මිනිස් සංහතියේ සේවය උදෙසා' "Pro Utilitate Hominum"

ශාන්ත ජෝන් ගිලන් රථ සංගමය සහ හමුදාව

புனித ஜோன் அம்புலன்ஸ் சங்கமும் படையும்

# The St. John Ambulance Association and Brigade

Estd. 1906

(GOVERNING BODY - NATIONAL ST. JOHN COUNCIL FOR SRI LANKA)
Government Approved Charity. Vide Gazette No. 193 of 5-12-1975
A Voluntary Organization of the Order of the Hospital of St. John

National Headquarters: No.65/11,Sir Chittampalam Gardiner Mawatha,Colombo 02 T'phone:341736
T'phone: (Commdr's Res.) Telegraphic Address: FIRSTAID COLOMBO

Patron:
His Excellency
President of Sri Lanka.

Chief Vice Patron:
Hon.
Prime Minister

Vice Patrons:
Hon. Minister of Health
Hon. Minister of Social Services
Hon. Minister of Education
Hon. Minister of Labour

Chairman (Council) : Dunstan de Alwis, P.C.
Vice Chairman : J. Charitha Ratwatte, Attorney-at-Law
Brig. Dr. H.I.K. Fernando, O.St.J.
Commander & Ex-Off. Vice Chairman : Brig.Dr.H.I.K.Fernando
Principal Surgeon : Brig. Dr. H.I.K. Fernando M.B.B.S. (Cey.), D.A. RCP (Lond). RCS (Eng), O.ST.J.
Director (Association) : Dr. S.M. Samarage
Director (Primary Health Care) : Dr. S.M. Samarage M.B.B.S., M.P.H. (USA). SB St.J.
Treasurer : Mrs. I.S. Jayasinghe F.C.A., M.P.A. (Harvard)

27th July 1995

Our Ref ............................................................................

Mr. G. Pathmagunaseelan,
Headquarters Staff Officer Grade 1,
and Provincial Commissioner(Sabaragamuwa),
St. John Ambulance Association & Brigade,
59, Sri Dhammadara Mawatha, Ratmalana.

Dear Mr. Pathmagunaseelan,

Donation of Spectacles

The St. John Ambulance Association and Brigade in Sri Lanka is fortunate to receive the valuable and much needed gift of spectacles obtained by you through the generosity of the Red Cross in Germany. The gift was received on behalf of the National St.John Council for Sri Lanka and the St. John Ambulance Association & Brigade in Sri Lanka by the two Directors Dr. S.M. Samarage and Mr. R.W.M.G. Rajakaruna and the Administrative Secretary, Mr. U. Pathirana on 15.07.1995.

We also acknowledge your valuable gifts of Video Cassettes in the German Language demonstrating the provision of First Aid to the injured.

You were kind enough to assure further assistance from Germany and we look forward to such assistance in the near future.

On behalf of the National St.John Council and the St. John Ambulance Association and Brigade in Sri Lanka I wish to thank you for the invaluable donation.

Yours in the service of mankind,

Brig.Dr.H.I.K.Fernando,
Commander,

Copy to: Mr. Dunstan De Alwis, P.C.,
Chairman, National St.John Council for Sri Lanka.

NATIONAL ST. JOHN COUNCIL FOR SRI LANKA

Dunstan de Alwis (Chairman)
J. Charitha Ratwatte (Vice Chairman)
Brig. Dr. H.I.K. Fernando O.St.J. (Principal Surgeon Vice Chairman)

Lucian Mellawa (Hony Secretary)
Mrs. I. S. Jayasinghe (Hony Treasurer)
K.P.G.M. Perera (Director Association)
Dr. S.M. Samarage SB. St. J. (Director-PHC)
Mrs. Anula S. Peiris (Principal Superintendent - Nursing)

Mrs. Premila Divakara (Western Province)
Dr. Palitha Randeniya (Central Province)
Mr. Joe Vithanage (Southern Province)
L. N. Kulasuriya SB. St. J. (Matara)
Errol G. Smith (Kalutara)
D. M. Wijeratna Banda (Kurunegala)
Mrs D. Wanigasooriya (Ampara)
Dr. George Fernando. (Health Ministry)
M. W. E. Wijewantha (Director Social Services)
Dunstan de Alwis (Gampaha)

Mrs. P.A Samuel (S.L. Girl Guides Assn.)
G. Weerakoon (Commissioner Labour)
Brig. Dr. C. Thureraja (S.L. Army)
Wing Commander Dr. N.H Gunaratne (SLAF)
M.D. Perera O.St.J. (D.I.G.)
T.H. Jayah (S.P. Police FFHO)
Dr T.H.R. Peiris
Mrs. R.A.N. Perera, (Superintendent-Nursing)
Bandula Padmakumara

இவற்றை நேரடியாகவே சென்று St.John Ambulance (Director. Dr.S.M. Samarage .M.B.B.C, MPH (USA) M.Sc(Com.Med) SB.St.J) டாக்டர் சமரகே என்பவரிடம் கையளிப்கும் படத்தையும் அத்துடன் கொழும்பையும் சுற்று மாவட்டங்களையும் சேர்ந்த தாய்மார்கள் திருமதி.கந்தையா, பெரியம்மா(அவரது பெயர் தெரியவில்லை) திருமதி குமாரசாமி, திருமதி.மாதவன் ஆச்சாரி ஆகியோர் மூக்குக்கண்ணாடிகள் பெற்றுக்கொள்வதற்காகக் காத்திருப்பதையும் இலக்கம் 2 கொண்ட படத்திலும் பரிசோதித்த பின் அவர்களுக்கேற்ற விதமான கண்ணாடிகளைப் பெற்றுக்கொண்ட பின் முகமலர்ச்சியுடனும் சந்தோஷமும் நன்றியுணர்வும் கொண்டு காட்சியளிக்கும் அன்னையரின் தோற்றம் இலக்கம் 3 கொண்ட புகைப்படத்திலும் காணப்படுகின்றது.


1


2


3

உணர்ச்சி ரீதியில் வழங்குவது நம் பெற்றோர்களையும் பாட்டன் பாட்டிமார்களையும் பராமரிப்பதில் வெறும் பொருளாதார ரீதியில் கொடுப்பதைக் காட்டிலும் அதிகம் ஈடுபட்டிருக்கிறது. நம் எல்லோருக்கும் உணர்ச்சி பூர்வமான தேவை இருக்கிறது. நம்மை நேசிக்கவேண்டும். தேவையென்று உணர வேண்டும். விரும்பவேண்டும். குடும்பத்தின் ஓர் அங்கத்தவராக மதிக்க வேண்டும். என்று வயதானவர்கள் உட்பட நாம் அனைவரும் ஆசைப் படுகின்றோம். வயதானவர்களை நேசிப்போம். அன்புடன் பழகுவோம். வயதான வர்களை வைத்துப் பராமரிப்பது சுலபமல்ல ஆனால் அவர்களை எங்களோடு வைத்திருப்பது விலைமதிக்க முடியாதபிரதிபலன்களைக்
கொண்டுவருகின்றது.

**சாதியிரண்டொழிய வேறில்லை யென்றோ**
**தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தம் என்போம்**
**நீதி நெறி இன்று பிறக்குதவும்**
**நேர்மையவர் மேலோர் கீழவர் மற்றோர்!..**

**திரு க. பத்மகுணசீலன்**
**கீல்நகர்–ஜேர்மனி**



## வாழவையுங்கள்!...
## மிகுந்த தாழ்மையான வேண்டுகோள்!...

பெறுமதி வாய்ந்த ''மண்'' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட மோகன தாஸ் என்ற இளைஞரது நிலையை உணர்ந்து கருணைகொண்டு அவருக்கு நிதி உதவ முன்வந்துள்ள திருமதி ரஞ்சனா–தவராஜ் (ஜேர்மனி), திருமதி புஸ்பா–அருமைத்துரை (ஜேர்மனி) ஆகிய இருவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளுடன், தங்கள் நற்பணிகள் தொடரவேண்டுமென வாழ்த்துவதோடு... இரக்கம், அன்பு, பரிதாபம், ஜீவகாருண்யம் மிக்க அன்பர்களிடமிருந்து இவருக்கு உதவிபுரியும் வண்ணம் ''மண்'' சஞ்சிகையின் ஆசிரியருடன் சேர்ந்து கோரி நிற்கிறோம்!.. மண் சஞ்சிகையின் வங்கிக்கணக்கிற்கு உங்கள் உதவிகளை வழங்கலாம்.

–நன்றி–

**திரு க–பத்மகுணசீலன்**
**ஜேர்மனி**

# மல்லிகை'44ஆம் ஆண்டு மலர்

பெரும் சஞ்சிகைகள் விற்பனைப் பலம் கொண்ட தமிழகத்தில் தரமான சிற்றிலக்கிய ஏடுகள் தோன்றிய சில காலத்திலேயே மடிந்த கதைகள் உள்ளன. தமிழகத்தில் தொடர்ந்து வெளிவந்த சிற்றிலக்கிய ஏடு என்று சொல்வதற்கெதுவுமில்லை. இலங்கையில் கூட பெரும் சஞ்சிகைகள் என்ற பெயரில் ஆனந்த விகடனையும் குமுதத்தையும் பின்பற்றி நான்கு வர்ண அழகு அச்சமைப்புடன் இதுவரை வந்த இதழ்களில் எதுவும் தொடர்ந்து வெளிவருவதாகத் தெரியவில்லை.

நான்கு வர்ணப் படங்களின்றி எளிமையோடும் உள்ளடக்கத்தோடும் தொடர்ந்தும் இலங்கையில் 44 ஆண்டுகளாக வெளிவரும் ஒரே சிற்றிலக்கிய ஏடாக மல்லிகையை குறித்து வைப்பதில் மறுப்பேதும் இல்லை.'மல்லிகை வரலாறு' இலக்கிய உலகம் அறிந்ததொன்றே! ஆசிரியரின் நான்கு தசாப்த பங்களிப்பு மல்லிகையை இந்தளவுக்கு வளர்த்து எடுத்ததில் பல்வகையான பின்னணிகள் உள்ளன. அண்மையில் 44ஆம் ஆண்டு மலரையும் ஆசிரியர் வெளியிட்டு "மல்லிகையின் உச்ச நோக்கம் அதனது ஐம்பதாவது ஆண்டு. இந்த உச்ச நோக்கம் நடைமுறையில் நிறைவேற இன்னமும் ஐந்தே ஐந்து ஆண்டுகள் தான் இடையே உள்ளன'' எனவும் ஆண்டு மலரின் முதல் பக்கத்திலேயே குறிப்பிட்டு உள்ளார்.

ஆண்டுமலர் பக்கங்களை ஆறுதலாகப் படித்தபோது ஆழமான சிறுகதைகளை அவை தந்திருப்பதை அறிய முடிகிறது. எல்லாச் சிறுகதைகளையும் விமர்சிப்பதென்றால் தனியான ஆய்வு தேவை. குறிப்பாக 'ஒவ்வொருவர் மறுபக்கம்'.

இது ஒரு சிறுகதை படைப்பாளர் சுதாராஜ். சாதாரணமான சம்பளத்தில் காலம் கழிக்கும் சராசரி மனிதனின் வாழ்வுச் சிக்கலை இக்கதை உணர்த்துகிறது. முப்பதாயிரம் சம்பளம் என்பது இக்காலத்தைப் பொறுத்தவரை அது ஒரு சிறு தொகையே. வாடகை வீட்டில் வாழ்வுப் போராட்டம் நடத்தும் முகங்களை இக்கதை சொல்ல முற்படுகிறது. கடன் வாங்கியவர் மனநிலையையும் சரக்கு சாமான் கடன்கொடுத்தவர் மனநிலையையும் இக்கதை ஒப்புவிக்கிறது. "கடைக்காரர் வேறொரு முகத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார். அந்த முகம் அடிக்கடி தோன்றி இவரது நெஞ்சுவலியைக் காட்டுகிறது.'' "கடையில் உள்ள பொருட்களைப் போலவே கடைக்காரரின் பலவிதமான முகங்கள் இருக்கும் போலும்'' போன்ற வார்த்தைப் படைப்புகள் கடனில் இறுகிய கதாபாத்திரத்தை பதிவு செய்துள்ளது. இத்தகைய தன்மையில் இக்கதை மிக அழகாக வாழ்தலைச் சொல்கிறது. அதே போன்று பஸ்ஸில் செல்வதற்கு போதிய பணமின்றி அக்கதாபாத்திரம் சிக்கலில் தவிக்கும் சில நிமிடங்கள் அதன் மறுபக்கத்தைக் காட்டுகிறது. சுதாராஜ் மிக வெற்றிகரமாக இச்சிறு கதையைக் கையாண்டுள்ளார்.

மலரில் கட்டுரைப் பகுதியில் கம்பவாரிதி இ. ஜெயராஜின் "ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காண'' தட்டுப்பட்டது. "பரத அரங்கேற்றம் யாருக்காக.... ஒன்று மாப்பிள்ளைக்கு. மற்றது செல்வச்செருக்கின் தகுதிக்கு'' எனக் குறிப்பிடுகிறார் கம்பவாரிதி.

கிண்டலான கண்டனத்தோடு (சர்ச்சைக்குரியது என நினைப்பவர்களுக்கு மட்டும்) சற்று சூடேற்றும் விதத்தில் சுவாரஸ்யமான விஷயங்களோடு இக்கட்டுரையானது அவரால் எழுதப்பட்டுள்ளது. உண்மை சிலருக்கு கசக்கும் என்பதை இக்கட்டுரையை முழுமையாக படித்தவர்கள் உணர்வர். 'எழுத்துத்துறையில் ஒரு ரஜனி' என்ற மகுடத்தில் கே.வி.எஸ். வாஸ். அவர்களின் படைப்பாற்றல் குறித்த சில தகவல்களை கட்டுரையாக்கித் தந்துள்ளார் அன்னலட்சுமி இராஜதுரை. ஈழத்துப் படைப்புத் துறையில் புகழ்பெற்று விளங்கிய 'ரஜனி' என்ற புனை பெயரில் எழுதிய கே.வி.எஸ். வாஸின் திறமைகளை அறிய இக்கட்டுரை ஓர் ஆதாரம்.

வை. சாரங்கனின் 'இறந்தவனின் கிலேசம்' வதிரி சி. ரவீந்திரனின் 'பூட்டு' மற்றும் ஸ்ரீ பிரசாந்தனின் மூன்று கவிதைகள் எல். வசீம் அக்ரமின் கவிதைகள் அனைத்தும் மலர்த் தோட்டத்தில் மணம் வீசுவதாய் உள்ளன. ரசிக்கத் தக்கன. செங்கை ஆழியானின் 'எனது இலக்கியத் தொகுப்புகள்' கட்டுரையும் அறியத்தக்க தகவல்களைத் தருகிறது. இன்றைய தலைமுறையினர் இதை அவசியமாய் படிக்க வேண்டும். மேமன் கவி பாடும் நவீன பத்துப் பாட்டில் புதிய பாரதி பாடும் பாட்டும் உண்டு. பத்திலே என்னை மிகவும் கவர்ந்தவை அதில் ஒன்று. "ஓடி விளையாடு பாப்பா

சீட்டுக்குள்ளே ஒளிஞ்சுக்கோ பாப்பா கூடி நிற்காதே பாப்பா கூட்டிட்டு போயிடுவான் பாப்பா காலை எழுந்தவுடன் குண்டுவெடிப்பு பின்பு கவலை தரும் மரணங்கள் மாலை முழுதும் ஊரடங்குஎன பழக்கப்படுத்திக் கொள் பாப்பா'' இன்றைய போர்ச் சூழலை மையமாகக் கொண்டு படைப்புரு கண்டுள்ளது இக்கவிதை. எழுத்தாளர் மு. பஷீரின் சூழல் என்ற சிறுகதையும் மலரில் இடம்பெற்றுள்ளது.

அக்கதை நமது நாட்டில் **1970** களில் தலைகாட்டிய பழைய சம்பவமொன்றை அடிப்படையாகக் கொண்ட நடை பயண அனுபவங்களை சுமந்து வந்துள்ளது. இது பஷீரின் இளம் காலத் தடயங்களாக இருக்குமோ? இன்றைய சூழலுக்கும் இது ஏற்ற கதை. இம் மலரில் வேறு பல சிறுகதைகளும் இடம்பிடித்திருக்கின்றன. தெளிவத்த ஜோசப்பின் 'சாம்பல்' அதில் குறிப்பிடத்தக்க ஒன்று. சமகாலத்து நிகழ்வுகளோடு சங்கமிப்பதோடு இன்றைய நவீன யுக வளர்ச்சிக் கட்டத்தில் 'சாம்பல்' கிட்டாத அனுபவத்தையும் இக்கதை சொல்லி வைக்கிறது. இன்னும் குடும்பச் சூழலை சீரழிக்கும் விஞ்ஞான வெளிச்சமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் அசிங்கமான செயல்பாட்டையும் ஜோசப் அவர்கள் தொட்டுக் காட்டாமல் இல்லை. "யாதும் ஊரே என்பது ஏனிப்படி அர்த்தம் கெட்டுப் போய் இருக்கிறது...?'' என அங்கலாய்க்கிறார் கதாசிரியர். இம் மலரில் பத்மா சோமகாந்தன் வசந்தி தயாபரன் திக்குவல்லை கமால் கெக்கிராவ சஹானா யோகேஸ்வரி சிவப்பிரகாசம் கே.எஸ். சுதாகர் ஆனந்தி ஸ்ரீ ரஞ்சனி தெணியான் ப. ஆப்டீன் ஆகியோரது சிறுகதைகளும் இப்னு அஸுமத் எழுதிய மொழிபெயர்ப்புக் கதையொன்றும் பிரசுரம் பெற்றுள்ளது.

'தொலைபேசி மான்மியம்' தொட்டுக்காட்டுகிற விடயம் சமகாலத்து தேடல்களை வர்ணிப்பதுடன் பிற நாட்டு நம்நாட்டு எழுத்தாளர்களையும் ஒருங்கிணைக்கும் தொடர்பு சாதனமான கைத் தொலைபேசிக்கு சிம்மாசனமிட்டிருக்கிறது. அவுஸ்திரேலியாவில் வாழும் வெ. முருகபூபதி இவ்விடயத்தை தொட்டிருக்கிறார். வாசித்தறிதல் முக்கியம்.

ஏன் எழுத வேண்டும்' என ந. இரவீந்திரனும் பா. இரகுவரன் உடப்பூர் வீரசொக்கன் எஸ்.எச்.எம். ஜமீல் (கிழக்கிலங்கை கிராமியம்) என்பனவும் தகவல்கள் உரைக்கும் கட்டுரைகளாக மலரை அலங்கரித்துள்ளன. இதில் பேராசிரியர் வித்தியானந்தன் குறித்து பாலகிருஷ்ணன் சிவாகரன் எழுதியுள்ள ஆய்வு எழுத்து மல்லிகை மலருக்கு சிறப்பு சேர்க்கின்றது. பிரகலாத ஆனந்த் எழுதிய கட்டுரை ஒன்றும் இதில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மலரின் மூன்றாம் பக்கத்து தலைக் கட்டுரையாக ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் உள்மன உணர்வுகள் பேசுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்க்கை அனுபவங்களை எழுத்தில் பதிய வைக்க வேண்டியது அவசியமானது என்பதை அழுத்தமாகக் கூறி வைக்கிறார். மல்லிகை ஆண்டுமலரில் நிறைய எழுத்துக்கள் நிறைவான விடயங்களைப் பேசுகின்றன. வர்ண விளம்பர அச்சமைப்பு வர்த்தக விளம்பரதாரர்களை நிச்சயம் கவர்ந்திருக்கும் என்பதில் வியப்பேதும் இல்லை. மேமன் கவியினது அட்டைப்பட வடிவமைப்பும் லிகோரி றோசியின் அச்சமைப்பும் பக்க வடிவமைப்பும் ஆண்டு மலரின் தரத்துக்கு ஆதாரங்கள்.

151 பக்கங்களில் அடக்கம் கொண்டுள்ள மல்லிகை ஆண்டு மலரின் விலை 200/=. வரலாற்று ஆவணமாய் இதை இலக்கிய நேசிப்பாளர்கள் பாதுகாத்துக் கொள்வது சிறந்தது. ஆசிரியருடன் தொடர்பு கொண்டு இம்மலரை தபாலிலும் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்!.

ஆசிரியர் மல்லிகை
201/4 ஸ்ரீ கதிரேசன் வீதி கொழும்பு 13
தொலைபேசி: 2320721

## விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 25வது ஆண்டு | – வெள்ளி விழா | 55வது ஆண்டு | – மரகத விழா |
| 30வது ஆண்டு | – முத்து விழா | 60வது ஆண்டு | – மணிவைர விழா |
| 40வது ஆண்டு | – மாணிக்க விழா | 75வது ஆண்டு | – பவள விழா |
| 45வது ஆண்டு | – நீலக்கல் விழா | 80வது ஆண்டு | – அமுத விழா |
| 50வது ஆண்டு | – பொன் விழா | 100வது ஆண்டு | – நூற்றாண்டு விழா |

# உணவும் உடல் ஆரோக்கியமும்

## உயர் இரத்த அழுத்தம் (Hypertension)

உயர் இரத்த அழுத்தம் என்பது இரத்த நாளங்களில் வழக்கத்திற்கு மாறாக மிக அதிக அழுத்தம் ஏற்படுவதாகும். உயர் இரத்த அழுத்தத்தின் அறிகுறிகள் தலைச்சுற்றல்,தலைவலி,மயக்கம், பார்வைக்கோளாறு,மூக்கிலிருந்து இரத்தம் வருதல்,படபடப்பு,அடிக்கடி சோர்வடைதல் போன்றவைகளாகும். மிகவும் அதிக மான இரத்த அழுத்தத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் மூளை, இருதயம், சிறுநீரகம்,கண்கள் போன்றவை பாதிக்கப்பட்டு மாரடைப்பு,பாரிசவாதம் சிறு நீரகச் செயலிழப்பு,கண்பார்வை பாதிப்பு போன்றவை ஏற்படும்.

உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த நல்ல உணவுப்பழக்கம், முறையான உடற்பயிற்சி மற்றும் புகைபிடிப்பதைக் கண்டிப்பாக தவிர்த்தல் அவசியமாகும். இரத்த அழுத்தம் ஏற்படக் காரணம் எவை என்றால் நாம் உண்ணும் உணவு, அதிக உடல்பருமன், உடற்பயிற்சி இன்மை,புகைப்பிடித்தல்,மது அருந்துதல், மன அழுத்தம், சர்க்கரைநோய்,சிறுநீரகக் கோளாறுகள்,மற்றும் பரம்பரைத்தன்மை (Genetic Predisposition) போன்றவைகளாகும்.

நீங்கள் உண்ணும் உணவிற்கும் இரத்த அழுத்தத்திற்கும் மிகுந்த தொடர்புள்ளது. உங்கள் உணவு முறையால் உங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் வரக்கூடும். அல்லது இதன்மூலம் உங்கள் இரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும். ஆகவே ஆரோக்கிமான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் உயர் இரத்த அழுத்தம் வருவதைத் தடுக்கவோ அல்லது உயர் இரத்த அழுத்தம் இருந்தால் அதைக் குறைக்கவோ முடியும்.

**உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கச் சில வழிமுறைகள்:-**

- உணவில் உப்பைக் குறைத்துக்கொள்ளல் வேண்டும்.
- பழங்கள்,காய்கறிகளைத் தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.
- கொழுப்பு உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- கொழுப்பு நீக்கிய பால் மற்றும் தயிர் போன்றவைகளை உணவில் சேருங்கள்.
- தானியங்கள்,தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுகளை அதிக மாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- தவிடு நீக்கப்படாத புழுங்கல் அரிசிச்சோறு, தவிட்டுப்பாண், குரக்கன், ஆட்டாமா போன்றவற்றை உங்கள் உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- உடல் பருமனாக உள்ளவர்கள் உடல் எடையைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

- புகைப்பிடித்தல்,அளவுக்கு அதிகமாக மது அருந்துதல் போன்ற பழக்கங்களை அறவே நீக்கிவிடுங்கள்.
- தியானம் யோகப்பயிற்சி போன்றவற்றைச் செய்து மனதை அமைதியாக (Relax) வைத்திருங்கள்.
- தினமும் 30–45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உதாரணமாக வேகமாக நடப்பது, ஓடுவது, மிதிவண்டி ஓடுவது போன்றவை நல்லது. முதியோர் கை, கால்களை மடக்கி நீட்டி மூச்சுப்பயிற்சி செய்து தேகத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

**உணவில் உப்பைக் குறைக்கச் சில வழிமுறைகள்:–**

- உணவு சமைக்கும்போது குறைந்த அளவு உப்பைச் சேர்த்துக் கொள்ளுங்கள். முடிந்தால் உப்புச் சேர்ப்பதை ஓரளவு தவிருங்கள்.
- சோறு சமைக்கும் போதும் நூடில்ஸ், பிட்டு போன்றவைகளைத் தயாரிக்கும் போதும் உப்பு சேர்ப்பதைக் கூடிய அளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- கடலை,பயறு போன்றவற்றை அவித்துச் சாப்பிடும் போது உப்பு சேர்க்காதுவிட்டால் நல்லது. எனினும் கயர்த்தன்மை மாற்றமடை வதற்காக சிறிதளவு உப்பை உபயோகிக்கலாம்.
- ஊறுகாய்,அச்சாறு,உருளைக்கிழங்குப் பொரியல் (Chips) போன்ற அதிகம் உப்புள்ள உணவு வகைகளைத் தவிருங்கள்.
- பதப்படுத்தப்பட்ட உணவுகள், தயாரிக்கப்பட்ட உணவுகள் அதிக உப்புச் சேர்க்கப்பட்டவை அதனால் அவைகளைத் தவிர்த்தல் நல்லது.
- உணவுதயாரிக்கும் போது வெங்காயம், உள்ளி, இஞ்சி, கறிவேப்பிலை, மல்லித்தளை, புதினா போன்றவைகளைப் போதிய அளவு சேர்த்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் நீங்கள் தயாரிக்கும் உணவு உப்புக் குறைந்தாலும் சுவையாக இருக்கும்.

உயர் இரத்த அழுத்தத்தை மேலே கூறிய உணவுக் கட்டுப்பாடுகள் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவாருங்கள். நல்ல உணவுப் பழக்கத்தையும் நல்ல வாழ்க்கை முறையினையும் கடைப்பிடித்து உடல் ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்!.. உங்களை நல்ல சுக தேகிகளாகப் பார்ப்பதற்கு என்னைப்போன்ற இளம் சந்ததியினர் விரும்புகிறார்கள்!....

**செல்வி பா. தர்ஷினி**
**விஜயலக்ஷ்மி ஞாபகார்த்த சிறுவர் கழகம்**
**கீல்நகர் – ஜேர்மனி**

# சினிமாத் தலைப்புக்களால் சிறுகதைச் சித்திரம்

கேளடி கண்மணி கொஞ்சம் கணவனே கண்கண்ட தெய்வம், மணாளனே மங்கையின் பாக்கியம் நீ என்னைவிட்டுப் போகாதே மைதிலி என்னைக் காதலி. என் வாழ்க்கைப்படகில் இளமை ஊஞ்சலாடுகிறது. வாழ்க்கை ஒரு போராட்டம் அது ஒரு புரியாத புதிர். எதிர் நீச்சல் போட்டால் வானமே எல்லை. வெற்றி நம்பிக்கையில் அதிஸ்டம் அழைக்கின்றது அன்பே வா.அருகில் வா,காதல் படுத்தும் பாட்டால் மனம் ஒரு குரங்காகி மயங்குகின்றாள் ஒரு மாது. கலங்கா திரு மனமே. அஞ்சாதே நாளை நமதே. நீ வெகுளிப் பெண்ணா இல்லை புதுமைப் பெண்ணா..யாரடி நீ மோகினி இனி வரலாறாய் வாழ்ந்து காட்டுவோம். இருவர் உள்ளமும் இருமலராய் இணையும் போது கல்லும் கனியாகும். காவியத் தலைவி உன் தாமரை நெஞ்சத்தில் ஆயிரத்தில் ஒருவனாய் அணையாத தீபமாய் ஏன் இலட்சத்தில் ஒருவனாய் காதல் கொண்டேன்..

மதன மாளிகையா இல்லை வசந்த மாளிகையா வேண்டும் என்று செல்லமே உன் கன்னத்தில் முத்தமிட்டால் எனக்கு செவின் பு ரெயின்போ காலனியே மீண்ட சொர்க்கம் என்றாய். மாடி வீட்டு ஏழையாய் கை கொடுத்த தெய்வம் நீ என்பதால் நான் உன்னைச் சரணடைந்தேன். அன்பே ஆருயிரே நினைத்தாலே இனிக்கும் வண்ண வண்ணக் கனவுகள் சிட்டுக் குருவியாய் பட்டாம் பூச்சியாய் அலைபாயுதே. பஞ்சவர்ணக்கிளி, கொஞ்சும்கிளி, அன்னக்கிளி பல உண்டு. ஆனால் என் உறவைக் கார்த்த கிளி நீ. நம்நாட்டு வீரம் விளைஞ்ச மண்ணு. மாவீரன் கண் சிவந்தால் மண் சிவக்கும். விடுதலைத் தீ மூண்டு கண்பைட் காஞ்சனாக்களும் ரிவால்வர் ரீட்டாக்களும் கவரிமானாய் வாழும் தாய்நாடு ஒரு சிவந்த மண்.

எல்லோரும் நல்லவரே..ஒன்றாய் இருக்கக் கத்துக்கணும். என்று காந்தி,பாரதி, பெரியார் சொல்வதெல்லாம் உண்மையென ஏற்று அந்நியனை, கெட்டவனை, பக்தாத் திருடனை நாம் பங்காளி சொந்தக்காரன் ஆக்கிவிட்டோம். ஏழையின் சிரிப்பில், உழைக்கும் கரத்தில் புதிய பாதையில் நல்லதே நடக்கும். தர்மம் வெல்லும். அதுவரை நினைவெல்லாம் நீயே. சத்தியமாய் காத்திருப்பேன். உனக்காக மகாநதியாய் பொங்கிவரும் காவேரியாய் வசந்த அழைப்புக்களில் புதுப்புது அர்த்தங்கள் புயல் கடந்த பூமியாய், மனதுக்குள் மத்தாப்பாய் இதயத்தில் நீ. அந்த நினைவே ஒரு சங்கீதம். நாம் பிறந்த மண்ணில் வெற்றிக் கொடி கட்டும் அந்த நாள் நிச்சய தாம்பூலம். பூமாலை தாய்வீட்டுச் சீதனமாய் அரங்கேற்ற வேளை காணும் அந்தக் கல்யாண ஊர்வலத்தில் பல்லாண்டு வாழ்க என மனதார வாழ்த்துங்களேன்!...


திரு ப. பசுபதிராசா
ஜேர்மனி

## அறிவுக்களஞ்சியம் (படித்து அறிந்தவை)

**சர்வதேச குறியீடுகள்**

01–ஒலிவ் மரத்தின் இலை– சமாதானம்,அமைதி.
02–சிவப்புக்கொடி– புரட்சி,உலகத்தொழிலாளர் சங்க அமைப்புக்கள்.
03–அரைக்கம்பத்தில் கொடி– இரங்கல்
04–மேல்நோக்கிச் செங்குத்தான கொடி– வெற்றி, ஆரம்பம்.
05–கறுப்புக் கொடி– எதிர்ப்பு,துக்கம்.
06–கையில்,சட்டையில் கறுப்புத்துணி– துக்கம்.
07–வெள்ளைக் கொடி– சமாதானம், பௌத்தர்களின் துக்கம்.
08–மஞ்சள் கொடி– கப்பலில், மற்றும் தொற்று நோய்.
09–எலும்பு நடுவில் மண்டைஓடு– ஆபத்து.
10–தலைகீழாகக் கொடி– துன்பம்.
11–சுண்டுவிரலும் நடுவிரலும் சேர்த்து ஏ அடையாளம்– வெற்றி.
12–உடைந்த கை விலங்குகளுடன் இரு கைகள்– விடுதலை
13–சிவப்பு முக்கோணம்– குடும்பக்கட்டுப்பாடு.
14–தீப்பந்தம்– ஒலிம்பிக்.
15–செஞ்சிலுவை– செஞ்சிலுவைச் சங்கம்,மருத்துவமனை உதவி.
16–பச்சைவிளக்கு– சாதகம், அனுமதி.
17–வெண்புறா– சமாதானம், தூது.
18–செம்பிறை– அரபுநாடுகளின் செஞ்சிலுவைச்சங்கம்.
19–மஞ்சள் விளக்கு– ஆயத்தம்,தயார்நிலை.
20–சக்கரம்– வளர்ச்சியைக்குறிக்கும்.
21–தாமரை மலர்– பண்பாடு, நாகரீகம்.
22–சிவப்பு விளக்கு– மருத்துவமனை, ஆபத்து, நிறுத்து.
23–கையில் தராசு ஏந்திக் கண்கட்டப்பட்ட பெண்– நீதி.
24–சிலுவை அடையாளம்– கிறீஸ்த்துவம்.

**திருமதி ஜெயா. நடேசன்**
**ஜேர்மனி**



## ஆக்கதாரர்களே! படைப்பாளிகளே! எழுத்தாளர்களே!

தங்களின் ஆக்கங்கள், கலை,இலக்கிய, எழுத்துப் படைப்புக்களை மண் சஞ்சிகை வாசகர்களும் படித்துப் பயன்பெறக் காத்திருக்கிறார் கள்!... தயக்கம் வேண்டாம். எழுதிய அல்லது எழுதும் ஆக்கங் களை உடனடியாக எமக்கு அனுப்பி வையுங்கள் தொடர்ச்சியாக எழுதி இடம்பிடிக்கும் படைப்பாளிகள் மண் சஞ்சிகையின் 20வது ஆண்டு நிறைவு விழாவில் (2010 ஜனவரி) சிறப்புப் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்படுவார்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்!...

–ஆசிரியர்–

## ஒரு சிகரட்!.... (வெண்சுருட்டு)

ஒரு சிகரட் பற்றவைக்கப்பட்ட பிறகு அதிலிருந்து வரும் 75% புகை நேரடியாகக் காற்றில் கலக்கிறது. மீதமுள்ள 25% புகையைப் புகைப்பாளர் உள்ளிளுத்து அதில் பாதியை வெளியிடுகின்றார். எனவே ஏறத்தாள 80% வீதத்திலிருந்து 90மூ வரை சிகரட் புகையானது வெளிக்காற்றில் அடுத்தவர்களுடைய சுவாசிப்பிற்காக விடப்படுகிறது.

புகைப்பாளர் உள்ளிருக்கும் புகையால் புகையிலைத்தார்(நுரையீரல் புற்று நோய்க்குக் காரணமானது) காபன் மொனக்சைட் (ஒக்ஸிஸன் தட்டுப்பாட்டை உருவாக்கி மாரடைப்புக்கு வகை செய்வது) நிகோடின் (ஒரு அடிமைப் படுத்தக்கூடிய விஷம்) ஆகியவையையும் பல வகையைப்பட்ட வாயுக்களும் விஷங்களையும் முழுங்குகின்றார்.

மறுமுனைப் புகைப்பாளர் சுவாசிக்கும்போது காற்றில் கலந்துள்ள வெளியிடப்பட்ட சிகரெட் புகையை கழிவுகள் நீங்காத நிலையில் சுவாசிக்கின்றார். இதில் புகைப்பாளர் உள்ளிருக்கும் புகையைவிட அதிகமான அளவில் வீரியம் மிகுந்த நச்சுக்கள் உள்ளன. இதில் புகைப்பாளர் உள்ளிழுக்கும் புகையில் உள்ளது போன்று 2 மடங்கு அதிகமான புற்று நோய் உண்டாக்கும் வேதிப் பொருட்கள் கலந்துள்ளன.

## மறக்கமுடியா நாட்கள்

**12–04–1961:**
ரஷ்ஷியாவின் விண்வெளி வீரரான யூரிககாரின் விண் வெளிக்குச் சென்றார். உலகில் விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர் இவராவர்.

**15–04–1912:**
உலகிலேயே மிகப்பெரிய சொகுசுப் பிரயாணக்கப்பல் டைக்டானிக் பனிப் பாறையில் மோதி மூழ்கியது இதில் 1500 பேர்வரை பலியானார்கள்.

# பிணி தீர்க்கும் பழங்கள்

**மாம்பழம்:-**
தோல்வியாதி, சீதக்கோளாறு, நரம்புக்கோளாறு, மூலநோய் போன்ற நோய்களைக் குணப்படுத்தும். இதில் நார்ச்சத்து அதிகம்.

**வாழைப்பழம்:-**
மூளை வளர்ச்சி, உடற்சக்தி பெருக்கும். மலச்சிக்கல், பித்தம், மயக்கம் என்பனவற்றைப் போக்கும்.

**கொய்யாப்பழம்:-**
இருதய நோய், மலச்சிக்கல், வயிற்றுப்புண், அல்சர், பல்நோய், நீரழிவு உள்ளவர்கள் அதிகம் உண்ணவேண்டும்.

**அன்னாசிப்பழம்:-**
வயிற்றுப் பூச்சிகளைக் கொல்லும். மஞ்சள் காமாளை, உடல் வலியைப் போக்கவல்லது.

**அப்பிள்பழம்:-**
மூளை நோய், நரம்புத் தளர்ச்சி, மலச்சிக்கல் போன்றவைக்கு நல்லது.

**தக்காளிப்பழம்:-**
மூளைவளர்ச்சி தரும். சோகை நோய் குணமாகும். உடல் சூடு குறையும்.

**தோடம்பழம்:-**
தூக்கமின்மை, சொறி, சிரங்கு, படை, காசநோய் போன்ற நோய்களைப் போக்கும்.

**பேரீச்சம்பழம்:-**
சளி, இருமல், பித்தம், மயக்கம், இரத்தச்சுத்திகரிப்பு, இரத்தக்குறைவு, ஆண்மைக்குறைவு, இருதய நோய்கள் ஆகிய நோய்களைப் போக்கும்.

**மாதுளம்பழம்:-**
இரத்தக்குறைவு, நெஞ்சுவலி, எரிச்சல், பித்தம், சீதபேதி, வாந்திபேதி ஆகியவற்றிற்குச் சிறந்த நிவாரணி.

நமது உணவுப்பழக்கத்தில் மாமிச உணவுகளைத் தவிர்த்து காய்கறி, பழவகைகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்வோமானால் உடலாரோக்கியம் பெருகும். நீண்ட ஆயுளையும் பெற்றுவிடலாம்!...

## நாடுகளின் பழமொழிகள்

- ஒருவன் பக்கம் நியாயம் இருந்தது என்றால் செல்வத்திலும் செல்வாக்கிலும் மெலிந்தவர் கூட அவற்றில் பலம் மிகுந்த மனிதர்களை வென்றுவிடுகின்றனர். –ஜேர்மனி–
- மன உறுதி உள்ளவன் மிகப்பெரிய கஸ்டங்களைக்கூட எளிதாகத்தாண்டி வெற்றிபெற்றுவிடுகின்றான். –இங்கிலாந்து–
- எதைச் செய்தாலும் முன் எச்சரிக்கையாக முடிவைப்பற்றி எண்ணிப் பார்த்துச் செய்யுங்கள். –லத்தீன்–
- ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த அனுபவத்தைத் தவிர மற்ற எதையும் நம்புவதில்லை. –கிறீஸ்லாந்து–
- நல்லது எது என்று நன்கு தெரிந்திருந்தும் அதைச்செய்யாமல் விடுதல் கோழையின் குணமாகும். –சீனா–
- செல்வத்தைவிட செல்வாக்குத்தான் உயர்வானது. –அயர்லாந்து–
- இந்த வாழ்க்கை அபாயகரமான கடல் பயணம் போன்றது. மிகுந்த கவனத்துடன் சென்றால்தான் போகவேண்டிய கரையை சென்றடைய முடியும். –கிறீஸ்லாந்து–
- மெதுவாகச் செல்லுங்கள் தவறில்லை. இலட்சியத்தை உங்களால் அடைய முடியும். அதற்குத் தேவை ஊக்கம் மிகுந்த கவனமான உழைப்பு.–ஜேர்மனி–

**தொகுப்பு: திருமதி. சண்முகரட்ணம்**
**ஜேர்மனி**

## நூல் வெளியீடு

### „நிறங்கள்" சிறுகதைகளின் தொகுப்பு

ஜேர்மனிவாழ் தமிழ் எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப் பான „நிறங்கள்" என்னும் சிறுகதைகளின் தொகுப்பு ஜேர்மனியில் வெளியீடு செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகிறோம்... அன்றைய தினம் அவுஸ்த்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை தமிழ் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட அரும்பெரும் நூல்களும் அறிமுகமாகின்றன. 2009 யூலை மாதம் இந்த நிகழ்வு நடைபெறவிருக்கிறது என்பதை வாசகர்களுக்கும் கலை, இலக்கிய, எழுத்தாளப் பெருமக்களுக்கும் அறியத்தருகிறோம்! வெளி நாடுகளிலிருந்தும் பல தமிழிலக்கியவாதிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்!...

**தமிழ் எழுத்தாளர் சங்கம் ஜேர்மனி**
**தொடர்புகள்: 0203–8073898**
**02921–343137**

# டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகம்

ஜேர்மனி–டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் 18வது வருடாந்த பொதுக்கூட்டம் டியூஸ்பேர்க் சர்வதேசத்தவர் கூடும் மண்டபத்தில 15–03–2009 தேதி அன்று நடைபெற்றது. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம்..

| | |
|---|---|
| தலைவர் | – திரு.தா.கனகலிங்கம் |
| உபதலைவர் | – திரு.மா.உதயணன் |
| செயலாளர் | – திரு.ஸ்ரீஸ்கந்தராசா |
| உபசெயலாளர் | – திரு.லி.கிருபாகரன் |
| காசாளர் | – திரு.ந.கோபாலசிங்கம் |
| உதவிக்காசாளர்கள் | – திரு.கா.யோகரட்ணம் |
| | – திரு.அ.ஆனந்தராசா |
| வெளிக்கள விளையாட்டுத் | – திரு.செ.ஜெயராசா |
| தொடர்பாளர்கள் | – திரு.லி.கிருபாகரன் |
| நிர்வாக உறுப்பினர்கள் | – திரு.தா.யோகநாதன் |
| | – திரு.கா.யோகரட்ணம் |
| | – திரு.செ.ஜெயராசா |
| | – திரு.கு.இரத்தினசிங்கம் |
| | – திரு.த.சுபேந்திரன் |
| | – திரு.சி.ரவிக்குமார் |
| | – திரு.கா.கணேசன் |
| ஆலோசகர் | – திரு.வ.சிவராசா |

## போட்டி முடிவுகள்

டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் 18வது ஆண்டு நிறைவை யொட்டி கடந்த 2–05–2009ல் டியூஸ்பேர்க்கில் கரப்பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 18 தமிழர் விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்... வெற்றிக் கிண்ணங்களை தட்டிக்கொண்ட கழகங்கள்...

| | |
|---|---|
| **5 பேர் கொண்ட அணி:–** | 1 வது பரிசு –Switzerland- Zürich.A . அணியினர் |
| | 2 வது பரிசு –Mannheim .A. அணியினர் |
| | 3 வது பரிசு –Dortmund. B. அணியினர் |
| **4 பேர் கொண்ட அணி:–** | 1 வது பரிசு –தமிழ்நிலா.வி.க Herne அணியினர் |
| | 2 வது பரிசு –Switzerland Zürich.B. அணியினர் |
| | 3 வது பரிசு –Bochum அணியினர் |

**சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிசெய்யப்பட்டவர் (Super Star -Man of the Tournament)**

**செல்வன். கு–சந்தோஷ் (சுவீஸ்லாந்து – சூரிச் அணி)**

# ஆதரவற்றோர் உதவிநிதி

– ஆரம்ப இருப்பு 01–04–2009 + 848-35

அன்பளிப்புகள்:-

| | | |
|---|---|---|
| - செல்வன். மேனுஷா சிவபாலன் (பிறந்தநாள் அன்பளிப்பு) | - Solingen | + 20-00 |
| - செல்வன். விக்னேஷ்–பாஸ்கரன (பிறந்தநாள் அன்ளிப்பு) | - London | + 25-00 |
| - செல்வி. தனஞ்சயன்–பசுபதிராசா (பிறந்தநாள் அன்ளிப்பு) | - Wuppertal | + 35-00 |
| - செல்வன். பிரதீஸ்–சிறிமோகன் (பிறந்தநாள் அன்ளிப்பு) | - Düsseldorf | + 50-00 |
| - திருமதி. பி. சண்முகரத்தினம் | - Münster | + 20-00 |
| - திருமதி. தவராணி. கோபாலசிங்கம் (தந்தையார் நினைவு அன்பளிப்பு) | - Duisburg | + 50-00 |
| - திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் | - Duisburg | + 50-00 |
| - திரு. சாந்தலிங்கம். சிவகுமாரன் | - Pforzheim | + 20-00 |
| - செல்விகள். சாமினி, சாரணி–சிவதரன் (ஆதரவற்ற சிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Ransbeck | + 80-00 |
| - செல்வி. சிவதர்சினி–சிவராசா (ஆதரவற்ற சிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Duisburg | + 80-00 |
| - செல்வன்கள். ஆதர்ஷ். பிரதீஷ்–கமலநாதன் (ஆதரவற்ற சிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Switzerland | + 80-00 |
| - செல்வி. பவுத்திரா, செல்வன் விஷ்ணு–விஜயகௌரி (ஆதரவற்ற சிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Switzerland | + 80-00 |
| - செல்வி மைரா, செல்வன். றொபின் ராஜ (ஆதரவற்ற சிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு) | - Germany | + 80-00 |

+ 670-00 = + 670-00

+1518-35

அனுப்பியது:-

| | |
|---|---|
| ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம் வவுனியா | - 500-00 |
| வங்கிக்கட்டணம் | - 17-00 |
| 01.01.2009 — 31.03.2009 வங்கித்தரகு | - 25-04 |

- 542-04 = - 542-00

மீதி கையிருப்பு 15.03..09 + 976-31

இம்மாதம்அன்பளிப்புகள்வழங்கிய அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் இனிதான நன்றிகளையும், வாழ்த்துக்களையும் அன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.! தாயகத்தின் இன்றைய அவலங்களால் ஆதரவற்ற சிறார்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை நீங்கள் அறிவீர்களென நம்புகிறோம். எனவே ஒரு பிள்ளையின் செலவையாவது நீங்கள் பொறுப்பேற்று மனித நேயப்பணியில் எம்மோடு இணைந்து கரம்கொடுக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

–ஆசிரியர்–

Meldung nach §§ 59 ff. der Außenwirtschaftsverordnung (AWV)

Meldepflichtigen (Kontoinhaber)

52: An Kreditinstitut
Sparkasse Duisburg
Königstraße 23-25
47051 Duisburg

Bankleitzahl: 35050000
Konto-Nummer des Kontoinhabers/Einzahlers: 0225000421

Referenz des Kontoinhabers

Zahlung zu Lasten: 1 = Euro-Konto, 2 = Währungskonto. Keine Angabe bedeutet Zahlung zu Lasten des Euro-Kontos

32: Währung: Euro Betrag: 500-00

Zielland Version 000

50: Name des Kontoinhabers/Einzahlers: Mann (Erde) Verein e.V. Duisburg - Germany
Straße: Am Wiedhöve(?) 18 A
Postleitzahl: 47249 Ort: Duisburg - Germany

57: Bank des Begünstigten (bevorzugt als S.W.I.F.T.-Code) BIC (S.W.I.F.T.-Code): BCEYLKLX
Ist sowohl der S.W.I.F.T.-Code als auch Name und Anschrift der Bank ausgefüllt, wird die Zahlung gemäß S.W.I.F.T.-Code ausgeführt.

Name des Kreditinstituts: Bank of Ceylon
Straße: Main Road
Ort/Land: Vavuniya - Sri Lanka
IBAN bzw. Konto-Nr. des Begünstigten und Bank-Code (max. 34 Stellen): 0002364895
59: Name des Begünstigten: Sri Agilandeswary Arulakam
Straße: Kovilkulam
Ort/Land: Vavuniya - Srilanka
70: Verwendungszweck (nur für Begünstigten): Spende für Waisenkinderheim

Zusätzliche Weisungen für das Kreditinstitut (z. B. zum Weisungsschlüssel)

Ausführungsart (Keine Angabe bedeutet Standard): 0 = Standard (S.W.I.F.T.), 1 = Eilig (S.W.I.F.T.), 2 = Scheckziehung, 3 = Scheckziehung an Kontoinhaber. [0]

Weisungsschlüssel (Weisungen für Kreditinstitut): 1 = Avis an Bank des Begünstigten, 2 = Telefonavis an den Begünstigten, 3 = Telex-/Fax-Avis an den Begünstigten, 4 = Zahlung gegen Legitimation [1]

71: Entgeltregelung (Keine Angabe bedeutet alle Entgelte z.L. Kontoinhaber): 0 = Entgeltteilung eigenes Entgelt z.L. Kontoinhaber, fremdes Entgelt z.L. Begünstigten, 1 = alle Entgelte z.L. Kontoinhaber, 2 = alle Entgelte z.L. Begünstigten [0]

Bei Zahlungen zu Lasten Währungskonto Entgelte zu Lasten: 1 = Euro-Konto, 2 = Währungskonto (Ohne Weisung wird das zu belastende Konto angesprochen).

Bitte bevorzugt mit Schreibmaschine ausfüllen. Bei Handschrift sind Großbuchstaben zu verwenden.

**Meldung nach §§ 59 ff. der Außenwirtschaftsverordnung (AWV)**

**Befreiungen, Erläuterungen und Leistungsverzeichnis siehe Rückseiten**

**Die Zahlung erfolgte für:** Ggf. Zahlungsbetrag aufteilen. **1. Dienstleistungen, Übertragungen, Kapitaltransaktionen** Felder 105-111 ausfüllen. Kennzahlen anhand des Leistungsverzeichnisses angeben. **2. Transithandel** Feld 100 ankreuzen; Meldung auf Vordruck Z 4 einreichen.

105: Kennzahl | 106: Land (Erläuterungen beachten) | Länder-Code | 107: Betrag in o.g. Währung (nur anzugeben bei mehr als einem Zahlungszweck)

108: Kennzahl | 109: Land (Erläuterungen beachten) | Länder-Code | 110: Betrag in o.g. Währung (nur anzugeben bei mehr als einem Zahlungszweck)

111: Nähere Angaben zu den zugrunde liegenden Leistungen bzw. zum Grundgeschäft (ggf. mit weiteren Beträgen)

Firmennummer | Währung

Kontoführung/Sicherungsstempel

Datum: 07 05 2009
Telefon/Durchwahl: 0203 - 5073595

Unterschrift/Stempel

Sparkasse Duisburg

# SRI SHANMUGA GIRLS' HOME

## ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம்

54. Vidyalayam Road,
Trincomalee,
Srilanka.

☎:026-2222521

Date: 01/04/2009

திரு. சிவராஜா அவர்கட்கு

வணக்கம்.

தங்கள், 20.03.2009 ல் எழுதிய கடிதம் 31.03.2009 ல் கிடைக்கப் பெற்றோம். [illegible] நன்றி. [illegible]

400.00 Euro அனுப்பியிருந்தமைக்கு [illegible] Bank Remittance ல் 385.00 Euro அனுப்பியிருந்தீர்கள். அது [illegible] 56,480.17 ரூபா கிடைக்கப் பெற்றோம்.

[illegible]

[illegible]

இங்ஙனம்,

வி. நடராஜா

Mr.N.Pugendran, B.A(Hons)
Act.Managing Trustee

Miss.V.Nadarajah, B.sc
Custodian Trustee & Manageress

# Sri Shanmuga Girls Home

54, Vidyalayam Road,
Trincomalee, Sri Lanka.

**No.** 430

01 - 04 - 2009

Received with thanks from Mr. V. Sivarajah

Am Windhövel 18b, Germany

the sum of Rupees Fifty Five Thousand Four Hundred and Eighty and cent Seventeen

on account of donation for Home / Celebration / Building fund by

cash / Cheque / Mo.

**Rs.** 56,480.17

V. Nadarajah

Secretary & Manageress

## அன்பானவர்களே!...

தாயகத்தின் பல்வேறு நெருக்கடிகளோடு வாழ்ந்துகொண்டிருக்கும் ஆதரவற்ற சிறார்களின் உதவும் பணிகளுக்காக இதுவரை 11 புலம்பெயர்வாழ் சிறுவர்களும்,யுவதிகளும் எம்மோடு இணைந்து தம் பங்களிப்பை செய்துவருகிறார்கள் என்பதை வாசகப் பெரு மக்களுக்கு அறியத்தருகிறோம். மனிதநேயம் மிக்க சிறார்களையும், பெற்றோர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம். எனவே இத்திட்டத்திற்கு நீங்களும் உதவலாம்...ஒரு பிள்ளையின் வாழ்வுக் காலம் அதாவது படித்துச் சுயமாக வேலைசெய்து உழைத்து வாழும்வரை ஏற்படும் வருடாந்தச் செலவு 480–00 யூரோ அல்லது அந்தப் பிள்ளை உயர்வகுப்புப் படிக்க ஏற்படும் வருடாந்தச் கல்விச்செலவு 200–00 யூரோவையாவது ஏற்று உதவிக்கொள்ளலாம். எனவே இத்திட்டத்திற்கு உதவ விரும்புவோர் எம்மோடு தொடர்பு கொண்டால் அதற்குரிய மேலதிக தகவல்கள் தரப்படும்.. உங்கள் பிள்ளைகளைப் போல் உங்கள் உறவுகளைப்போல் இப்பிள்ளை களையும் நேசியுங்கள்!.. காப்பாற்றுங்கள்!.. உதவிக்கரம் கொடுங் கள்!...

இளம் சிறார்களை கருணை உள்ளத்துடன பாதுகாப்போம்!
May we protect tender hearted children with Compassion!

பிள்ளை ஒருவரின் வருடாந்த வாழ்க்கைச்செலவைப்பொறுப்பேற்றல்: 480–00 யூரோ.

பிள்ளை ஒருவரின் வருடாந்த கல்விச்செலவைப் பொறுப்பேற்றல்: 200–00 யூரோ.

ஆசிரியர்
மண் சஞ்சிகை

# மனித நேயப்பணியில் இணைந்து கொண்டவர்கள்

தாயகத்தின் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் பணிகளில் மண் சஞ்சிகையின் தொடர்பணிகளோடு இணைந்து இதுவரை கரம் கொடுத்துள்ள அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகிறோம்... தாயகத்தின் ஆதரவற்ற பிள்ளைகளின் வாழ் நாள் செலவையும் வாழ் நாள் கல்விச் செலவையும் 2008 ஜனவரி முதல் பொறுப்பேற்று உதவ முன்வந்துள்ள அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்தி நன்றி கூறுகிறோம். எனவே நீங்களும் இந்த மனித நேயப் பணிகளோடு இணைந்து உங்களாலான நிதியுதவியையும் நல்கித் தாயக ஆதரவற்றோரின் வாழ்வை வளம்படுத்த முன் வாரீர் என அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!.....

இதுவரை இணைந்து கொண்டவர்கள்:-

1. செல்விகள். சாமினி, சாரனி சிவதரன் –ஜேர்மனி – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–வவுனியா)

2. செல்வி.பிரிந்தாவனி. ஏகானந்தராசா–ஜேர்மனி – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–கிளிநொச்சி)

3. செல்வி. சிவதர்சினி.சிவராசா – ஜேர்மனி – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–வவுனியா)

4. செல்வி. சுகிர்தா. தவராஜ் –ஜேர்மனி – 100–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு–கிளிநொச்சி)

5. செல்வி. டெய்சிகா . அமரேசன் – டென்மார்க் – 100–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு–கிளிநொச்சி)

6. செல்வி. நிவேதா. விஜயதாஸ் – டென்மார்க் – 100–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு–மட்டக்களப்பு)

7. செல்வன். ஆதர்ஷ், பிரதிஷ் கமலநாதன் – சுவிஸ் – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–கிளிநொச்சி)

8. செல்வன். விஷ்ணு, செல்வி. பவுத்ரா விஜயகௌரி – சுவிஸ் – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–கிளிநொச்சி)

9. செல்வன். றோபின், செல்வி. மைரா ராஜூ – ஜேர்மனி – 480–00 யூரோ
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு–திருகோணமலை)

# வன்னி அவலங்கள்















G. Pathmakunaseelan
Vijayaluxmi Memorial Childrens Club
Ostring 113
24143 Kiel
Germany













**19 வது ஆண்டில் உங்கள் மண் சஞ்சிகை!...**
**தொடரும் கலை, இலக்கிய, எழுத்து,**
**சமூகப் பணிகளுடன்**

**ஒன்றிணைந்திடுங்கள்!...**

Germany

# ERDE

Ausgabe 135

2009



வன்னி நிலவரம்

கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

Wissen+Kultur+Literatur / zweimonatige Ausgabe



வருட சந்தா ஜேர்மனி 15€

ஏனைய நாடுகள் 20€

http://mann-erde.com